உதயன்

www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 011 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை (07/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00




# பயங்கரவாத பொலிஸாரின் திடீர் கைது நேற்றும் நீடிப்பு

## மூன்று நாள்களில் 25 பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ். குடாநாட்டில் கடந்த மூன்று தினங்களில் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 பேராக உயர்ந்துள்ளது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் என்ற சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

பொலிஸாரின் இந்த அதிரடியான நடவடிக்கையால் யாழில் பெரும் பதற்றம் நிலவி வருகின்றது. அத்துடன், காரணம் தெரிவிக்கப்படாமல் இடம்பெற்று வருகின்ற இந்தக் கைது நடவடிக்கையால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் அதிகாரிகள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். 10 பேரே கைது

பார்க்க பக்கம் 4

# இலங்கை போர் விவகாரம்; ஐ.நாவில் மற்றொரு குழு

கொழும்பு, டிசெ.7

இறுதிப்போரின்போது ஐக்கியநாடுகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட சாள்ஸ் பெட்றி குழுவின் உள்ளக அறிக்கையை மதிப்பீடு செய்து, அதன் பரிந்துரைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கென புதிய குழு ஒன்றை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்துள்ளார்.

ஐ.நாவின் பிரதிச்செயலர் ஜான் எலியாசனை இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கும்படி கேட்கப்பட்டுள்ளது என ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெர்ஸகி நியூயோர்க்கில் நேற்று செய்தியாளர்களிடம்

பார்க்க பக்கம் 4

# மேலும் 6 மாணவர்கள் கைது யாழ்.குடாநாட்டில் பதற்றம்

## ஏற்கனவே கைதான மூவரும் தொடர்ந்து தடுப்பில்

யாழ்ப்பாணம்,டிசெம்பர்.7

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கற்கும் மேலும் 6 மாணவர்கள் நேற்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் மருத்துவ பீடத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்தவர்.

பெற்றோர் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற இவர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் மாணவர்கள் கைது குறித்த எந்தத் தகவலும் தனக்குக்கிடைக்கவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி நேற்று மாலை தெரிவித்தார்.

ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 மாணவர்களுக்கு மேலதிகமாக 6 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை யாழ். குடாநாட்டில் கடும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் பல்கலைக்கழகத்தின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்படும் வரை கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் சூழல் இருக்காது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முன்னர் அறிவித்திருந்தது. இந்த நிலையில் நேற்றைய கைதுகள் இடம்பெற்றுள்ளன.

### 10 மாணவர்களை தேடியது பொலிஸ்

மாணவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையை யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் உயர் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார். தனது பெயர் வெளியிடப்படுவதை அவர் விரும்பவில்லை.

அவர் தெரிவித்ததாவது:-

''யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேரை விசாரணைக்கு வருமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் இன்று [நேற்று] அழைப்பு விடுத்திருந்தனர். இது தொடர்பான அறிவிப்பு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஐவர், முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவர், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த மூவரின் பெயர்கள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருந்தன.

இந்தநிலையில், பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 10 மாணவர்களையும் பெற்றோருடன் விசாரணைக்குச் செல்லுமாறு யாழ்.

பார்க்க பக்கம் 4

# 13+ பற்றிய உண்மையைச் சொல்ல அரசு 3 மாத கால அவகாசம் கேட்பு

கொழும்பு, டிசெ.7

தேசிய இனப்பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால்(13 பிளஸ்) தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதாக இலங்கை ஜனாதிபதியால் கூறப்பட்டது என இந்திய வெளிவிவகார அமைச்சரால் வெளியிடப்பட்ட கூற்றில் உண்மையுள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளிக்க நேற்று சபையில் மூன்று மாதகால அவகாசம் கோரியது அரசு.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது தேசிய இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, கேள்விக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தார். பிரதமரும் புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ணவிடம்

பார்க்க பக்கம் 4

## பல்கலை மாணவர் விவகாரம் ஐ.நா. சபை வரை சென்றது

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதலைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னால் புலம்பெயர் தமிழர்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றையும் போராட்டக்காரர்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் நேரில் கையளித்துள்ளனர்.

சுவிற்சர்லாந்து தமிழ் இளையோர் அமைப்பின்

பார்க்க பக்கம் 4

# கேள்விகளால் வேள்வி; மூண்டது சொற்போர்

## அரசு - எதிரணி நேரடி சண்டை

கொழும்பு, டிசெ.7

நாடாளுமன்றத்தில் நேற்று அமைச்சர் விமல் வீரவன்ஸ உரையாற்றிக்கொண்டிருக்கையில் ஏற்பட்ட சர்ச்சையால் ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் கடும் சொற்போர் ஏற்பட்டதுடன், சூடான வாதப்

பார்க்க பக்கம் 4

# அரசு ஒழுங்காகச் செயற்படின் தமிழ் ஊடகங்கள் விமர்சிக்கா

## சபையில் கூட்டமைப்பு இடித்துரைப்பு

கொழும்பு, டிசெ.7

ஆழிப்பேரலையாலும் போரினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் மனதை வெல்லக்கூடிய வகையில் அரசு செயற்பட்டால் தமிழ் ஊடகங்கள் ஒருபோதும் அரசை விமர்சிக்கா என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்

பார்க்க பக்கம் 4

# நீதிமன்றத் தாக்குதல்; 6 பேருக்குப் பிணை

மன்னார், டிசெ.7

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 7 சந்தேக நபர்களில் 6 பேரை நேற்று வியாழக்கிழமை மன்னார் மேல் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்

பார்க்க பக்கம் 4

# வெட்டுக் காயத்துடன் ஆணின் சடலம் மீட்பு

## கொக்குவில் பகுதியில் நேற்றிரவு பயங்கரம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

கொக்குவில் பகுதியில் நடுத்தர வயது ஆண் ஒருவரின் சடலம் நேற்றிரவு வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

இறந்தவர் யார் என நேற்றிரவு வரை அடையாளம் காணப்படவில்லை. அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இரவு 8 மணியளவில் அந்த இடத்திற்குச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர்.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் குளத்தடியில் சடலம் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சடலத்தின் முகத்தில் வெட்டுக் காயங்கள் காணப்

பார்க்க பக்கம் 4

# தெரிவுக்குழு விசாரணையிலிருந்து ஷிராணி நேற்று திடீர் வெளிநடப்பு

கொழும்பு, டிசெ. 7

தன் மீதான விசாரணையை மேற்கொண்டிருக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளிலிருந்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நேற்று வியாழக்கிழமை வெளிநடப்புச் செய்தார்.

நேற்றைய விசாரணையின்போது பலபக்க ஆவணங்களை ஷிராணி பண்டாரநாயக்கவிடம் கொடுத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அவை அனைத்தையும்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்மதி தொடர்பிலான உண்மையை நாடாளுமன்றில் பகிரங்கப்படுத்துக!

## நாடாளுமன்றில் ரணில் கோரிக்கை

கொழும்பு, டிசெ.7

'சுப்ரீம் செட் 1' என்ற பெயரில் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ள தொலைத்தொடர்பு செய்மதி தொடர்பான உண்மைத்தன்மையை அரசு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அதன் பங்காளிகள் யார், அதில் இலங்கைக்கு உள்ள பங்கு என்ன? - இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க . இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது-

உள்நாட்டு ஊடகங்கள் கடந்த 27.11.2012 ஆம் திகதி இலங்கை தனது முதலாவது தொலைத்தொடர்பு செய்மதியான 'சுப்ரீம் செட் 1' ஐ வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பியுள்ளது என்று செய்திகளை வெளியிட்டுள்ளன.

அதேவேளை, வெளிநாட்டு ஊடகங்கள் 'சைனா செட் - 12' என்ற செய்மதியை விண்வெளிக்கு அனுப்பி வைத்துள்ளது என்று செய்திகளை வெளியிட்டுள்ளன.

இப்படியான ஒரு நிலையில் இலங்கைக்காக சீன உதவியுடனேயே இந்த 'சுப்ரீம் செட் 1' ஏவப்பட்டுள்ளதாகவும்,

இலங்கை முதலீட்டு சபையின் ஒரு நிறுவனமான 'சுப்ரீம் செட்' வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் சைனா கிரேட்வோல் கைத்தொழில் கூட்டுத்தாபனத்துடன் பங்கு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சர்வதேச தொலைத்தொடர்பு அமைப்பால் செய்மதிகள் செயற்படுத்தப்படும் வான் பரப்புகள் தொடர்பான நடைமுறைத்திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது.

இலங்கையும் அதற்கு அமைவாகவே செயற்பட வேண்டிய கடப்பாடுடையது என்பதும் குறிப்பிடத்தக்கது. விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ள செய்மதியில் இலங்கைக்கான உரித்துடமை தொடர்பாகத் தெளிவின்றி இருக்கின்றது.

எனவே, இந்த 'சுப்ரீம் செட் 1' செய்மதி தொடர்பான முழு விவரங்களையும் இந்தச் சபையில் அரசு வெளியிடவேண்டும்.

* செய்மதி செயற்படுவதற்காக இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட வான் ஓடுபாதைப் பரப்பு எவ்வளவு? எவ்வாறு, எந்த அடிப்படையில் இது ஒதுக்கப்பட்டுள்ளது?
* 'சைனா செட் - 12' செய்மதி இலங்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வான் ஓடுபாதை அல்லது வேறு நாடுகளுக்காக ஓடுபாதைகளைப் பயன்படுத்தும் விதம்.
* 'சுப்ரீம் செட் 1' செய்மதியை விண்வெளிக்கு அனுப்புவதற்கு ஏற்பட்ட மொத்த செலவினம் எவ்வளவு? எவ்வாறு இதனை மீளப்பெறுவது?
* 'சுப்ரீம் செட் 1' வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் பங்குதாரர்கள் யார்? அவர்களுடைய பின்புலம் என்ன?
* 'சுப்ரீம் செட் 1' தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் யார்?
* 'சுப்ரீம் செட் 1'' நிறுவனத்தின் எதிர்காலத்திட்டம் என்ன? இதனை இலங்கை அரசு அறியுமா?
* 'சைனா செட் - 12' செய்மதியின் சேவைகளைப் பெறும்போது அதன் தொடர்பாளர்கள் யார்?

இவை தொடர்பாக ஒரு தெளிவின்மை காணப்படுவதால் இவ்விடயம் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களையும் கீழ்க்கண்ட விவரங்களையும் இந்தச் சபையில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அ. முதலீட்டு சபை மற்றும் 'சுப்ரீம் செட் 1' நிறுவனம் தொடர்பான விவரங்கள்.

ஆ. சைனா கிரேட் வோல் கைத்தொழில் கூட்டுத்தாபனத்திற்கும் 'சுப்ரீம் செட் 1' நிறுவனத்திற்கும் இடையிலான தொடர்புகள்.

இ. இலங்கை அரசுக்கும் 'சுப்ரீம் செட் 1' நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தம்.

ஈ. இத்திட்டம் தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ள எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கும் ஆவணங்கள்.

என்பனவற்றையும் இவற்றிற்கு இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் நகல்களையும் இந்தச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

'சுப்ரீம் செட் 1' செய்மதி தொடர்பான முழு அறிக்கை ஒன்றை எதிர்வரும் எட்டாம் திகதி இந்தச் சபையில் சமர்ப்பிப்பதாக சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா உறுதியளித்தார். (ங-சி)

### முதலாவது மருந்தாளர் காலமானார்

யாழ்ப்பாணம், டிசெ.7

இலங்கை அரச சேவையின் முதலாவது மருந்தாளரான சின்னத்துரை கந்தசாமி (வயது -75) கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புத்தளத்தில் காலமானார் என்று அரச மருந்தாளர் சங்கம் அறிவித்துள்ளது.

வட்டுக்கோட்டையில் பிறந்த இவர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கல்வி கற்றிருந்தார். 1957 இல் மருந்தாளர் சேவையில் இணைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் (முதல்நியமனம்), பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சேவையாற்றி கொழும்பு தேசிய மருந்து தர நிர்ணய ஆய்வு கூடத்தில் விசேட தர பிரதம மருந்தாளராகக் கடமையாற்றி இளைப்பாறினார்.

அரச மருந்தாளர் சங்கத்தின் நிறுவுனரான இவர் முதல் பொதுச் செயலாளராக செயற்பட்டு சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டவர் ஆவார். (ஓ)

### பொலிஸுக்குப் பயந்து பறந்த 'ஹைற–ஏஸ் மோதித் தள்ளியது தாயையும் மகனையும்

வலி. வடக்கு, டிசெ. 7

பொலிஸாருக்குப் பயந்து மின்னல் வேகத்தில் பறந்த ''ஹைற-ஏஸ்'' வாகனத்தில் மோதுண்டு 4 வயதுக் குழந்தையும், தாயும் படுகாயமடைந்தனர்.

மல்லாகம் சந்தியில் நேற்று மாலை 6 மணியளவில் இடம் பெற்ற இந்த விபத்தில் ஆர்.விஷால் (வயது-4), ஆர்.கலைச்செல்வி (வயது-32) ஆகியோரே ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மல்லாகம் நோக்கி வந்த குறித்த ஹைற-ஏஸ் வாகனம் மல்லாகம் சந்தியில் நின்ற பொலிஸாரைக்கண்டவுடன் மின்னல் வேகத்தில் நீதிமன்ற வீதியூடாகப் பறந்தது.

அதன்போது வீதியின் அருகே இருந்த தபால் பெட்டியுடன் மோதுண்ட குறித்த ஹைற-ஏஸ் எதிரே சைக்கிளில் வந்துகொண்டிருந்த குழந்தையையும் தாயையும் மோதித் தள்ளியது. பின்னர் அருகில் இருந்த மதிலை உடைத்து உள்ளே சென்ற பின்னரே ஹைற-ஏஸ் வாகனத்தின் வேகம் அடங்கியது.

இதன் பின்னர் வாகனத்தின் சில்லின் கீழ் இருந்து நான்கு வயதுடைய குழந்தை பலத்த சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டுள்ளான். பலத்த காயங்களுடன் மதில் ஓரமாக தூக்கி வீசப்பட்டிருந்த தாயும், குழந்தையும் உடனடியாக தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

சில்லின் கீழ் இருந்து நான்கு வயதுடைய குழந்தை பலத்த சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டுள்ளான்.

பின்னர் அங்கிருந்து அவர்கள் இருவரும் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

மல்லாகம் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த தெல்லிப்பழை பொலிஸார் உடனடியாக சாரதியை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்க் கொண்டு வருகின்றனர்.

குறித்த ஹைற-ஏஸ் வாகனம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. (ங-86)

# தெரிவுக்குழு விசாரணையின் போது ஊடகங்களை அனுமதிக்கலாமா?

## அரச - எதிர்த்தரப்பினர் சபையில் மோதல்

கொழும்பு, டிசெ.7

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் விவகாரங்கள் தொடர்பான தெரிவுக்குழு விசாரணைகளின்போது ஊடகவியலாளர்களை அனுமதிக்கலாமா, அனுமதிக்கக்கூடாதா என்ற விவகாரத்தால் நாடாளுமன்றம் நேற்றுப் பெரும் அமளிதுமளிப்பட்டது.

தெரிவுக்குழுவின் தலைவரும், சுற்றாடல்துறைகள் அமைச்சருமான பிரியதர்ஷன யாப்பா இந்த விடயம் தொடர்பாக ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

'' நாடாளுமன்ற ஒழுங்கு விதிகள் மற்றும் நிலையியற் கட்டளைகளின்படி தெரிவுக் குழுக்களில் இடம்பெறும் விடயங்கள் மற்றும் விசாரணைகள் முற்றுப்பெற்று அறிக்கையிடும் வரை எந்த ஒரு விடயமும் வெளியிடப்படக் கூடாது.

தெரிவுக்குழுவின் இரகசியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், சில ஊடகங்களில் பிரதம நீதியரசர் தொடர்பாகத் தெரிவுக்குழுவில் இடம்பெறும் அனைத்து விடயங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தெரிவுக்குழுவில் இடம்பெறும் சம்பவங்கள் எப்படி ஊடகங்களைச் சென்றடைகின்றன? அனைவரும் நிலையியற் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவேண்டிய கடப்பாடு ஒன்று உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கான நெறிமுறைகளை சபாநாயகர் ஊடகங்களுக்கு அறிவிக்கவேண்டும்'' என்று பிரியதர்ஷன யாப்பா கேட்டுக் கொண்டார்.

### அனுமதித்தால் தவறில்லை

எதிர்க்கட்சி உறுப்பினர் சஜித் பிரேமதாஸ இந்த விடயம் தொடர்பாகக் கருத்துக் கூறும்போது, ''ஊடகவியலாளர்கள் தெரிவுக்குழு நடவடிக்கைகள் தொடர்பாக நேரடியாகத் தகவல்களைச் சேகரிக்க இடமளித்தால் உண்மையான செய்திகளை வெளியிட வசதியாக இருக்கும். வெளிவரும் செய்திகளுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாடும் ஏற்படும். பொறுப்புடன் செயற்படுவார்கள். எனவே, ஊடகவியலாளர்களை அனுமதிப்பதில் தவறு இல்லை '' என்றார்.

### ஊடகங்களுக்குத் தவறான தகவல் கொடுக்கக்கூடாது

அதற்கு பதிலடி கொடுப்பது போல பேசினார் வீடமைப்பு நிர்மாணத்துறைகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

''நான் ஊடகங்களுக்கு எதிரானவன் அல்லன். ஆளும் தரப்பில் அமைச்சராக இருந்தாலும் கூட எனக்கு எது நியாயம் என்று படுகிறதோ அதனை மறைக்காமல் வெளிப்படுத்துவேன். தெரிவுக்குழுவில் அல்லது அதன் செயற்பாட்டில் தவறுகள் காணப்படின் தெரிவுக்குழு உறுப்பினர்கள் அவற்றை நேரடியாகக் குழுவின் முன் தெரிவிக்கலாம்.

இன்று வெளிவந்துள்ள பத்திரிகை ஒன்றில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இருவர் தெரிவுக்குழுவில் இருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளனர் என்று செய்தி வெளியாகியுள்ளது. இவ்வாறு ஊடகங்களுக்குத் தவறான தகவல்களை வழங்கக்கூடாது'' என்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

### இது தவறு என்கிறார் ஜோன் அமரதுங்க

அமைச்சரின் கூற்றை மறுத்தார் எதிர்க்கட்சி உறுப்பினரான ஜோன் அமரதுங்க. ''தெரிவுக்குழுவில் நான் (ஜோன் அமரதுங்க), லக்ஷ்மன் கிரியெல்ல, இரா.சம்பந்தன், விஜித ஹேரத் ஆகியோர் இடம்பெற்றுள்ளோம். எங்களில் ஒருவராவது தெரிவுக்குழுவில் இருந்து விலகிக் கொள்வதாகக் கூறவில்லை. இந்தச் செய்தி தவறானது. ஆனால், ஈ நியூஸ் என்ற இணையதளம் ஒன்று பிரதம நீதியரசர் தொடர்பான விசாரணைகளின் அனைத்து விடயங்களையும் விலாவாரியாக செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் பரிசீலனை செய்யவேண்டும். எம்மீது சேறு பூசக்கூடாது'' என்றார் ஜோன் அமரதுங்க.

இரு தரப்பினரது கூற்றுகளையும் அவதானித்த பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி இவ்விடயம் சபாநாயகரின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என சபையில் தெரிவித்தார். (ங-சி)

### "ஹைற—ஏஸ்" பந்தாடியதில் படுகாயமடைந்தார் மாணவி

வீதியில் சென்றுகொண்டிருந்த மாணவியை வேகமாக வந்த ''ஹைற-ஏஸ்'' வாகனம் ஒன்று மோதித் தள்ளியதில் அந்த மாணவி படுகாயங்களுக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் ஏழாலை பூதராயர் கோயில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி பயிலும் சிறீதரன் தனுஷ்ரிகா (வயது-10) என்பவரே இதன் போது காயமடைந்தவராவார்.

பாடசாலைத் தேவைக்காக குறித்த மாணவியை வகுப்பாசிரியர் சீனி வாங்கி வரும்படி வெளியே அனுப்பியுள்ளார். அதற்கமைய கடையை நோக்கி குறித்த மாணவி சென்றுகொண்டிருந்த போதே வேகமாக வந்த ''ஹைற-ஏஸ்'' வாகனம் அவரைப் பந்தாடியது.

சிறுமி மீது வாகனம் மோதியவுடன் அதனைச் செலுத்தி வந்த சாரதி தப்பிஓட முனைந்த போதும் பொதுமக்கள் அவரை மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலிஸில் ஒப்படைத்தனர். காயமடைந்த சிறுமி தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ங-36)

### பல்கலைக்கழகத்துக்கு முன்பாக மூன்று சோதனை நிலையங்கள்

வலி.வடக்கு, டிசெ.7

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இராமநாதன் வீதியில் பொலிஸார் மூன்று சோதனை நிலையங்களை அமைத்துள்ளனர். கடந்த இரண்டு நாள்களுக்குள் இந்த மூன்று சோதனை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழகப் பிரதான வாயில், விஞ்ஞான பீட வாயில், மாணவிகளின் ஆனந்தக்குமாரசுவாமி விடுதி ஆகியவற்றுக்கு முன்னாலேயே இந்தச் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன


இந்த, வீதியினூடாகப் பயணிப்பவர்கள் இந்தச் சோதனை நிலையங்களில் கடமையில் இருக்கும் பொலிஸாரினால் சோதனை செய்யப்படுகின்றனர். (த-86)

### பல்கலை ஆசிரியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு கலைப்பீட பொதுச் சபையில் இடம்பெறவுள்ளதாக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் அறிவித்துள்ளார். (உ-5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் வரும் பெரியகுளம் நீர் நிறைந்த நிலையில் காணப்படுகின்றது. (க-415)

# தமிழ் மீனவர்கள் 381 பேருக்கு எரிபொருள் மானிய முத்திரைகள்

## முல்லை கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் தகவல்

முல்லைத்தீவு,டிசெ.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் 381 தமிழ் மீனவர்களுக்கு எரிபொருள் மானிய முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட படகுகளுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. இங்கு மீள் குடியமர்த்தப்பட்ட சிங்கள் மீனவர்களும், தமிழ் மீனவர்களும் கடலில் தொழில் செய்து வருகின்றனர்.

எரிபொருள் மானியத்தில் தமிழர், சிங்களவர் என்ற பாகுபாடுஇன்றிப் பதிவு செய்யப்பட்ட படகுகளுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 564 மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 183 சிங்கள மீனவர்களும், 381 தமிழ் மீனவர்களும் உள்ளடங்குகின்றனர்.

183 சிங்கள மீனவர்களில் 19 பேர் நாயாறு பகுதிகளையும், 164 பேர் கொக்கிளாய் பகுதியையும் சேர்ந்தவர்கள். இந்த மீனவர்கள் 1985 ஆம் ஆண்டு அமைச்சினால் பதிவு செய்யப்பட்டவர்கள். இவர்கள் தற்போது அனுமதி பெற்று தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-13)

# பெண்கள் வன்முறைக்கு எதிராக துணுக்காயில் நேற்றுப் பேரணி

## வெள்ளைப்பட்டி, பதாகைகளுடன் நூற்றுக்கணக்கானோர் அணிவகுப்பு

துணுக்காய், டிசெ.7

பெண்கள் வன்முறைக்கு எதிரான அமைதிப் பேரணி துணுக்காய் பிரதேசத்தில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் வன்முறைக்கெதிரான இந்த அமைதிப் பேரணி, மல்லாவி மத்திய கல்லூரியில் இருந்து நேற்றைய தினம் காலை 9.30 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தலைமையில் ஆரம்பமானது.

அமைதிப் பேரணி மல்லாவி வண்ணன் விளையாட்டு மைதானத்தில் நிறைவு பெற்றது. இந்தப் பேரணியின் போது தெரு நாடகமும் இடம் பெற்றது.

நவம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10 ஆம் திகதி வரையும் பெண்கள் வன்முறைக்கு எதிரான தினங்களாக அனுஷ்டிக்கப்படுவதால் இதனை ஏனையோருக்கு எடுத்துக் காட்டும் முகமாக இந்த அமைதிப் பேரணி இடம்பெற்றது. இதில் 200இக்கும் அதிகமான பெண்கள் வெள்ளைப்பட்டி அணிந்து பதாகைகளையும் கையில் ஏந்தியவாறு காணப்பட்டனர்.

பேரணிக்கு மல்லாவி பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்கினர்.

மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் பிரதேச செயலர் பிரிவிலும் நேற்றைய தினம் பிரதேச செயலர் ஐ.பிரிந்தாகரன் தலைமையில் இவ்வாறான அமைதிப் பேரணி பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில் இருந்து பிரதேச செயலகம் வரையும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-415)

# புதிதாக அமைக்கப்பட்ட வீதியின் தற்போதைய நிலை இது தான்

## சரியான முறையில் போடப்படாததே காரணம்



கொல்லவிளாங்குளம் வீதியின் அவலம்

துணுக்காய்,டிசெ.7

அண்மையில் தார்ச் வீதியாக அமைக்கப்பட்ட கொல்லவிளாங்குளம் வீதி தற்போது குன்றும் குழியுமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதி அண்மையில்தான் கற்கள் பரவப்பட்ட தார் வீதியாக அமைக்கப்பட்டது. ஆனால் இங்கு பெய்த மழையைத் தொடர்ந்து கற்கள் அள்ளுண்ட நிலையில் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது.

இதனால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் பயணிக்கும் வாகனங்கள் பழுதடைவதையும் காண முடிகின்றது.

சுமார் 200 மீற்றர் நீளத்துக்கும் மேலாக இந்த வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

தற்போது மழைபெய்து வருவதால் இது மேலும் சேதமடைவதற்கான சாத்தியம் உண்டு.

இந்த வீதி உரிய வகையில் தாரிட்டு அமைக்கப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்று பிரதேச மக்கள் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றனர். (க-415)

# முள்ளியவளை வித்தியாலய பொன்விழா நிகழ்வு திங்களன்று

முள்ளியவளை, டிசெ.7

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.இராஜ்குமார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளரான, ச.கனகரத்தினம், சட்டத்தரணி த.பரஞ்சோதி, துணுக்காய் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலன், முல்லைத்தீவு திட்டப்பணிப்பாளர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி, பிரதேச இராணுவ அதிகாரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்த விழா தொடர்பாக வெளியிடப்படும் நூல் ஆய்வுரையை இந்தப் பாடசாலையின் பழைய மாணவனும், யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளருமான க.அருந்தாகரன் நிகழ்த்தவுள்ளார். (க-433)

# தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு மாணவர்களுக்குக் கௌரவம்

## அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயத்தில் வைபவம்


துணுக்காய்,டிசெ.7

துணுக்காய் அனிஞ்சியன் குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 3 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் 2008 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டுவரை தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மங்கலவிளக்கை மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.தனிநாயகம் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து ஏனைய விருந்தினர்கள் மங்கல விளக்கை ஏற்றிவைத்தனர்.

மேலும் தேசியக் கொடியையும் மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தலைவர் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியை அதிபர் ஏற்றி வைத்தார்.



இந்த நிகழ்வில் 2008 ஆம் ஆண்டிலிருந்து தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 14 மாணவர்களுக்கு தங்கப் பதக் கங்கள் அணிவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் 2008 ஆம் ஆண்டிலிருந்து தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 14 மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

மேலும் 100 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு வெள்ளிப்பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

மேலும் இந்த ஆண்டு இடம்பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவர்களுக்கு சிறு தொகைப் பணமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-415)

# வவுனியாவில் ஞாயிறன்று நாவலர் பெருவிழா

## தமிழ்ச் சங்கத்தினர் ஏற்பாடு

வவுனியா, டிசெ.7

வவுனியாவில் நாவலர் விழாவை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லைநகர் ஆறுமுக நாவலரின் சைவத்தமிழ்த் தொண்டினை நினைவுகூரும் முகமாகவும் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தமிழ் மற்றும்,இந்து நாகரிகத்தை கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் விதமாகவும் வவுனியாத் தமிழ்ச்சங்கம், எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ஸ்ரீ விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நாவலர் விழாவை சிறப்பாக நடத்தவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தவிழாவில் மங்கலவிளக்கினை வவுனியா அம்பாள் தொழிலக அதிபர் ஆ.முருகையா,- சந்திரமௌலி தம்பதியர் ஏற்றிவைக்க திருமுறையினை திருமதி ம.தனலட்சுமி ஓதுவார். தமிழ் வாழ்த்தினை செல்விகள் தே.நிஷாந்தினி, ம.கம்சா, சி.ராதிகா ஆகியோர் பாடவுள்ளனர்.

''நாவலரை நயந்த பாவலர்கள்'' என்னும் பொருளில் இடம் பெறும் உரைச் சித்திர நிகழ்ச்சியில் திருமதி வி.முருகேசம்பிள்ளை, சிவகஜன், மா.ரதிகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு நிகழ்ச்சியாக ''நால்வர் பார்வையில் நாவலர்'' என்ற பொருளில் இடம்பெறும் கருத்தரங்கில் ''நாவலரின் சமயப்பணி'' எனஎம்.எம் ரதனும், ''நாவலரின் தமிழ்ப்பணி'' என ச.கருணாகரனும், ''நாவலரின் சமுதாயப் பணி'' என ஆ.லோகேஷ்வரனும், ''நாவலர் தேசிய வீரர்'' என ச.க.தியாகலிங்கமும் கருத்துரைகளை வழங்குவர். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசில் ஒரு தரப்பினர் 13 ஐ காக்க முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 07.

13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஆதரிப்பது தொடர்பான கூட்டமொன்று நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான வாசுதேவநாணயக்கார, திஸ்ஸவிதாரண, ரவூப் ஹக்கீம், டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹசன் அலி, சில்வேஸ்திரி அலன்ரின், சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டம் இன்றும் இடம்பெறவுள்ளதாகவும் 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும் நேற்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-16)

## தெரிவுக்குழு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உடனடியாகப் படித்துவிட்டு அவை தொடர்பான கேள்விகளுக்கு நாளை (இன்று) வெள்ளிக்கிழமையே பதிலளிக்கவேண்டும் என்று வலியுறுத்தியதை அடுத்தே அவர் வெளிநடப்புச் செய்தார் என்று அவரது சட்டத்தரணிகள் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

"ஆவணங்களைப் படித்துப்பார்க்க மேலதிக அவகாசம் வேண்டும் என்று ஷிராணி கேட்டபோதும் தெரிவுக் குழு அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது" என்றும் அவர் கூறினார்.

இந்த விசாரணைகளில் தெரிவுக்குழு உறுப்பினர்கள் சிலர் இந்த விசாரணைகள் தொடர்பில் முன்கூட்டிய தீர்மானங்களை எடுத்துவிட்டனர் என்று தாங்கள் உணர்கின்றனர் என்றும் அவர் கூறினார். இவர்களின் விசாரணையில் தங்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதால் இன்றைய விசாரணைகளில் இருந்து தாங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டி ஏற்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்கள் சிலர் இது குறித்த முன்முடிவுகளுக்கு வந்திருக்கின்றனர் என்ற அடிப்படையிலா நீங்கள் முடிவு செய்தீர்கள் என்று கேட்டபோது, தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை தாங்கள் வெளியில் சொல்லக்கூடாது என்பதால் தங்களால் இது குறித்து விவரமாக இப்போதைக்கு கூறமுடியாது என்று பதிலளித்தார் அவர்.

## 13+ பற்றிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அவர் இந்தக் கேள்விகளை எழுப்பியிருந்தார். ஆளும் தரப்பின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, மேற்படி விடயம் தொடர்பில் பதிலளிக்க மூன்று மாத காலஅவகாசம் தேவை எனக் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு வந்திருந்த இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா (இவர் தற்போது அப்பதவியில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது) தேசிய இனப்பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண்பதற்கு இலங்கை ஜனாதிபதி தயார் என ஊடகவியலாளர் சந்திப்பில் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் தயாசிறியின் கேள்விகள் வருமாறு:-

1. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கும் அப்பால் சென்று தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கையின் ஜனாதிபதியால் கூறப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சரால் அண்மையில் வெளியிடப்பட்ட கூற்றில் உண்மையுள்ளதா?

2. மேற்படி தேசியப் பிரச்சினை சம்பந்தமாக அரசால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை?

3. அவ்வாறெனில், 13ஆவது திருத்தத்திற்கு மேலாக வழங்கப்படுகின்ற ஏனைய பிரேரணைகள் எவை?

4. இதற்கு அரசைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளினதும் அங்கீகாரம் கிடைத்துள்ளதா?

5. மேற்படி பிரேரணைகள் அமுல்படுத்தப்படும் திகதி யாது?

6. இந்திய வெளியுறவு அமைச்சரின் மேற்படி அ- 2 இல் குறிப்பிடப்பட்ட கூற்று உண்மையானால் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எவை என்பதை அரசு இச்சபைக்கு அறிவிக்குமா?

# இளைஞர் விடுதலை

யாழ்ப்பாணம், டிசெ. 07.

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து கடந்த 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இளைஞர் யாழ். நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாமில் தங்கியிருந்த, தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த செல்வரட்ணம் சசிகரனை (வயது-29) பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் 2009 மே 6 ஆம் திகதி கைது செய்தனர்.

இவரிடமிருந்து பெறப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் யாழ். மேல்நீதிமன்றில் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் சசிகரனை விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

சசிகரன் அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையிலுள்ளதால் அதற்கான விசாரணை வரை இவர் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (உ-16)

## பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஏற்பாட்டில் ஐ.நா. சபைக்கு முன்னாலுள்ள முருகதாசன் திடலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பெருமளவான தமிழின உணர்வாளர்கள் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழக மாணவர் மீதான இலங்கை படையினரின் தாக்குதலைக் கண்டிப்பதுடன் கைது செய்யப்பட்ட மாணவர்களும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்தப் போராட்டத்தின் நிறைவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு சென்ற மூவரடங்கிய குழுவினர் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஐ.நா. அதிகாரிகளிடம் கையளித்தது.

## மேலும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பல்கலைக்கழக துணைவேந்தர் கூறியிருந்தார். இதனை அடுத்து மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஐவரும் தமது பெற்றோர் மற்றும் மருத்துவபீட பீடாதிபதி ஆகியோருடன் இன்று (நேற்று) மதியம் யாழ். பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர். அங்கு வைத்து குறித்த மாணவர்கள் ஐவரையும் பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் விசாரணைக்காக கைதுசெய்தனர்.

இதேவேளை, முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவரும் தனது பெற்றோர் மற்றும் முகாமைத்துவ பீடாதிபதியுடன் இன்று (நேற்று) மதியம் யாழ். பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார். அவரையும் அங்கு வைத்துப் பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் விசாரணைக்காக கைதுசெய்துள்ளனர்" - என்றார்.

விசாரணைக்காக அழைக்கப்பட்ட ஏனைய நான்கு மாணவர்களின் நிலைமை தொடர்பாக அவரிடம் கேட்டபோது, "குறித்த நான்கு மாணவர்களோ அல்லது அவர்களினது பெற்றோர்களோ பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இன்று மாலை (நேற்று மாலை) வரை தொடர்பு எதையும் ஏற்படுத்தவில்லை" - என்று தெரிவித்தார்.கைது செய்யப்பட்ட ஆறு மாணவர்களும் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டு அங்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**மூவர் தொடர்ந்தும் விசாரணையில்**

ஏற்கனவே கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களில் மூவர் இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 7 நாள்களாக அவர்கள் விசாரிக்கப்படுகின்றனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

மேலும் மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதை அடுத்து யாழ். பல்கலைக்கழகத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முடங்கியுள்ளன. பல்கலைக்கழக வளாகத்திற்குச் செல்லவே தமக்கு அச்சமாக இருப்பதாக மாணவர்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர். இது தொடர்பில் ஆராயும் வகையில் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கூட்டம் இன்று அவசரமாகக் கூட்டப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (உ-5,4,சி)

## பயங்கரவாத..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செய்யப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் நேற்று மாலை வரை தெரிவித்தார். ஆனால், 20 முதல் 25 பேர் வரையிலானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி சந்திர வாகீஸ் பி.பி.ஸி. உலக சேவைக்குத் தெரிவித்திருக்கிறார்.

கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

## நீதிமன்றத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மன்னார் பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்புப்பிரிவுப் பொலிஸாரினால் கட்டம் கட்டமாக 42 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் மன்னார் நீதிமன்றத்திலும்,மன்னார் மேல் நீதிமன்றத்திலும் இடம் பெற்று வந்தன.

இந்த நிலையில் 6 சந்தேக நபர்களைத் தவிர ஏனைய அனைவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். குறித்த 6 சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் நீண்டகாலமாக மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தன.

மேலும் ஒரு சந்தேக நபர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 6 சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.தியாகேந்திரன் சந்தேக நபர்கள் ஒவ்வொருவரும் தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன் குறித்த 6 சந்தேக நபர்களும் ஒரு மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மன்னார் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பமிட வேண்டும் என உத்தரவிட்டார்.

(த-12)

## அரசு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா.

நாடாளுமன்றத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறைகள் அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

இப்போது தேசிய வீடமைப்புத் திட்டம் என்று பல திட்டங்கள் உருவாக்கப்பட்டாலும் அவை தேவைப்படும் மக்களைச் சென்றடைவதில்லை. 1994 ஆம் ஆண்டு நிமல் சிறிபால டி சில்வா அமைச்சராக இருந்தபோது மாவட்ட ரீதியாகவும் தொகுதிவாரியாகவும் வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்தத் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்படவேண்டும். முப்பது வருட போரினாலும், ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு இன்றுவரை ஒரு வீட்டையாவது கட்டிக்கொடுக்கவில்லை.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன் வழங்கல் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டன. அத்தனை வீடுகளும் அண்மையில் ஏற்பட்ட மினி சூறாவளியால் அழிக்கப்பட்டுள்ளன. இப்போது அவர்களுக்கு ஒரு இடம்கூட இல்லை. ஆனால் வங்கி அதிகாரிகள் அவர்களிடம் சென்று கடனைத் திருப்பிச் செலுத்தும்படி அச்சுறுத்துகின்றனர்.

பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படவேண்டும். எமது பிரதேசத்தில் படுவான்கரை கிராமத்தில் போரின் போது அனைத்து வீடுகளும் அழிக்கப்பட்டன. இவர்களுக்கு ஓர் இடம் கூட கட்டிக்கொடுக்கவில்லை.

தமிழ் ஊடகங்கள் தன்னை விமர்சிப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச கூறியுள்ளார். நீங்கள் மக்களின் மனதை வெல்லக்கூடிய வகையில் நன்மையான வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தினால் எல்லோரும் வரவேற்பார்கள் - என்றார் பொன் செல்வராஜா.

## வெட்டுக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டதாகவும் 35 வயது மதிக்கத் தக்க ஆண் ஒருவரின் சடலம் அது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்துடன் காணப்பட்ட டபிள்யூ.வி. 1974 இலக்கம் கொண்ட ஸ்பிளெண்டர் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தெரிவித்தார்.

போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்களைக் காப்பாற்ற ஐ.நா. தவறிவிட்டது என சாள்ஸ் பெட்றி குழுவின் உள்ளக அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதையடுத்து ஐ.நா. செயலர் பான் கீமூன், தமிழர் படுகொலையைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு வருத்தம் தெரிவித்தார். இதனால் சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சைகள் மற்றும் விமர்சனங்கள் ஐ.நா. மீது எழுந்தன.

ஐ.நா. உள்ளக அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து சர்வதேச ரீதியில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளதால் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இதனை முன்வைத்து விவாதிக்க ஐ.நா. சபை தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிப்போரில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகங்கள் சுதந்திரமாகச் செயற்படாமல் போனமைக்கான காரணங்கள், அந்தச் சூழலுக்கான பின்னணி என்பன பற்றி இந்தக் கூட்டத்தொடரில் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுக்குத் தன்னிலை விளக்கமளிக்க ஐ.நா. செயலர் தயாராகி வருகிறார் என்று கூறப்படுகிறது. (சி)

## கேள்விகளால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

நேற்று வரவு-செலவுத் திட்டத்தில் நிர்மாண பொறியியல் சேவைகள் மற்றும் வீடமைப்பு வசதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது. அதற்குப் பதிலளித்து உரையாற்றுவதற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு 12 மணிக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

பேச ஆரம்பித்த அமைச்சர் விமல், நினைத்ததைவிட நான் ஒரு முக்கியமான நபர் என்பதை எதிர்த் தரப்பினரின் கருத்துகளிலிருந்து அறியமுடிகின்றது என ஆரம்பத்திலேயே கூறி சபையில் சிரிப்பொலியை ஏற்படுத்தினார்.

எதிரணியினர் சபையை பிழையாக வழிநடத்துகின்றனர் என்றும் கூறினார். இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி குறுக்கீடு செய்தார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி.

தயாசிறிக்கு பக்கபலமாக அக்கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரேமதாஸவும், சுஜீவ சேனசிங்கவும், ஹரீன் பெர்னாண்டோவும் எழுந்து நின்று உரத்த குரலில் கத்தி ஏதேதோ தெரிவித்தனர். அவர்களின் ஒலிவாங்கி முடக்கிவிடப்படாததால் என்ன பேசினர் என்பது எமக்குக் கேட்கவில்லை.

இவ்வாறு கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் தமது உரையை அமைச்சர் விமல் தொடர்ந்தார். எனினும், அவர் ஒவ்வொரு விடயம் குறித்துப் பேசும்போதும், ஒழுங்குப் பிரச்சினைகளை தொடர்ச்சியாக எழுப்பி, அந்த விடயம் தவறு என்றும், உண்மையான விடயங்களைப் பேசுமாறும் எதிர்த்தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். விமலுக்கு ஆதரவாக பிரதி சுகாதார அமைச்சர் குரல் கொடுத்ததுடன் அமைச்சர் வீரவன்ஸவும் உரத்த குரலில் பேசி சமாளித்தார்.

இந்த நிலையில், இவ்விடயத்தில் தலையிட்ட ஆளுந்தரப்பு பிரதம கொரடா தினேஷ் குணவர்த்தன அமைச்சருக்கு மேலும் 10 நிமிடங்களை வழங்குமாறு பிரேரித்தார். இதற்கு எதிர்த்தரப்பு கடும் ஆட்சேபனை தெரிவித்தது.

இதனால் இரு தரப்பினருக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது. இரு பக்கத்திலும் உறுப்பினர்கள் எழுந்து நின்று கடுந்தொனியில் கருத்துகளை வெளியிட்டனர். இதனால் அமைச்சருக்கு மேலும் பத்து நிமிடங்கள் வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் பெரும்பான்மை ஆதரவோடு அமைச்சருக்கு மேலும் பத்து நிமிடங்கள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரசாங்கத்தின் பொம்மலாட்டம்; தமிழர் தரப்பு ஏமாந்துவிடக்கூடாது

மக்கள் அவையை - நாடாளுமன்றத்தைப் - போன்றே நீதிமன்றமும் ஜனநாயகத்தின் பிரதான தூண்களில் ஒன்று. எனினும், மக்கள் நலன் கருதிய விடயங்களில் அல்லது விவகாரங்களில் இரண்டுக்கும் இடையே முரண்பாடுகள் அவ்வப்போது எழுவது இயல்பு.

இலங்கையில் அத்தகைய முரண்பாடுகள் முன்னரும் எழுந்தன. நெவில் சமரக்கோன் பிரதம நீதியரசராக இருந்த போது, ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டு, அது தொடர்பில் ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அந்த வரிசையில் இப்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது; இரண்டு தடவைகள் விசாரணைகளும் நடந்தேறி உள்ளன.

ஆயினும், தெரிவுக்குழு விசாரணை இப்போது பெரும் முட்டுக்கட்டையை எதிர்கொண்டுள்ளதான களநிலைமை உருவெடுத்துள்ளது; தோன்றி இருக்கிறது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறப்போவதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர். அவர்கள் வெளியேறும் நிலைமை ஏற்பட்டால் அரச தரப்பைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் மட்டும் நடத்தும் விசாரணை நீதியாகவும் நியாயமாகவும் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

நீதியான விசாரணை நடத்தப்படாவிட்டால் தாம் தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக நியமிக்கப்பட்ட ஜோன் அமரதுங்கவும், லக்ஷ்மன் கிரியல்லவும் அறிவித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக நியமிக்கப்பட்ட இரா.சம்பந்தன், ஜே.வி.பி. சார்பாக நியமிக்கப்பட்ட விஜிதா ஹேரத் ஆகியோரும் ஐ.தே.க. உறுப்பினர்களின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால் அரசு ஷிராணி பண்டாரநாயக்க மீதான விசாரணையில் புதிய நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான மோதல்களில் இது ஒரு புதிய திருப்பம் என்றே கூறவேண்டும்.

பிரதம நீதியரசர் மீதான விசாரணை, இயற்கை நீதிச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கு அமைய இடம்பெறவில்லை என்பதே எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பிரதான குற்றச்சாட்டு.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பங்குபற்றவைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி, பேச்சுகளை நடத்துவதற்கு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தத் தருணத்தில் அரசதரப்பால் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு தெரிவுக்குழு நெருக்கடியை எதிர்நோக்குவது கவனத்தில் எடுத்துக்கொள்ளக் கூடியது. அதனை ஓர் அபசகுனம் என்றும் கொள்ளலாம். இந்த இரு தெரிவுக் குழுக்களுமே ஒரே தரத்தைச் சேர்ந்தவை. அதாவது, அரசுக்கு ஆதரவான பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டவை. அவற்றின் தீர்மானங்களும் அரசுக்குச் சார்பாகவே இருக்கும் என்று முழு அளவில் எதிர்பார்க்கலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஏற்படுத்தப்பட்டுள்ள தெரிவுக்குழுவின் மொத்த 31 உறுப்பினர்களில் 19 பேர் அரசில் அங்கம் வகிக்கும் ஆளுந் தரப்புக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். ஏனைய 12 எதிர்க்கட்சி உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 3 உறுப்பினர் பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே, இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை தெரிவுக்குழுவில் பெரும்பான்மையாக உள்ள அரச தரப்பைச் சேர்ந்த 19 பேருமே தீர்மானிக்கப்போகிறார்கள். இதே நிலைமைதான் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான தெரிவுக்குழுவுக்கும் உண்டு. இங்கும் முடிவை பெரும்பான்மைப் பலம்தான் தீர்மானிக்கப்போகிறது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, ஷிராணி பண்டாரநாயக்க விவகாரம் இரண்டுமே சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுகளை அரசதரப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தி வந்த வேளையில், உதைபந்தாட்டம் நடந்து கொண்டிருக்கும்போது 'கோல் போஸ்ட்'டை மாற்றுவது போன்று தெரிவுக்குழு ஊடாகவே அரசியல் தீர்வு என்று ஜனாதிபதி அதிரடியாக அறிவித்திருந்தார். அதனால் பேச்சுக்கள் ஸ்தம்பித நிலைமையை அடைந்தன. பேச்சுக்களில் அடிப்படை விடயங்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களே தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு விடப்பட வேண்டும் என்று கூட்டமைப்பு தெரிவித்து தனது அந்த நிலைப்பாட்டில் இன்னும் உறுதியாக இருந்து வருகிறது.

எனினும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு இன்னும் நான்கு மாதங்கள் கூட இல்லாத நிலையில், கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் இடம்பெற வைக்கும் முயற்சிகளில் இந்த நாட்டு அரசாங்கம் விழுந்தடித்துச் செயற்பட்டு வருகிறது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு அவதானத்துடன் மட்டுமன்றி, மிகுந்த எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும். ஏற்கனவே இரு தரப்புகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது, அரசு தான் நினைத்ததை நிலைநாட்ட முற்பட்டதைப் பெரிய பாடமாக மனதில் கொள்ள வேண்டும்.

மிகக் குறிப்பாக

இந்தியா மற்றும் அனைத்துலக அரசுகளுக்குத் "தண்ணி காட்டும்" போக்கில், அவற்றின் தலையில் குந்தியிருக்கும் பாணியில் மறைந்த அரசு தனது வசதிக்கு ஏற்ப பேச்சுக்களை முறித்துக் கொண்டது. அதன் முழு நோக்கம் - உள் நோக்கம் - தமிழர்களின் உரிமைகள் விடயத்தில் தாம் போடும் பிச்சையை (பிச்சைகளை என்றும் கொள்ளலாம்.) கேள்வி எதுவும் இல்லாமல் தமிழ் மக்கள் கைநீட்டி வாங்கி அடிபணிய வேண்டும் என்பதே.

ஆகையால், அரசாங்கத்தின் ஆசைகாட்டும் பொம்மலாட்டத்தில், தமிழர் பங்காளியாகக் கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகுந்த புத்திக் கூர்மையுடன் செயற்பட வேண்டும். அதுவே அவர்களைத் தமது அரசியல் பிரதிநிதிகளாக்கிய தமிழ் மக்களின் தணியாத தாகம்.

# இறந்த உறவுகளை நினைவு கூருவது எவராலும் மறுக்கப்பட முடியாத உரிமை

## தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டனம்

கொழும்பு,டிசெ.7

இறந்த உறவினர்கள், நண்பர்களை நினைவு கூரும் உரிமை எவராலும் எந்த விதத்திலும் மறுக்கப்பட முடியாது.

இந்த நிலையில் காட்டுமிராண்டித்தனமாக இராணுவத்தினரும் பொலிஸாரும் நிராயுதபாணிகளான பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கியுள்ளனர். இது கண்டிக்கப்பட வேண்டிய செயற்பாடு.

தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள கண்டனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவம், பொலிஸ் ஆகியோரின் இந்தச் செயற்பாடுகள் நாட்டில் சமாதானத்தை மீண்டும் கொண்டுவராது. அதற்குப் பதிலாக கடந்த காலக் கசப்பான சம்பவங்களாகிய பல்லாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், பிள்ளைகளின் மரணங்கள், கோடான கோடி பெறுமதியான அரச, தனியார் சொத்துக்கள் அழிவது, அடிப்படை மனித உரிமைகள் மீறுவது, மிகவும் முக்கியமாக ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவது போன்ற சம்பவங்களை மீண்டும் செயற்படுத்தவே உதவும்.

மே மாதம் 19 ஆம் திகதி மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டிய தினமாகாது. நாட்டின் சோக தினமாக அரசு அதைப் பிரகடனப்படுத்தி இருக்க வேண்டும். ஏனெனில் அது பல்லாயிரக்கணக்கான அப்பாவி ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் இரு சாராரையும் சேர்ந்த அநேக அப்பாவிப் போராளிகள் ஆகியோர் இறந்துள்ளனர். அவர்கள் அனைவரும் நம் நாட்டுப் பிரஜைகள்.

இத்தகைய விடயங்களில் தலையிடுவதும் அத்துடன் மிருகத்தனமான செயற்பாடுகளுமே இராணுவத்தை வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற கோரிக்கைகள் விடக் காரணம்.

இதுபோன்ற நிகழ்வுகள் இனி மேலும் நடைபெறமாட்டா என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. நடந்த பல சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும்.

பொலிஸாரைப் பொறுத்தவரையில் அவர்கள் சமாதான உத்தியோகத்தர்கள் என்பதை அறிய வேண்டும். அல்லது அவர்களிடம் கூறப்பட வேண்டும். அவர்கள் பொதுமக்களின் நண்பர்களேயன்றி, சப்பாத்துக் கால்களால் உதைக்கின்றவர்கள் அல்லர். அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய துப்பாக்கிகளைக் கைவிட்டு, முன்புபோல் குண்டாந்தடியை உபயோகிக்க வேண்டும். அது தலைகளை உடைப்பதற்காக அல்ல. தங்கள் கடமைகளை செய்வதற்கானவையாக இருக்க வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.- என்றுள்ளது.

(ம)

## ரெலோவின் தேசிய மாநாடு அடுத்த மாதம் யாழ்.நகரில்

திருகோணமலை,டிசெ.7

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய மாநாடு அடுத்த வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் கு.ரவீந்திரராஜா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் திருகோணமலை மாவட்ட பணிமனை அமைப்பின் பொதுக் குழுக் கூட்டம் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த விசேட பொதுக்குழுக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கிழக்கு மாகாண சபையின் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரசன்னா, ஜனா மற்றும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உப தலைவர் ஹென்றி மகேந்திரன், திருகோணமலை நகர சபை உறுப்பினர் சி.நந்தகுமார் உட்பட அமைப்பின் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய மாநாடு ஜனவரி மாதம் 26 ஆம் திகதியும் 27 ஆம் திகதியும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-40)

## உயரழுத்த மின்னால் இலத்திரனியல் பொருள்கள் நாசம்

பருத்தித்துறை மேற்குப் பகுதியில் திடீரென ஏற்பட்ட உயர் அழுத்த மின்சாரத்தால் பல வீடுகளில் உள்ள இலத்திரனியல் பொருள்கள் பழுதடைந்தன.

கல்லூரி வீதியிலுள்ள மின் மாற்றியில் இருந்து செல்லும் மின் இணைப்புகளின் ஊடாக உயர் மின் அழுத்தம் திடீரென வந்ததைத் தொடர்ந்து சுப்பர்மடம், அல்லொல்லை, ஓடக்கரை ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த கணினிகள், மின் அடுப்புக்கள், குளிர் சாதனப்பெட்டிகள், தொலைக் காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட அன்றாட பாவனைக்கான அனைத்து இலத்திரனியல் பொருள்களும் பழுதடைந்துள்ளன என்று அந்தப் பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

(ம-8)

## சுகாதார வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

வலி.வடக்கு,டிசெ.7

வடமாகாண சுகாதார சுதேச அமைச்சால் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய சுகாதார வாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வடமாகாணத்துக்கு உட்பட்ட மாவட்ட செயலகங்கள், பிராந்திய சுகாதாரப் பணிமனைகள், பிரதேச செயலர்கள், மாநகரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், ஆதார வைத்தியசாலைகள், பிரதேச மற்றும் கிராமிய வைத்தியசாலைகள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகள் இணைந்து இதனைக் கொண்டாட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

முதல் நிகழ்வுகள் மாவட்ட செய்லகங்களில் அரச அதிபர் தலைமையில் தேசியக் கொடியேற்றலை அடுத்து இடம்பெறுவதைத் தொடர்ந்து, ஏனைய நிகழ்வுகள் செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இரண்டாம் நாள் சிரமதானப் பணிகள், துப்புரவு செய்தல், விழிப்புணர்வூட்டல், உணவு மற்றும் குடிதண்ணீர் சம்பந்தமான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல் போன்ற பணிகள் பொது இடங்களில் இடம்பெறவுள்ளன.

மூன்றாம் நாள் மாவட்ட மட்டத்தில் சுகாதார விழிப்புணர்வு நடை பயணத்தை பதாகைகளுடன் மேற்கொள்ளல். ஆயிரம் பேருக்கும் குறையாதவர்களுடன் டெங்கு, மலேரியா நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்கள், விபத்துக்கள், போக்குவரத்து ஒழுங்குகள் சம்பந்தமான பேச்சுகளை நடத்துதல்.

நான்காம் நாள் உரிய திணைக்கள மாவட்டக் குழுக்கள் வைத்திய சாலைகளுக்குச் சென்று கண்காணித்தல், தொழிற்சாலைகளுக்கு செல்லுதல், பொது மக்களுடைய முறைப்பாடுகள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஐந்தாம் நாள் கண், பல் மருத்துவ முகாம்களை நடத்துதல், டெங்கு கட்டுப்பாட்டை முன்னெடுத்தல், வாழ்க்கை முறைகளை மேம்படுத்தல், உணவுப் பழக்க வழக்கம் சம்பந்தமாக கலந்துரையாடல், வீட்டுத் தோட்டத்தை ஊக்குவித்தல், சுதேச மருத்துவ கன்றுகளை நடுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஆறாம் நாள் வைத்தியசாலை குழுக்கள், கிராமிய சுகாதார குழுக்கள் போன்றவற்றின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தலும் செயற்பாடுகளை மேற்கொள்ளலும்.

ஏழாம் நாள் இரத்தம் வழங்கும் முகாம்களை நடத்துதல், யோகா ஆன்மிகம், விசேட பூசைகள் மேற்கொள்ளல், மதுபானம், புகைத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

எட்டாம் நாளான இறுதி நாள் பொழுதுபோக்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல், சுகாதார அலுவலர்களுடன் கலந்துரையாடல், தேசிய சுகாதார வாரம் பற்றி மற்றும் சுகாதாரத் திணைக்கள அலுவலர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ம-86)

## நீதிமன்றத்தில் சத்தமிட்ட பெண்ணுக்கு மறியல்

வடமராட்சி,டிசெ.7

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை கூக்குரலிட்டு சத்தமிட்ட பெண் ஒருவர் மன்று கலையும் வரை மறியலில் வைக்கப்பட்டார்.

பார்வையாளர் பகுதியிலிருந்து சத்தமிட்ட இந்தப் பெண்ணை பொலிஸாரும், சிறைப் பாதுகாவலர்களும் பிடித்துக் கொண்டனர். நீதிமன்ற ஒழுங்கு முறைகள் பற்றி சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த மாவட்ட நீதிபதி அவரை மன்று கலையும் வரை மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் செலுத்தியும் இதுவரை இல்லை மின்சார இணைப்பு

கிளிநொச்சி, டிசெ. 07.

கிளிநொச்சி பரந்தன், கண்டாவளை, முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்குப் பணத்தைச் செலுத்தி மாதங்கள் மூன்று கடந்துள்ள போதும் இது வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட தரப்பினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

**இதேவேளை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சகல மக்களும் இலவச மின்விநியோகம் வழங்கப் படும் என வாக்குறுதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டன.**

கிளிநொச்சி ஏ-35 வீதியின் பரந்தன், கோரக்கன் கட்டு, முரசுமோட்டை, கண்டாவளை, தருமபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் சார் நடவடிக்கை என்பவற்றை மேற்கொண்டு வரும் வர்த்தகர்கள் தமக்குரிய மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்து அதற்கான பணத்தையும் செலுத்தியுள்ளனர்.

மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்று வரை தமக்குரிய மின் இணைப்பு வழங்கப்படவில்லை என அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதேவேளை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சகல மக்களுக்கும் இலவச மின்விநியோகம் வழங்கப் படும் என வாக்குறுதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டன. ஆனால் இதுவரை 80 வீத மாணவர்களுக்கு 'வடக்கின் வசந்தம், கிடைக்கவில்லை என மீளக்குடியமர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-6)

## அடையாள அட்டைகள் வந்துசேராத மாணவர்கள்

### வவுனியாவில் பாடசாலைகளில் நெருக்கடி

வவுனியா, டிசெ. 07.

வவுனியாவில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த. -சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஆள் அடையாள அட்டைகள் இன்னமும் வந்தடையாமையினால் மாணவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஆள்பதிவுத் திணைக்களத்தினர் வவுனியாவில் உள்ள பிரதான பாடசாலைகளில் நடமாடும் சேவையை நடத்தியிருந்தனர். இதன் போது மாணவர்களிடம் ஆள் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டிருந்தன. எனினும், பின்பு ஒருசில மாணவர்களுக்கே தபால்மூலம் அடையாள அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டன.

இதேவேளை பாடசாலை ஊடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் சிலருக்கு இன்னமும் அடையாள அட்டைகள் வந்துசேரவில்லை என மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் பரீட்சை எழுதுவதற்கு நெருக்கடி ஏற்படலாம் என்று அவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஒருசில மாணவர்கள் பெற்றோர்கள் உதவியுடன் ஆள்பதிவுத் திணைக்களத்துக்குச் சென்று அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டுள்ளனர். (ஐ-402)

## இலவச பாட நூல் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியாவில்



வவுனியா, டிசெ.7

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

வவுனியா இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியின் அக்குவைனஸ் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பாடநூல்களை வழங்கி வைத்தார்.

இதன்போது வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, ஆளுநரின் இணைப்பாளர் முகைதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## முல்லைத்தீவு மீனவர்கள் ஜனாதிபதிக்கு மனு

முல்லைத்தீவு, டிசெ. 07.

முல்லைத்தீவு மீனவர்கள் தமது தொழில் நெருக்கடியைத் தீர்த்து வைக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். அதில், முல்லைத் தீவு மாவட்டத்தில் கடற் தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களாகிய நாம் எமது வாழ்வாதாரத்தை மேம் படுத்த மீன்பிடியையே தொழிலாகக் கொண்டுள்ளோம்.

கடந்த 2010 ஆம் ஆண்டு எமது பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் அமைதியான முறையில் கடற்றொழிலை மேற் கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் இந்திய மீனவர்களின் ட்ரோலர் மீன்பிடிப் படகுகள் எமது தொழிலுக்குப் பலவகைகளிலும் இடையூறாக உள்ளன. இதனால் எமது தொழிலை இலாபகரமானதாக மேற் கொள்ள முடியவில்லை. இந்திய மீனவர்களின் நடவடிக்கை கடல்படுகைகளில் இயற்கை வளங்களை அழிக்கின்றன. பெரும் தொகையிலான மீன்பிடி வள்ளங்களில் வந்து தொழில் செய்வதால் நாம் எமது வலைகளைக் கடலில் விரிக்கவே முடியாதுள்ளது. இதனால் தொழிலுக்குச் செல்லும் நாம் வெறும் கையுடன் கரைக்குத் திரும்புகிறோம்.

இந்த விடயம் குறித்து உரிய அமைச்சர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்தவாரம் ஐந்நூறு ட்ரோலர் படகுகள் மூலம் இந்திய மீனவர்கள் எமதுபகுதிக்குள் உள்நுழைந்து தொழில் செய்தனர்.

தற்போது இறால், மீன்களின் பிடிகள், அதிகம் என்பதால் இந்திய மீனவர்களின் மீன்பிடியை நிறுத்தாவிட்டால், இறால் ஏற்றுமதியில் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரும் பொருளாதார இலாபத்தையும் இழக்க நேரிடும். எனவே இதில் ஜனாதிபதி தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என மீனவர்கள் கேட்டுள்ளனர். மீன்பிடித்துறை அமைச்சர், வர்த்தக வாணிபத்துறை அமைச்சர், 58 ஆவது படைப் பிரிவு, அரச அதிபர் ஆகியோருக்கும்மனு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஐ-13)

## கால்நடைகளின் உறைவிடமாக 8 ஆம் வாய்க்கால் பொதுச்சந்தை

கிளிநொச்சி, டிசெ. 07.

கிளிநொச்சி உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பொதுச் சந்தை கால் நடைகளின் உறைவிடமாகவும், மதுப்பிரியர்களின் ஓய்வு இடமாகவும் உள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதியில் உள்ள பொதுச் சந்தை புதிதாக அமைக்கப்பட்டுள்ள போதும் அதற்று சுற்று வேலிகள் அமைக்கப்படாமல் உள்ளது.

இதனால் அங்கு வர்த்தக நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படுவதில்லை.

குறித்த பொதுச் சந்தை கட்டடத் தொகுதி கால் நடைகளின் உறைவிடமாகவும் மதுப்பிரியர்களின் ஓய்வு இடமாகவுமே காணப் படுகின்றது.

இதை விட குறித்த சந்தைப் பகுதியில் சமூக விரோதச் செயற்பாடுகள் பலவும் இடம்பெற்று வருவதாகவும் அதனைச் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் தலையிட்டு இவற்றைக் கட்டுப் படுத்தி சந்தை இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6)

## பெட்டிக் கடைக்குள் கலாசார சீரழிவுகள்?

வவுனியா, டிசெ.7

வவுனியா மன்னார் வீதியில் கைவிடப்பட்ட பெட்டிக் கடை ஒன்றில் இரவு வேளைகளில் கலாசார சீரழிவுகள் இடம் பெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மதுப் பிரியர்களின் மதுபானசாலையாகவும் இந்தப் பெட்டிக்கடை காணப்படுகிறது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்களும் போக்குவரத்துப் பயணிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளனர். (ஐ)

## வெளிநாடு சென்றோரின் குடும்பங்கள் குறித்து ஆராய்வு

### நலன்புரி அமைச்சால் மன்னாரில் நேற்று

மன்னார், டிசெ.7

வெளிநாட்டு வேலை வாய்ப்பு நலன்புரி அமைச்சின் ஏற்பாட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

**வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பல குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 25 சிறார்கள் சிறுவர் காப்பகங்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.**

மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற கலந்துரையாடலில், மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் புரிவோரின் குடும்பங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அதனைத் தீர்த்துக்கொள்வது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் நலன்புரி அமைச்சின் மேலதிக பொது முகாமையாளர் திருமதி கிசோலிபெரேரா, வடமாகாண முகாமையாளர் குருசோத்தமன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்திலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தேடிச் சென்றுள்ள பலர் அவர்களது குடும்பங்களுடன் தொடர்புகள் எவையும் அற்ற நிலையில் உள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 25 சிறார்கள் சிறுவர் காப்பகங்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்ற விடயங்கள் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து இவர்களுக்கிடையில் இருக்கும் பிரிவுக்கான காரணங்களைக் கண்டறிந்து குடும்பங்களை இணைப்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. (ஐ-12)

## செட்டிகுளம் பிரதேச செயலக மாற்று ஆற்றலுடையோர் தினம்



வவுனியா, டிசெ. 07.

செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் சர்வதேச மாற்றுஆற்றல் உடையோர் தினம் கடந்த 3 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இந்த நிகழ்வு சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஶ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வெண்கலச்செட்டிகுள பிரதேச செயலாளர் நா.கமலதாசன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக ஹண்டிகப் இன்ரநஷனல் நிறுவன திட்ட முகாமையாளர் ஸ்ரீப் ஹாக்னர், சிப்கோ நிறுவன தலைவர் சு.சம்ஸன் கலந்து கொண்டனர். மேலும் லெப்டினன்ட் கேணல் குமார, ஆண்டியா புளியங்குளப் பாடசாலை அதிபர் முகமட் யாவீர், செட்டிகுள மகாவித்தியாலய உப அதிபர் வாகீசன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காட்டுப்புல மக்கள் பிரச்சினைக்கு உரிய தீர்வு பெற்றுத் தரப்படும்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

பண்டத்தரிப்பு, டிசெ.7

வலி.மேற்கு காட்டுப்புலம் பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் பெற்றுத் தரப்படும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாண்டுவெட்டை, காட்டுப்புலம் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு வீட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மக்கள் பிரச்சினை களைக் கேட்டறிந்து கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர்மேலும்தெரிவித்ததாவது:-

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தக் கிராமம் இப்பொழுது மீளக் குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஏனைய பகுதிகளிலும் மக்கள் மீள் குடியமர்வதற்குக் கூட்டமைப்பு முழு மூச்சில் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனினும் தளர்ந்து விடாது இந்தச் செயற்பா டுகளில் மும்முரமாக ஈடு படுவோம் என்று கூறினார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் கனக சபாபதி, வலிமேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், உப தலைவர் சஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கிராமத்தில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதை பிரதேச சபை யினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதன் போது ஒரு வருட காலத்துக்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார். (ம-130)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில், வலி.மேற்கு பாண்டுவெட்டை, காட்டுப்புலம் பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு வீட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வு பாண்டுவெட்டை கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பயனாளி ஒருவருக்கு உபகரணம் வழங்குகிறார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். (ம-130)

## உலர் உணவு பொதி வழங்கல்

தென்மராட்சி, டிசெ.7

அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு இன்று உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து கியூமெடிக்கா நிறுவனத்தால் உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது.

நாவற்குழி மேற்கு, மறவன்புலோ வடக்கு, மறவன் மேற்கு, இடைக்குறிஞ்சி வடக்கு, வரணி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

## மாதாந்தக் கொடுப்பனவு

வடமராட்சி, டிசெ.7

பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறை பிரதான அஞ்சல் நிலையங்களிலும் அவற்றின் கிழ் உள்ள உப அஞ்சல் நிலையங்களிலும் இந்த மாதத்துக்கான பொது மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் புற்றுநோயாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கொடுப்பனவுகளுக்கு ரியவர்கள் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்ட பிரதான அஞ்சல் நிலைய அதிபர்கள் கேட்டுள்ளனர். (த-8)

## மீள் குடியமர்வுக் கொடுப்பனவு எழிலூர் மக்களுக்கு கிடைக்கவில்லை

கொழும்புத்துறை,டிசெ.7

கொழும்புத்துறை எழிலூர் கிராம மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டு பல வருடங்களாகியும் மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள குடியேற்றத்திட்ட வீடுகள் போர் காரணமாக சேதமடைந்துள்ளன.

58 வீடுகளில் தற்போது 8 வீடுகள் மட்டுமே இந்திய உதவியுடன் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய குடியிருப்பாளர்கள் சிறு குடிசைகளையேனும் அமைத்து குடியேற விரும்புகின்ற போதிலும் மலசல கூடம், குடிதண்ணீர் வசதிகள் சீரின்மையால் குடியமரப் பின்னடிக்கின்றனர்.

இந்தப்பகுதிக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பிரதான வீதி, உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் அடிப்படை சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மீள் குடியமர்வுக் கொடுப்பனவை வழங்கினால் மலசல கூடங்களையாவது அமைத்து குடியமர ஏதுவாக இருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு பெரும்பாலான குடும்பங்கள் வேறிடங்களில் வசித்து வருவதற்கு இதுவே காரணம் எனவும் கூறப்படுகிறது. (ம-135)

இறப்பு, பிறப்பு சான்றிதழ் வழங்கும்

# கணினி மயமான திட்டத்தில் குறைபாடுகள் களையக் குழு

யாழ்ப்பாணம், டிசெ.7

கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கும் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த மாத இறுதியில் கொழும்பில் இருந்து விசேட குழு ஒன்று வரவுள்ளது என்று யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் ப.பிரபாகர் தெரிவித்தார்.

வடக்கில் தற்போது சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மக்கள் தாம் வசிக்கும் பிரதேச செயலர் பிரிவில் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்து ஒரு மணி நேரத்திலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சிலர் விண்ணப்பிக்கும் பொழுது, அவர் ஆவணங்கள் இல்லை எனவும், பிறப்பு எங்கு பதிவு செய்யப்பட்டதோ அந்த பிரதேச செயலகத்துக்கே செல்லுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சிலரது ஆவணங்களின் பிரதிகள் ஒழுங்கான முறையில் பிரதி செய்யப்படாமல் இருப்பதன் காரணமாகப் பதிவு செய்யப்பட்ட பிரதேச செயலகத்துக்கே செல்லுமாறு பணிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக யாழ் மாவட்ட மேலதிக மாவட்ட பதிவாளரிடம் கேட்ட போது:-

"இந்தப் பதிவுகளில் சில தவறுகள் இடம்பெறுகின்றன. இயலுமானவரை நாம் செம்மையாகவே செய்துள்ளோம். இருப்பினும் ஏற்படும் தவறுகளைத் திருத்திக் கொள்ளவுள்ளோம். இதற்காக கொழும்பிலிருந்து விசேட குழு ஒன்று வருகை தந்து தவறுகளை திருத்தவுள்ளது" என்று தெரிவித்தார். (ம-5)

# 7 சேவை மார்க்கங்களுக்கு நேர அட்டவணை வந்தது

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் யாழ். மாவட்டத்தில் 7 சேவை மார்க்கங்களுக்கு நேர அட்டவணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விரைவில் அரச அதிபருடன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக யாழ்.மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் யாழ்.மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தால் வ்ழங்கப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாகவே சேவையில் ஈடுபட்டன. இதனைச் சில போக்குவரத்து மார்க்கங்களில் ஈடுபட்ட தனியார் பஸ்கள் பின்பற்றவில்லை.

இதனை அடுத்துத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் சகல போக்குவரத்து மார்க்கங்களுக்கும் உரிய நேர அட்டவணைகள் வழங்கப்படுகின்றன.

இதுவரையில் யாழ்ப்பாணம்- புன்னாலைக்கட்டுவன் 764 பஸ் மார்க்க சேவையும், யாழ்ப்பாணம்- கொடிகாமம் 789/1 மார்க்க சேவையும், யாழ்ப்பாணம்- குறிகாட்டுவான் 776 மார்க்க சேவையும், யாழ்ப்பாணம்- கச்சேரி 793 மார்க்க சேவையும், பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 மார்க்க சேவையும், பருத்தித்துறை- யாழ்ப்பாணம் 751 மார்க்க சேவையும், அச்சுவேலி - யாழ்ப்பாணம் 752/1 மார்க்க சேவைக்குமே நேர அட்டவணைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய மார்க்கங்களுக்குரிய நேர அட்டவணைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட நேர அட்டவணை தொடர்பாக அரச அதிபருடன் கலந்துரையாடவுள்ளதாக யாழ். மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

# காரைநகரில் கரை ஒதுங்கிய படகு

காரைநகர் கடற்பகுதியில் படகு ஒன்று கரையொதுங்கியுள்ளது என்று யாழ்.மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள பரிசோதகர் ரமேஸ் கண்ணா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவித்ததாவது:-

காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியில் படகு ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலையில் கரை ஒதுங்கியுள்ளது. இதனை காரைநகர் சிவகௌரி கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்துக்கு அறிவித்திருந்தனர். இந்தப் படகு 20 அடி நீளம் கொண்டதாக மரத்திலான வள்ளம் போன்ற வடிவமைப்பில் உள்ளது. அத்துடன் படகில் சிறிய துவாரமும் உள்ளது. கறுப்பு நிற வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

இந்த வகையான படகு இந்தியாவிலிருந்து காற்றுக்கு கரை ஒதுங்கியிருக்கலாம் என்று எண்ணப்படுகின்றது.

படகை இனங்கண்டு உரியவரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று தெரிவித்தார். (ம-13)

# சட்டவிரோத விற்பனையாளர் 240 பேருக்கு 6 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ.7

சங்கானை மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமாக அரச சாராயம் விற்பனை, கள் விற்பனை, 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 240 பேர் கடந்த 11 மாத காலப் பகுதிக்குள் இனங்காணப் பட்டு இவர்களுக்கு 6 லட் சத்து 61 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் அறவிடப்பட்டுள்ளது.

சங்கானை மதுவரித் திணைக்களத் பொறுப்பு அதிகாரி தாமலிங்கம் நந்தகுமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 240 பேர் மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு முரணான குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர். பண்டத்தரிப்பு, காரைநகர் மற்றும் சங்கானைப் பகுதிகளில் இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் ஜனவரி மாதம் 5 பேருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதமும், பெப்ரவரி மாதம் 10 பேருக்கு 5 ஆயிரத்து 500 ரூபாவும், மார்ச் மாதம் 65 பேருக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும்ஏப்ரல் மாதம் 31 பேருக்கு 4 ஆயிரம் ரூபாவும், மே மாதம் 25 பேருக்கு ஒரு லட்சத்து 82 ஆயிரம் ரூபாவும், ஜூன் மாதம் 31 பேருக்கு 16 ஆயிரத்து 500 ரூபாவும், ஜூலை மாதம் 34 பேருக்கு 13 ஆயிரம் ரூபாவும், ஓகஸ்ட் மாதம் 30 பேருக்கு ஒரு லட்சத்து 51 ஆயிரம் ரூபாவும், செப்ரெம்பர் மாதம் 34 பேருக்கு 51 ஆயிரத்து 500 ரூபாவும் ஒக்ரோபர் மாதம் 14 பேருக்கு ஒரு லட்சம் ரூபாவும், நவம்பர் மாதம் 22 பேருக்கு 70 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.


சங்கானை மதுவரித் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது இந்த 240 பேரும்அகப்பட்டனர்.இவர்களில் அதிகமாக 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த வர்த்தகர்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு எதிராக மல்லாகம், ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதே 6லட்சத்து 61 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தம் புதிய பென்ஸ் காரை இழுத்துச் சென்ற 6 கழுதைகள்!

## இப்படி ஒரு புதுவித போராட்டம் குஜராத்தில்



குஜராத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் பென்ஸ் காரை கழுதைகளைக் கட்டி வீதி வீதியாய் இழுத்துக் கொண்டு சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. குஜராத் மாநிலம், வதோதராவைச் சேர்ந்த தொழிலதிபர் குமுக் பாட்டீல் கடந்த ஆண்டு ஜூலையில் புதிய பென்ஸ் இ- கிளாஸ் சொகுசு செடான் காரை வாங்கினார்.

இரண்டு மாதங்கள் மட்டுமே எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நன்றாக ஓடிய கார், கடந்த செப்ரெம்பர் முதல் அடிக்கடி 'மக்கர்' பண்ணத் தொடங்கியது.

பென்ஸ் கார் திருத்துநர் நிலையத்துக்கு கொண்டு சென்று திருத்தம் செய்த பின்னரும் இழுபறி நீடித்தது. நடுத் தெருவில் திடீரென நின்றது. ரூ.60 லட்சம் கொடுத்து வாங்கிய கார் அடிக்கடி பழுதானதோடு, அதனை முறையாக பழுது நீக்கித் தராமையாலும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார் பாட்டீல். இதையடுத்து, நூதன முறையில் தயாரிப்பாளரின் கவனத்தையும், விநியோகஸ்தரின் கவனத்தையும் ஈர்க்க முடிவு செய்தார்.

இதற்காக தனது காரில் 6 கழுதைகளைக் கட்டி, அந்த சொகுசு காரை வீதி வீதியாய் இழுத்துச் சென்றார். இதனால் அந்த கார் சென்ற வீதிகளில் பரபரப்பு ஏற்பட்டது. இந்த நூதனப் போராட்டத்துக்குப் பின்னராவது கார் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறார் பாட்டீல். (வ)




அரசு முறை பயணமாக இந்தியா சென்றுள்ள பங்களாதேஷின் உள்துறை அமைச்சர் முகைதீன் கான் அலம்கிர், டில்லியில் இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தைச் சந்தித்துப் பேசினார்.

# இந்திய – சீன எல்லை வகுக்கப்படவில்லை; குர்ஷித் கருத்தால் லோக்சபாவில் அமளி

டில்லி, டிசெ.7

இந்தியா - சீனா இடையே தெளிவான எல்லை வகுக்கப்படவில்லை என்று வெளியுறவுத் துறை அமைச்சர், சல்மான் குர்ஷித் தெரிவித்தார். இதனால் லோக்சபாவில் பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.



லோக்சபாவில் நேற்று, முன்தினம் பா.ஜ.க. - நாடாளுமன்ற உறுப்பினர் லால்ஜி தாண்டன், சபாநாயகர், மீரா குமாரிடம் இந்திய - சீன எல்லையில் கடந்த மூன்றாண்டுகளில், எத்தனை முறை சீன இராணுவம் அத்துமீறியுள்ளது என்ற தகவலை வெளியுறவுத் துறையிடம் கேட்டிருந்தேன். இதுவரை அதற்கான பதில் எனக்கு கிடைக்கவில்லை - என்றார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில், வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் எழுந்து, "இந்தியா - சீனா இடையேயான எல்லையை குறிக்கும் தெளிவான கட்டுப்பாடு எல்லைக்கோடு இன்னும் வரையறுக்கப்படவில்லை. 'இது தான் எல்லை' என்று இருதரப்பினரும் எந்த உடன்பாடும் செய்து கொள்ளவில்லை; இருதரப்பிலும் எல்லை மாறுபடுகிறது'' -என்றார்.

இதற்கு, பா.ஜ.க. மற்றும் பிற எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. சமாஜ்வாதித் தலைவர், முலாயம் சிங் யாதவ், பகுஜன் சமாஜ் நாடாளுமன்ற உறுப்பினர் தாராசிங் சவுகான் போன்றோர் அரசுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீனாவின் மிரட்டலுக்கு மத்திய அரசு பணிந்து போகிறது; எல்லையில் கண்காணிப்பு கோபுரங்களை அமைத்து ஊடுருவல் மற்றும் அத்துமீறலைக் கட்டுப்படுத்த அரசு தவறி விட்டது என்று ஒரே குரலில் பேசினர். இதனால் சபையில் அமளி துமளி ஏற்பட்டது. இந்த விவகாரம் குறித்து, வாக்கெடுப்பு இல்லாத, விதி, 193 இன் கீழ் விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை சபாநாயகர், மீராகுமார் ஏற்றுக்கொண்டார்.

முன்னதாக இந்திய - சீன எல்லை குறித்து, கடிதம் மூலம் அமைச்சர் சல்மான் குர்ஷித் கருத்துத் தெரிவித்ததாவது:-

இரு நாடுகளுக்கும் இடையேயான உண்மையான எல்லை எது என்பது குறித்து இரு தரப்பிலும் பிரச்சினை எழும்போது மோதலைத் தவிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வழிமுறைகளான இருதரப்பு சந்திப்பு, கொடி அணிவகுப்பு, ஆலோசனை போன்றவற்றை மேற்கொள்கிறோம். தூதரகங்கள் வழியாக, பரஸ்பரம் பேசிக் கொள்கிறோம். எல்லையில், அமைதியும் போர் இல்லாத தன்மையும் நிலவ வேண்டும் என்பதில் இருதரப்பும் உறுதியாக உள்ளன. எனினும் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய எம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டே வருகிறோம்-என்றார். (வ)

# வைகோவுடன் இணைகிறார் நகைச்சுவை நடிகர் வடிவேல்

சென்னை, டிசெ.7

கடந்த சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. வுக்கு பிரசாரம் செய்ததால் திரைப்பட வாய்ப்புகளை இழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள நடிகர் வடிவேல், இன்று வைகோ முன்னிலையில், ம.தி.மு.கவில் இணைவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



தமிழ்த்திரைப்பட உலகில் தனக்கென்று ஒரு பாணியை வகுத்துக் கொண்டு, ரசிகர்கள் மத்தியில் நகைச்சுவை நடிகராக வலம் வந்தவர் வடிவேலு.

2011 இல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில், அப்போதைய ஆளுங் கட்சியாக இருந்த, தி.மு.க. வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார். அதிலும், தே.மு. தி.க. தலைவர் விஜயகாந்தை பற்றி கடுமையாக விமர்சித்துப் பேசியதால் அவருடைய பேச்சுக்கும், பிரசாரத்துக்கும் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பு இருந்தது. அந்தத் தேர்தலில், தி.மு.க., தோல்வியைத் தழுவியது. அ.தி.மு.க., வெற்றி பெற்று ஆட்சிப்பொறுப்புக்கு வந்தது.

தி.மு.கவுக்குப் பிரசாரம் செய்த ஒரே காரணத்தால், பட வாய்ப்புகள் அறவே இன்றி, சினிமாத் துறையிலிருந்து ஓரங்கட்டப்பட்ட நிலைக்கு, வடிவேலு தள்ளப்பட்டார். இதற்கிடையே எதிர் எதிர் துருவமாக இருந்த தி.மு.க. - தே.மு.தி.க., ஒரே அணியில் வர வாய்ப்புள்ளதாக வெளியான தகவல், வடிவேலுவை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. (வ)

## 13 ஆண்டுகள் காத்திருந்து ஒரே சூலில் 4 குழந்தைகள்

திருமணமாகி 13 ஆண்டுகளுக்கு பின்னர், பெண்ணொருவருக்கு ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் பிறந்தன.

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் செம்பக்கூர் கிராமத்தைச் சேர்ந்த வியாபாரி ஸ்ரீராமுலு (வயது 42) மதனபள்ளி என்ற இடத்தில் வசித்து வருகிறார். அவரது மனைவி கவுரிக்கே (வயது 37) ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன.

அவர்களுக்கு திருமணமாகி 13 ஆண்டுகளாகியும் குழந்தை இல்லை. இந்த நிலையில் கவுரி கர்ப்பமானார். நிறை மாதக் கர்ப்பிணியான அவர் கடந்த செவ்வாய்க் கிழமை தனியார் மருத்து வமனையில் அனுமதிக் கப்பட்டார். அங்கு அறுவைச் சிகிச்சையின்போது 3 ஆண், ஒரு பெண் என 4 குழந்தை கள் பிறந்தன. (வ)

# உடல் உறுப்புகளை தானம் செய்தார் பிரியங்கா காந்தி

டில்லி, டிசெ.7

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா காந்தி வாத்ரா மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிருந்தா காரத் ஆகியோர் தங்கள் உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளனர்.



டில்லியில் உள்ள ஸ்ரீ கங்கா ராம் மருத்துவமனை உடல் உறுப்பு தான முகாமை நேற்று நடத்தியது. சுமார் 500 பேர் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிருந்தாகாரத் தனது உடல் உறுப்புகளைத் தானம் செய்வதாக உறுதிமொழி எடுத்தார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா காந்தி வேறு ஒரு அவசர வேலை இருந்ததால் நிகழ்ச்சிக்கு வரவில்லை. ஆனால் அவர் எழுத்து மூலம் அனுப்பிய தகவலை மருத்துவமனை அதிகாரிகள் வாசித்தனர். அதில், அவர் தனது உடல் உறுப்புகளைத் தானம் செய்வதாக உறுதியளித்துள்ளார்.

இந்தியாவில் கோடிக் கணக்கில் மக்கள் இருந்தும் பெரும்பாலானோர் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வருவதில்லை என்று மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். மூளைச் சாவு அடைபவர்களில் சிலரின் உடல் உறுப்புகள் தானமாக கொடுக்கப்பட்டாலே இந்தியாவில் உறுப்பு மாற்றும் அறுவை சிகிச்சைக்கு மிக உதவியாக இருக்கும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ)

# மீனவரை விடுவிக்குமாறு இலங்கையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்

## மன்மோகனுக்கு ஜெயலலிதா அவசர கடிதம்

சென்னை, டிசெ.7

இலங்கை அரசு, தமிழக மீனவர்கள் 40 பேரை உடனடியாகவிடுதலைசெய்யவேண்டும் என்று இந்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயல லிதா மீண்டும் கடிதம் எழுதி யுள்ளார். இதுகுறித்து அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-



தமிழகத்தில் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 22 மீனவர்களும், புதுச்சேரி காரைக்காலைச் சேர்ந்த 18 மீனவர்களும் 5 மீன்பிடி படகுகளில் கடந்த 2 ஆம் திகதி கடலில் மீன் பிடிக்கச் சென்றனர்.

அவர்களை இலங்கைக் கடற்படையினர் புல்மோட்டைக்கு அருகே கைது செய்தனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அவர்களை சிறைக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வந்துள்ளன.

இதுபோன்று இந்திய - இலங்கை கடல் எல்லையில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டும், கைது செய்யப்பட்டும் வரு கின்றனர். இதனால், இந்திய மீனவர்கள் பாதுகாப்பற்ற நிலையை உணர்கின்றனர்.


இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்தால், இந்திய கடலோரக் காவல் படை அவர்களை எச்சரித்து திருப்பி அனுப்பி விடுகிறது.

இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசு, தமிழக மீனவர்கள் 40 பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

இலங்கை அதிகாரிகளுடன் பேசி, உடனடியாக இந்த 40 மீனவர்களையும், 5 படகுகளையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்-என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13, 14 ஆம் திகதிகளில் வானியலில் மாற்றம்




எதிர்வரும் 13ஆம், 14 ஆம் திகதிகளில் வானியலில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்று நிகழக்கூடும் என்று நாஸா விண்வெளி நிலையம் தெரிவித்துள்ளது.

"Rock comet எனும் வால் நட்சத்திரங்களின் துகள்கள் பூமியின் மேற்பரப்பில் விழக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவை 5.10 km விட்டத்தைக் கொண்டிருக்கின்றன. 1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி இந்தத் துகள்கள் கண்டறியப்பட்டன. இவை விண்வெளிக் குப்பைகள் என்று அழைக்கப்படும். 2009ஆம் ஆண்டு நாஸாவின் விண்கலமான STEREO -A இதுபோன்ற 3 ஆயிரத்து 200 இக்கும் மேற்பட்ட துகள்களை அவதானித்திருந்தது. இந்தத் துகள்கள் காற்று மண்டலத்திற்குள் நுழையும் போது உராய்வு காரணமாக பிரகாசத்துடன் எரிந்து பெருமளவு சாம்பலாகி விடும். மிகச் சிறியளவு துணிக்கைகளே பூமியை வந்தடையும். இதனால் பெரியளவிலான பாதிப்புகள் ஏற்படா என்று நாஸா குறிப்பிட்டுள்ளது.



மியன்மாரில், வீதியில் தனது குழந்தையுடன் பழ வியாபாரத்தில் ஈடுபடும் பெண் ஒருவர்.

## ஈரானில் நிலநடுக்கம் 5 பேர் சாவு

தெஹ்ரான், டிசெ. 7

ஈரானின் தெற்கு பகுதி, ஆப்கன் எல்லையில் நேற்று முன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதில் சிக்கி ஐவர் உயிரிழந்துள்ளனர். 20இக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ரிச்டர் அளவுகோலில் 5.5 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ஈரானில் 2003ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## மூழ்கியது கப்பல்; 5 பேர் சாவு

### 7 பேரைக் காணவில்லை



வட கடலில் கொள்கலன் கப்பல் ஒன்று மூழ்கியதில் 5 மாலுமிகள் உயிரிழந்தனர். 7 பேர் காணாமற் போயுள்ளனர்.

கொள்கலன் கப்பல் ஒன்று, கார்களை ஏற்றிவந்த படகுடன் மோதியது. நெதர்லாந்துக்கும் பெல்ஜியத்துக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 'பால்ட்டிக் ஏஸ்' என்ற இந்தக் கப்பலிலிருந்த 13 கப்பல் பணியாளர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். 7 பேர் காணாமற் போயுள்ளனர்.

காணாமற் போனவர்கள் உயிர் பிழைத்திருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இரசாயனத் தாக்குதலுக்கு தயாராகும் சிரியப் படைகள்

### ஜனாதிபதி அசாத்தின் இறுதி உத்தரவுக்காக காத்திருப்பு

நியூயோர்க், டிசெ.7

சிரிய இராணுவத்தினர், கிளர்ச்சியாளர்கள் மீது இரசாயனத் தாக்குதலை நடத்துவதற்கு தயார் நிலையில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரசாயனத் தாக்குதலுக்காக சிரிய ஜனாதிபதி அசாத்தின் இறுதி உத்தரவுக்குக்காக இராணுவ அதிகாரிகள் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

"கடந்த புதன்கிழமை 'சரின்' வகை இரசாயப் பொருள் குண்டுகளில் நிரப்பப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை விமானங்களில் ஏற்றப்படவில்லை. நேற்றுமுன்தினம் வரை அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமைக்கான எந்த ஆதாரமும் இல்லை. தொடர்ந்து எமது கவனம் அங்கு குவிந்திருக்கும்" என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, "இந்த வகை இராசாயனப் பொருள் நிரப்பப்பட்ட குண்டுகள், இரசாயனப் பொருள் நிரப்பப்பட்டு 60 நாள்களுக்குள் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் அவை செயல்திறன் அற்றதாகிவிடும். இரசாயனப் பொருள் நிரப்பப்பட்ட குண்டுகள் டமஸ்கஸ், ஹாமா மற்றும் அல்ப்போ ஆகிய, கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளுக்கு அண்மையிலேயே தயார்ப்படுத்தப்பட்டுள்ளது." என்று அமெரிக்க உளவுப் பிரிவை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியுள்ளது.

'சரின்' வகை இரசாயனத் தாக்குதல் இறுதியாக



முன்னாள் ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைனால் 1988 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட் டது. இந்தத் தாக்குதலில் சுமார் 5 ஆயிரம் குர்திஷ் இன மக்கள் கொல்லப்பட்டனர். இதேவேளை, கடந்த வாரம் "சிரிய அரசு சொந்த மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எகிப்தில் மோதல்

### மூவர் உயிரிழப்பு ;350 பேர் காயம்



எகிப்திய தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்ற மோதலில் மூவர் உயிரிழந் தனர். 350 பேர் வரை காய மடைந்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய அரமைப்பு வரைவின் காரண மாகவே எகிப்தில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

எகிப்திய ஜனாதிபதி முஹமட் முர்சியின் ஆதரவாளர்களுக்கும் சர்ச்சைக்குரிய அரசமைப்பு வரைவை எதிர்ப்பவர்களுக்கும் இடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி மாளிகைக்கு வெளியில் தங்களது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக அமர்ந்திருந்த எதிர்க்கட்சியினரை கலைப்பதற்கு ஜனாதிபதி முர்சியின் ஆதர வாளர்கள் முற்பட்டபோதே மோதல் இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி இந்த வன்முறையை ஏற்பாடு செய்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை, கலகத்தை அடக்குவதற்காக கலகம் அடக்கும் பொலி ஸார் அனுப்பிவைக்கப்பட் டுள்ளனர் என்றும் குறைந்தபட் சம் 32 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்றும் அந்த நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## தென்சீனக் கடலுக்கு வரக்கூடாது இந்தியாவை எச்சரிக்கிறது சீனா

சர்ச்சைக்குரிய தென் சீன கடல் பகுதியில் எண்ணெய் வள ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடக் கூடாது என்று இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை விடுத் துள்ளது.

இதுதொடர்பாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹாங் லே நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்த தாவது:-

சீனாவின் தேசிய நலன் மற்றும் இறையாண்மையையும் தொடர்புடைய நாடுகள் மதிக்கும் என்று நம்புவதோடு, குறித்த பகு திக்குட்பட்ட நாடுகள் சர்ச் சையைத் தீர்க்க இருதரப்பு உறவு மூலமாக மேற்கொள்ளப் படும் முயற்சிக்கு மதிப்பு தரும் என்றும் நம்புகிறோம். தென்சீனக் கடல் பகுதியில் சம்பந்தப்பட்ட நாடுகள் சர்ச் சைக்குரிய இந்த விவகாரத்தில் தலையிடுவதை சீனா எதிர்க்கிறது - என்றார்.

இந்தியாவின் பொருளாதார நலன் கருதி, தென் சீன கடல் பகுதியில் கடற்படைக் கப்பலை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று இந்தியக் கடற்படை தளபதி டி.கே ஜோஷி கூறி யிருந்த நிலையில் சீனா இவ்வாறு எச்சரிக்கை விடுத் துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஜோஷியின் கருத்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள் ளதாக சீனாவில் 3 நாள் சுற்றுப் பயணம் மேற் கொண்ட தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கடந்த செவ்வாய்க் கிழமை தெரிவித்தார். மேலும் சீன அதிகாரிகளும் இதுகுறித்து தம்மிடம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

### சர்வதேச நாடுகளை உதாசீனம் செய்து

## ஏவுகணையை வெற்றிகரமாக நிலைநிறுத்தியது வடகொரியா

சர்வதேச நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி, நீண்ட தூரம் செலுத்தக் கூடிய ஏவுகணையை, அதற்கான ஏவு தளத்தில் நிலைநிறுத் தும் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றியது வட கொரியா.

இந்த ஏவுகணை எதிர் வரும் 10ஆம் திகதிக்கும் 22ஆம் திகதிகும் இடைப்பட்ட காலத்தில் இலக்கை நோக்கி ஏவி சோதித்துப் பார்க்கப்படவுள்ளது என்று வட கொரியா அறிவித்திருந்தது.

இதற்கு அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடு கள் கண்டனம் தெரிவித்திருந் தன. ஆனால் அவற்றைப் பொருட்படுத்தாமல், ஏவுக ணையை அதற்கான ஏவு தளத்தில் நிலைநிறுத்தும் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றியது வடகொரியா.



மூன்று நிலைகளைக் கொண்ட உன்ஹா-3 ஏவுகணை சோகா செயற்கைக் கோள் ஏவுதள நிலையத்திலேயே வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. எரிபொருளை நிரப்புவதற்கு முன்பாக ரேடார், கமராக்கள் போன்ற துணை உபகரணங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிலிப்பைன்ஸைஉலுக்கிய புயல்....



பிலிப்பைன்ஸில் 'போபோ' புயலால் பாதிக்கப்பட்ட பகுதி. 'போபோ புயல் காரண மாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300ஐத் தாண்டியுள்ளது.

## உலகின் உயரமான பெண் சாவு

உலகின் மிக உயரமான பெண்மணி என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றிருந்த யாவ் டெபன் (40) உடல் நலக்குறைவால் உயரிழந்தார். கிழக்கு சீனாவில் உள்ள சூசெங்கில் 1972ஆம் ஆண்டு பிறந்த இவர், பிட்யூட்டரி சுரபியின் அபார செயல்பாடு காரண மாக, தனது 15ஆவது வய தில் 6 1/2 அடி உயரம் இருந் தார்.

சமீப காலமாக உயர் ரத்த அழுத்தம், எலும்பு புற்று நோயால் பாதிக்கப்பட்டி ருந்த அவர் சூசெங் நகரில் உள்ள தனது பூர்வீக வீட்டில் உயரிழந்தார்.

யாவ் டெபனின் தலைப் பகுதியில் புற்றுநோய் கட்டி ஏற்பட்டிருந்தது. இந்தக் கட்டி யினால் தூன்ப்பட்ட



பிட்யூட்டரி சுரபி தான் இவரது அதிவேக வளர்ச்சிக்கு கார ணம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இவரின் அதிகபட்ச உய ரம் 7 அடி 8 அங்குலமாகும். உடல் எடையும் 200 கிலோ வாகவும் காணப்பட்டது. 2006 ஆம் ஆண்டு, உலகிலேயே மிக உயரமான பெண்ணாக இவரை அங்கீகரித்து கின் னஸ் புத்தகம் சான்றிதழ் வழங் கியது.

## நடுவானில் பறந்த விமானத்தில் நாகபாம்பு

### அவரசமாகத் தரையிறக்கப்பட்டது



நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத் திற்குள் சுற்றித் திரிந்த பாம் பால் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

எகிப்து நாட்டின் தலை நகர் கெய்ரோவிலிருந்து குவைத் நோக்கி விமானம் ஒன்று புறப்பட்டது.

அந்த விமானத்தில் பய ணம் செய்த பாம்பு வியா பாரி ஒருவர் எகிப்தில் வாங் கிய நாகப்பாம்பை யாருக் கும் தெரியாமல் எடுத்து வந்தார். அந்தப் பாம்பு அவரை கடித்து விட்டது. உடனே அவர் கையை உதறிய போது பாம்பு அவரிடமிருந்து தப்பி விமானத்தில் மற்ற இருக்கை களுக்குக் கீழே சென்று விட்டது.

இதனையடுத்து பாம்பை அவர் பிடிக்க முயன்றார். அப்போது மற்றைய பயணி கள் பீதியடைந்து அலறவே, விமானம் அவசரமாக அல் கர்தாகா நகரில் தரையிறக் கப்பட்டது.

பின்னர் விமானத்தில் சுற்றித்திரிந்த பாம்பு பிடிக் கப்பட்டது.

## தலிபான்கள் தலைமையில் பெண் தற்கொலைப் படை

தலிபான்களின் தலைமை யில் புதிதாக 12 பெண்களை கொண்ட தற்கொலைப் படை அமைப்பு உருவாக் கப்பட்டுள்ளது என்று பாகிஸ் தான் உளவு அமைப்பு எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானில் தெஹ் ரிக்- இ-தலிபான் என்ற தீவிர வாத இயக்கம் அடிக்கடி தற்கொலைத் தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த இயக்கம் இதுவரையிலும் ஆண்கள் மற்றும் குழந்தை களையே தாக்குதல்களுக் குப் பயன்படுத்தி வந்தனர்.

இந்தநிலையில், ''தெஹ் ரிக்-இ-தலிபான் 12 பெண் களை கொண்ட ''ஜன்னாதி கவுதின்'' என்ற தற்கொலைப் படை அமைப்பை உரு வாக்கி உள்ளது. இந்தப் பெண்களுக்கு தலிபான் அமைப்பின் மூத்த தளபதி வாலிஅகாஉமர் பயிற்சி அளித்துள்ளார். தற்போது ஆப்கனின் குணார் என்ற இடத்தில் தங்கியுள்ள இந்தப் பெண்கள், எந்நேரத்திலும் பாகிஸ்தானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தலாம்'' என்று பாகிஸ்தான் உளவு அமைப்பு எச்சரிக்கை விடுத் துள்ளது.

## 3 குழந்தைகளைக் கொன்ற தாய் கைது

மூன்று இளவயது குழந்தை களை நீரில் அமுக்கிக் கொன்ற வழக்கில் தாய் கைது செய்யப்பட்டுள்ளார். கியூபெக் மாகாணத்தில் உள்ள டமன்ட்வில் நகரில் தனது மூன்று பச்சிளம் குழந்தைக ளையும் தாயே நீரில் அமுத்தி கொலை செய்தார்.



கணவன்- மனைவி இரு வரும் விவாகரத்து பெற்றி ருந்த நிலையில், குழந்தை களை பராமரிப்பதற்கு கணவ ருக்கு முழு உரிமையும் வழங்கப்பட்டது.

வார இறுதியில் குழந்தை களை மனைவி பார்த்து செல் வது வழக்கம். குழந்தைகள் தாயுடன் இருக்கும் போது, அவர்களின் பாட்டி மேற் பார்வையிட உத்தரவிடப்பட் டுள்ளது.

இந்தநிலையில் பாட்டி வெளியில் சென்றிருந்த போது தாய் மூன்று குழந்தைகளை யும் கொலை செய்துள்ளார். இந்த வழக்கில் தாயை கைது செய்த பொலிஸார் நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்தி னர்.

இதுகுறித்து பொலிஸார், ''மீண்டும் எதிர்வரும் 14ஆம் திகதி குற்றவாளி நீதிமன் றத்திற்கு வரவேண்டும், மன நிலை சரியில்லாத காரணத் தினால் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும்'' என்று உத்தரவிடப்பட்டுள்ள தாகத் தெரிவித்துள்ளனர்.

எமது பாடசாலை ஆசிரியர் கந்தசாமி ராதாகிருஷ்ணன் B.A.
(இலங்கை வேந்தன்) அவர்களின்
சேவை நலன் பாராட்டு

Best Wishes



சேவை
26.03.1990 - நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
04.04.1994 - யாழ். சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்

ஆரம்பக்கல்வி - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
உயர்கல்வி - யாழ். இந்துக் கல்லூரி
பட்டப்படிப்பு - யாழ். பல்கலைக்கழகம்

எமது பாடசாலையில் நடன, நாடக,சமய, உடற்கல்வி செயற்பாடுகளில் திறம்பட செயற்பட்ட ஆசிரிய சேவையைப் பாராட்டுகின்றோம்.


நடன


நா


சமய


உடற்கல்வி

பாடசாலைச் சமூகம், யா/சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.

(28869)(6.6.7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(46)

நெப்போலியனுக்கு பொழுது போக்காக பில்லியர்ட்ஸ் ஆடுவது என்றால் பிரியம். அவன் மாளிகையில் வேலை பார்த்து வந்த தலைமைப் பணியாளனுடன் அடிக்கடி பில்லியர்ட்ஸ் ஆடுவான். ஆனால் நெப்போலியன் வேண்டு மென்றே தோற்றுப்போய் சிரித்து மகிழ்வானாம். நெப்போலி யனின் இந்த மனப்போக்கு பணியாள்களைக் கூட மிகவும் கவர்ந்தது.



பெண்கள் ஓர் உண்மையை நினைவில் கொள்ள வேண்டும். தமது கணவன் செய்வது சரியே என்று ஒப்புக் கொண்டால் இவர்கள் மண வாழ்க்கை இனியதாக அமையும். கணவன் தவறு செய்தாலும் அதைப் பெரிதுபடுத்தாமல் இருக்கும் பெண்களே மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்.

தவறு செய்யும் கணவனைத் திருத்த முயற்சி செய்வதில் தவறு இல்லை. ஆனால் அதைப் பக்குவமாக உணர்த்த வேண்டும். நீங்கள் செய்வது சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்று சொல்வதை விட, '' நீங்கள் செய்வது சரியா என்று நீங்களே முடிவு செய்யுங்கள். எனக்கு என்ன தெரியும்?'' என்றால் கணவன் தவறு செய்யத் தயங்குவான். 'நான் சொல்வது சரியா தப்பா என்று நீதான் சொல்லேன் என்பான்.

ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியருக்கு அவர் கருத்துக்களை எதிர்த்துச் சில கடிதங்கள் வரும். தன்னைத் தாக்கி எழுதுபவர்களை அவர் கொஞ்சமும் மட்டமாக நினைப் பதில்லை. அதற்குப் பதில், ' மீண்டும் சிந்தித்துப் பார்த் தேன். நீங்கள் சொல்வது சரியாக இருக்கலாம் என்றே தோன்றுகிறது. இந்தப் பக்கம் வந்தால் எங்கள் அலுவல கத்துக்கு வாருங்கள்.பேசுவோம்'' என்று எழுதிப் போடுவார். இதனால் அவர் பத்திரிகையின் விற்பனை பல மடங்கு பெருகியது.

கணவனுக்கும் மனைவிக்கும் தகராறு என்றால், மனைவி தன் தவறுகளை ஒப்புக் கொள்ள வேண்டும். பிறகு ' நான் என் தவறுகளைத் திருத்திக் கொள்கிறேன். உங்கள் விருப்பப்படி நடந்து கொள்கிறேன். நீங்கள் எனக்குப் பிடிக்காத தவறுகளைத் திருத்திக் கொள்கி றீர்களா?'' என்று கேட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

இந்த மாதிரி கோணத்தில் பிரச்சினைகளை நோக்கினால் நாட்டில் விவாகரத்து வழக்குகள் குறைந்து விடும். கணவன் மனைவியை ஒரு வேலைக்காரியாகவோ,அடிமையாகவோ நினைக்கக்கூடாது. தன் வாழ்க்கைத் துணைவி தன் சுகங்களில், துன்பங்களில் அவளுக்கும் சரிபாதி உண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மனைவி புதிய சேலை அணிந்திருக்கிறாளா? அதைப் பார்த்ததும் உடனே பாராட்ட வேண்டும். புது மாதிரி கொண்டை போட்டிருக்கிறாளா? அதன் அழகை இரசிக்க வேண்டும். அவள் செய்யும் பலகாரங்களையும், உணவு வகைகளையும் இரசித்துச் சாப்பிட்டு பாராட்ட வேண்டும்.

மனைவியைப் பாராட்டும் கணவனைத் தான் மனை வியும் புகழ்வாள். கணவனைப் பாராட்டும் மனைவியைத் தான் கணவனும் புகழ்வான். மனைவியைக் கண்டபடி திட்டும் கணவனுக்கு மனைவியே முதல் எதிரியாகி விடுவாள்.

**நீங்கள் பணக்காரர்களாக சில முக்கிய வழிகள்**

பணத்திற்காககப் பிறரை விரும்புபவர்கள் இருக்கி றார்கள். இவர்கள் மற்றவர்களை மதிப்பதில்லை. வாழ்க் கையில் பணம் முக்கியமானது. பணக்காரனாக வேண்டும் என்ற ஆசை பலருக்கு உண்டு. ஆனால் எப்படிப் பணம் சம்பாதிப்பது இலட்சாதிபதியாவது என்பதுதான் தெரிவ தில்லை. பணக்காரனாக வேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர் களுக்கு இதோ சில யோசனைகள். பணத்தை சேமித்தால் மட்டும் போதாது. செலவும் செய்ய வேண்டும். அப்போதுதான் நம்மை மற்றவர்கள் பெரிதாக மதிப்பார்கள்.

லொட்டரியிலோ, குதிரைப் பந்தயத்திலோ, சீட்டாட்டத் திலோ யாரும் பணக்காரனாக முடியாது. சூதாட்டங்கள் மனிதனின் வாழ்வைக் கெடுக்கும்.

பணம் சம்பாதிக்க ஒரு நல்ல தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அல்லது ஒரு வியாபாரத்தைத் தொடங்க வேண்டும். எந்தத் தொழிலிலும் சரி, வியாபாரத்திலும் சரி பணம் சம்பாதிக்க முடியும்.பணக்காரனாக முடியும். ஆனால் ஒன்று தானாகவே எந்தத் தொழிலும், எந்த வியாபாரமும் பணத்தைக் கொடுக்காது. நாம் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

பணக்காரனாக வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் உழைத்தால் மட்டும் போதாது. 48 மணி நேரம் உழைக்க வேண்டும். ''இருப்பதே 24 மணி நேரம். தூங்காமல் ஓய்வு எடுக்காமல் உழைத்தாலும் 24 மணி நேரத்துக்கு மேல் எப்படி முடியும்?'' என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது.

48 மணி நேரத்தில் ஒருவன் எவ்வளவு வேலைகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு வேலைகளை ஒரு நாளைக்குள் செய்து முடிக்க வேண்டும்.

**தமிழ்வாணன்** (தொடரும்)

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கால்நடை வளர்ப்போர் சங்கம் முயல வேண்டும்

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்

அச்சுவேலி,டிசெ.7

கால்நடை வளர்ப்போர் கூட்டு றவுச் சங்கங்கள் மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்துவதற் கான பணிகளில் யதார்த்தபூர்வமாக ஈடுபட வேண்டும்.

கூட்டுறவுத்துறை இலாப நோக்கத்தை மட்டும் கொண்டதாக இல்லாமல் மக்களுக்கான சேவை நோக்கோடு கூடியதாகவும் இருக்க வேண்டும்.

மக்களோடு நெருக்கமான தொடர்பைப் பேணும் நிலையில் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம்.

யாழ்.மாவட்டக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் திருநெல்வேலி யில் உள்ள சமாசப் பணிமனையில் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார் உதவிப்பணிப்பாளர்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சமகாலத்தில் யாழ்.மாவட்டத் தில் காணப்படும் மந்தமானநிலை வர்த்தகத்துறையில் ஏற்படுத் தியுள்ள பாதிப்பு கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபார நடவடிக்கைகளிலும் எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தி குழப்பத்துக்கு உள்ளாக்கி உள்ளது. இதனால் சங்கங்களின் வியாபார நடவடிக்கைகள் மந்த நிலைக்குச் சென்றுள்ளன.

யாழ்.மாவட்டத்துக்கான தனி வழிப்பாதை தடைசெய்யப்பட் டிருந்த காலப் பகுதியில் யாழ். மாவட்ட பண்ணையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் எதிர்பாராத நெருக்கடியைச் சந்திக்க வேண்டியநிலை ஏற்பட்டது.

இந்த நெருக்கடியான வேளை யில் உருவாக்கப்பட்டதே கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

குறித்த காலப்பகுதியில் சமாஜத்தில் பணி முன்னெடுப் புக்கள் காத்திரமானதாக அமைந் திருந்தன. கப்பல் மூலம் கால் நடைகளுக்கான உணவுப் பொருள் களை யாழ்.மாவட்டத்துக்கு எடுத்து வந்து நியாயமான விலைக்குப் பண் ணையாளர்களுக்கும் கால்நடை வளர்ப்போருக்கும் வழங்கியது.

இதன் மூலம்தான் யாழ். மாவட்ட கோழிகள், மாடுகள் பாதுகாக்கப்பட்டன. இந்த விட யத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அளப் பெரும் சேவையாற்றியுள்ளன.

சமாசத்தைப் பாதுகாக்க வேண் டியது உறுப்பினராக இருக்கும் சங்கங்களின் கடமை. சங்க நிர் வாகிகள் இதனை உணர்ந்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். சமாசத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை உரிய முறையில் செலுத்தி, சமாசத்தின் நிதி நிலையைப் பேண வேண்டும்.

கால்நடை வளர்ப்போர் கூட்டு றவுச் சங்கங்கள் மக்களின் வாழ்க் கைத்தர மேம்பாட்டுக்கான மற்றும் பால் உற்பத்திக்கான செயற் பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் இலாப நோக்கத்தை மட்டும் கருத்தில் கொண்டதாக இல்லாமல் மக்களுக்கான சேவை நோக்கைக் கருத்தில் கொண்ட வையாகவும் இருக்க வேண்டும்.

அங்கத்தவர்களோடும், பாவனை யாளர்களோடும் நெருக்கமான தொடர் பைக் கொண்டதாக இருக்க வேண் டும்.- எனக் கூறினார். (ம-11)



லயன்ஸ் கழகத்தின் நெல்லியடிக் கிளை அங்குரார்ப்பணம் அண்மையில் இடம்பெற்றது. அதில் கழக இணைப்பாளர் லயன் வி.பிரகாஷ் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் நெல்லியடி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என்.யோகேந்திரன் உட்பட லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் நிற்கின்றனர். (ம-8)

# ஓய்வு பெற்றார்

நவாலி,டிசெ.7

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கடந்த மாதம் 20 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் சென் றுள்ளார்.

இவர் உள்ளூராட்சி சேவையில் கடந்த 35 வருடங்கள் சேவை யாற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-100)

# பிள்ளைகளை நற்பிரஜைகளாக்க பெற்றோர் ஒத்துழைப்பு அவசியம்

## பரிசளிப்பு விழாவில் ஸ்கந்தா அதிபர்

யாழ்ப்பாணம்,டிசெ.7

பெற்றோர் தமது பிள்ளை களைப் பாடசாலைக்கு அனுப்பும் போது, பிள்ளைகள் தமது வாழ்க் கையைத் தாமே முன்னெடுத்துச் சென்று சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழக்கூடிய நற்பிரஜைகளாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப் பையே கொண்டிருக்கின்றனர்.

இதனை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக நல்லொழுக்கம் உள்ள பிரஜையாக உருவாக்குவ தற்காகப் பாடசாலை தனது முழுப் பொறுப்பையும் செய்கின்றது.

இவ்வாறு ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் இராமநாதன் ஈஸ்வரதாசன் தெரிவித்தார்.

அண்மையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற பரி சளிப்பு விழாவில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

எந்தெந்த வகையில் மாணவரை அணுகி அவர்களை நற்பிரஜைகள் ஆக்கவேண்டுமோ அந்தந்த வகை யில் ஆசிரியர்கள் திருத்துகிறார்கள். சமூ, வேத, தண்டனை ஆகிய செயற் பாடுகள் மூலம் திருத்த ஆசிரியர்கள் முயற்சிக்கின்றார்கள். இது மாண வர்கள் தம் பிழையை உணர்ந்து திருந்துவதற்கே என்பதைப் பெற் றோர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் செயற்பாடு களை விமர்சிப்பதை விட்டு, அவர் களோடு இணைந்து பிள்ளைகள் நலனுக்காக ஒத்துழைக்க வேண்டும்.

இன்றைய நிலையில் பாட சாலை மாணவர்களிடையே ஒழுக் கமின்மை மிகவும் பெரிய விளைவு களைச் சமூகத்தில் ஏற்படுத்துகிறது.

இன்றைய மாணவர்கள் இடையே ஒதுங்கி வாழுதல், திடீர் முடிவுகளை மேற்கொள்ளல், கற்றலில் ஈடுபாடு குறைதல், பாடசாலைச் சமூகத் துடன் நல்லுறவைப் பேணாமை, பெற்றோர் பெரியோரை மதிக்காது முரண்படுதல், இலத்திரனியல் ஊடகங்களில் ஈடுபாடு, போதை வஸ்து பயன்பாடு என்பவை பெரிய பிரச்சினைகளாக உள்ளன. இவை கிராமப் புறங்களைவிட நகர்ப்புற மாணவர்களிடையே அதிகம் காணப்படுகின்றன.

பிள்ளைகளின் எதிர்கால நன் மைகளைக் கருத்தில் கொண்டு பெற்றோர், அதிபருக்கும் ஆசிரியர் களுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.-என்றார். (ம-36)

# வாசிப்பு மாத போட்டி முடிவு

வரணி,டிசெ.7

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணி பொது நூலகத்தால் பாடசாலை மாண வர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:-

**கட்டுரைப்போட்டி**

**பிரிவு-1**

த.சங்கீதன்-வரணி வடக்கு அ.த.க.பா, ர.டனுஸ்ரன்-வரணி வடக்கு அ.த.க.பா, வ.நிறோசன்-வரணி வடக்கு அ.த.க.பா, பி.நிதர்சிகா- மந்துவில் றோ.தக.பா.

**பிரிவு 2**

கு.கார்த்திகா-வரணி ம.வி, பா.கார்த்திகா-வரணி ம.வி, ஜீ.சப்தமுகி-வரணி ம.வி, ந.பவித்திரா- மந்துவில் றோ. த.க.பா.

**பிரிவு-3**

வே.கோகுலன்-வரணி ம.வி, ந.தர்மிகா-கரம்பைக் குறிச்சி அ.த.க.பா, சி.கிருஸா யினி-வரணி ம.வி.

**பிரிவு-4**

இ.தனுஜன்-வரணி ம.வி, ஞா.சவுந்தர்யா-இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி, த.தனு ஸன்-வரணி ம.வி.

**பிரிவு-5**

வி.வினோசா-வரணி ம.வி, அ.கார்த்திகா-வரணி ம.வி, வ.விதுஜா-வரணி ம.வி.

**வாசகருக்கான பொது அறிவுப் போட்டி**

செ.உதயமோகன்-கரம்பைக் குறிச்சி மேற்கு வரணி, சி.தர் சினி- இயற்றாலை வரணி, ப.ஜீவானந்தன்-நாவற்காடு வரணி. (ம-122)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா கிந்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311


## நல்லிணக்கம் பஸ்ஸில் மட்டுமா?

''திருக்குறளை எழுதியவர் யார்?'' கேட்டுவிட்டு ஆசிரியர் மாணவர்களை பார்த்தார். எவருக்கும் விடை தெரியவில்லை. எல்லோரும் 'திரு திருவென' முழித்தனர். ஒரு மாணவனுடைய முகம் சட்டென பிரகாசமாகியது. கையை உயர்த்தினான். அவனை பதில் சொல்லுமாறு ஆசிரியர் சைகை காட்டினார்.

''திருக்குறளை எழுதியது என் அப்பா தான்'' என்று பெருமையோடு சொன்னான். ஆசிரியருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. 'இவன் என்னை கிண்டல் பண்ணுகிறானோ?' என்று எண்ணியவராக, ''என்னடா உளறுகிறாய்? திருக்குறளை எழுதியது உன் அப்பாவா?'' என்று கடும் தொனியில் கேட்டார்.

''ஆம். அவர் தான். எல்லா பஸ்ஸிலும் திருக்குறளை 'பெயின்ரால்' [வர்ணப்பூச்சால்] எழுதியது அவர் தான்.'' என்று மாணவன் சொல்ல, ஆசிரியருக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

தமிழகத்தில் அதிகம் பிரபலமான ஆசிரியர் – மாணவர் நகைச்சுவைகளில் மேற்குறித்த சம்பவமும் ஒன்று. பஸ்களில் எல்லா அறிவித்தல்களும் கட்டாயமாக மும்மொழிகளிலும் எழுதப்படவேண்டும் என்ற உத்தரவை அரசு விடுத்துள்ளதை கேட்டபோது இந்த நகைச்சுவையே மனதுக்குள் வந்தது.

மும்மொழிக்கொள்கை என்பதை அரசு உதட்டளவில் தான் சொல்லிக்கொண்டே இருக்கிறதே தவிர அதனை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை. மிகமுக்கியமான – அவசரமான – ஆவணங்களைக்கூட தனிச் சிங்களத்தில் அனுப்பி தன்னுடைய பேரினவாத முகத்தை அடிக்கடி அரசு காட்டத்தவறுவதில்லை. இவ்வாறு தனிச் சிங்களத்தில் வரும் அறிக்கைகள், சுற்றுநிருபங்கள், கடிதங்கள் என்பவற்றை மொழிபெயர்த்து, அதனை விளங்கிக்கொள்வதற்கிடையில் பலரது முழிபெயர்ந்து போய்விடுகிறது. காலமும் கடந்துவிடுகிறது. இவ்வாறு மொழி ரீதியான புரிதல் பிரச்சினை காரணமாக வாழ்வின் பல அரிய சந்தர்ப்பங்களை – வேலை வாய்ப்பு, பதவி உயர்வு, கல்வி நிறுவன அனுமதி போன்றவற்றை – தவறவிட்ட தமிழர்களின் எண்ணிக்கை ஏராளம்.


மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் இனப்பிரச்சினை எரிந்தமைக்கு மூலகாரணம் மொழிப்பிரச்சினை தான். தனிச்சிங்களத் தேசமாக இலங்கையை உருவாக்கும் பேரினவாதக் கனவே இன்றைக்கும் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாத அளவுக்கு சிக்கலாக்கி உள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளும், சர்வதேச நாடுகளும் ''மும்மொழிகளுக்கும் சம உரிமை'' என்பதை வலியுறுத்துகின்றன.

சர்வதேசத்தின் நச்சரிப்பைத்தாங்க முடியாமற்றான் இந்த வருடத்தில் மும்மொழிக் கொள்கையை இலங்கை அரசு நடைமுறைக்கு கொண்டு வந்தது. அதற்கான அங்குரார்ப்பண விழாவும் வெகு விமரிசையாக நடந்தேறியது. ஆனால் அதற்குப் பின்னர் மும்மொழிப் பரவுகையை ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது என்பது எவருக்குமே தெரியவில்லை. இப்போதும் அரச அலுவல் தொடர்பான முக்கிய கடிதங்களும் சுற்றுநிருபங்களும் தனிச்சிங்களத்தில் வருவது தொடர்கிறது.

இதனைவிட தமிழர் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துவது அரிதாகவே காணப்படுகிறது. அண்மையில் பொலிஸில் சேர்க்கப்பட்ட தமிழர்களையாவது பொலிஸ் நிலையத்தில் உட்காரவைத்தால், முறைப்பாடு செய்யச்செல்லும் பொது மக்களின் மொழி ரீதியான தொடர்பாடல் பிரச்சினையை நீக்கமுடியும். ஆனால் அவ்வாறு செய்ய அரசுக்கு மனம் வரவில்லை. இப்போது தமிழ் மொழி பற்றிய அரைகுறை பரிச்சயம் கொண்ட அல்லது அறவே தமிழ் தெரியாத பொலிஸாரே அலுவலகங்களில் கடமையில் இருக்கின்றனர். இதனால் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் மக்கள் தமது பிரச்சினைகளை முறையிடவோ தீர்வைப்பெறவோ முடியாத நிலையே இருக்கிறது. மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூட இடையூறுகள் தொடரும் இலங்கையில், பஸ்களில் மட்டும் மும்மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்த அரசு எண்ணுகிறது. ஆனால் மக்களுக்கு பஸ்களில் மட்டும் மும்மொழிக்கு சம உரிமை தேவையில்லை. அவர்களுக்கு தேவையான விடயங்களிலேயே இந்தக்கொள்கையை பிரயோகிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லாவிட்டால் ''எங்கட அப்பாதான் எல்லா பஸ்ஸிலையும் மூன்று மொழிகளிலும் அறிவிப்புகளை எழுதியவர். எனவே அவர் தான் இலங்கையில் நல்லிணக்கத்தை கொண்டு வந்தவர்.'' என்று எங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் சொல்லும் நிலைமை வந்தாலும் வரலாம்.

# வடக்கின் புலிகளும் தெற்கின் நாங்களும்



வடபகுதியில் போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களிலிருந்து அவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி சகல நலன்புரி நிலையங்களையும் மூடிவிட்டதாக அரசு கூறிக் கொள்கிறது. ஆயினும் மீளக்குடியமர்த்தப்பட்டோர் கொதிக்கின்ற எண்ணெய்ச் சட்டியிலிருந்து தப்பிக்க எரியும் அடுப்பின் நெருப்புக்குள் பாய்ந்த நிலையில் உள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

■ *தமிழில்: வி.எஸ்.ரி.*

(கடந்த 29.11.2012 ஆம் திகதிய 'மவ்பிம' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம்)

*''வாடிப்போன மலர் மீண்டும் துளிர்த்துள்ளது'' 90 களின் ஆரம்ப கால கட்டத்தில் இருந்தாற் போலிருந்து ஒருநாள், தென்பகுதியின் பல இடங்களில் மேற்கண்ட வாசகம் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஆயுதமேந்திப் போராடி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்று, ஜனாதிபதி பிரேமதாசவின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசால் பச்சை பச்சையாகவே கொன்றொழிக்கப்பட்ட ஜே.வி.பியின் ஆதரவாளர்களே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருந்துசெயற்பட்டிருந்தனர். 1989 ஆம் ஆண்டில் வேரோடு களையப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்ட ஜே.வி.பி., அதற்கு ஐந்து ஆண்டுகள் கழித்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியொன்றுடன் மீண்டும் இலங்கை அரசியல் களத்தில் பிரவேசித்தது.*

*தனியான இராச்சியமொன்று கோரி, மூன்று தசாப்த காலமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஒழித்துக்கட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசால் முடிந்தது. ஆனால், முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் இறுதித் தோல்வியின் மூன்று ஆண்டுகள் கழியும் இன்றைய நிலையில், விடுதலைப் புலிகளின் பெயரில் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் அண்மையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. 'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்' என்ற வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. சிங்கள இனவாத அரசியல் நிர்வாகத்தால் கசக்கிப் பிழியப்பட்ட நிலையிலுள்ள இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு, ஏற்படுத்தப்பட்ட அநியாயங்கள் அதிகரித்துள்ளன. போர் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு [illegible] ளர்கள் காலத்தை இழுத்தடிக்கிறார்கள் என்பதும் - இதிலிருந்து புலனாகிறது.*

*போரில் உயிரிழந்த தமது அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூரும் மாவீரர் தினத்தை முன்னிட்டே விடுதலைப் புலிகள் அமைப்பு குறிப்பிட்ட இந்தத் துண்டுப் பிரசுர விநியோகம் மற்றும் சுவரொட்டி ஒட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஜே.வி.பி. கிளர்ச்சிகளின்போது உயிரிழந்த அதன் உறுப்பினர்களை நினைவுகூரும் நினைவு நாள் அண்மையில் பெரிய அளவில் கொண்டாடப்பட்டது.*

*வடபகுதியைப் போன்றே தென்பகுதியிலும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு மரணித்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் விடுதலை வீரர்களாக கருதப்பட்ட அதேவேளை, பிறிதொரு தரப்பினர் அவர்களைத் துரோகிகளாகக் கருதினர். அரசுக்கு எதிராகச் செயற்பட்டோர் வீரர்களா? துரோகிகளா? என்பதை வரலாறு தான் தீர்மானிக்கும்.*

*இங்கு கேள்விக்குரிய விடயமே வேறு.*

*தமிழ் மக்களது போராட்டத்தைப் புரையோடிப் போனதொரு நோயெனக் கூறி, கடுங்கோட்பாட்டுப் போக்குக் கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்தொழித்த போதும், போர் முடிவுற்று மூன்றாண்டுகள் கழிந்த நிலையிலும் தமிழ் மக்களது பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதில் நாம் இது வரை தோல்வி கண்டுள்ளோம். இதன் காரணமாக, எமது இந்தத் தாமதத்தை, அலட்சியத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி, தமிழ் நாட்டின் தமிழ்க் கடுங்கோட்பாட்டுத் தரப்பினரும் புலம்பெயர் தமிழ் கடுங்கோட்பாட்டுத் தரப்புக்களும் வடபகுதியில் தமிழ் மக்களுக்கெனத் தனியான அரசொன்றை நிறுவுவதற்கான முனைப்புகளில் கடும் அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகின்றனர்.*

*வடபகுதியில் போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களிலிருந்து அவர்களை, அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி சகல நலன்புரி நிலையங்களையும் மூடிவிட்டதாக அரசு கூறிக் கொள்கிறது. ஆயினும் மீளக்குடியமர்த்தப்பட்டோர் கொதிக்கின்ற எண்ணெய்ச் சட்டியிலிருந்து தப்பிக்க எரியும் அடுப்பின் நெருப்புக்குள் பாய்ந்த நிலையில் உள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.*

*தமிழ்க் கிராமங்களின் பெயர்களைச் சிங்களப் பெயர்களாக மாற்றியமைப்பதாகவும், தமிழ்ப் பகுதிகளில் இடத்துக்கிடம் புத்தர் சிலைகளை நிறுவி தமிழ் மக்களது கலாசாரத்துக்கு ஊறு ஏற்படுத்துவதாகவும் கூட விமர்சனங்கள் வெளியாகின்றன. வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்தாது பிற்போடுவதன் மூலம் வடபகுதியை இராணுவ நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்து நிர்வகிப்பதான குற்றச்சாட்டு, அரசுக்கு எதிராக தமிழ் மக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் மிக முக்கியமானதொன்று. அதுமட்டுமன்றி அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கூறும் அரசில், அதனை அரசமைப்பிலிருந்து நீக்கி விட வேண்டுமெனத் தெரிவிக்கும் தரப்பினரும் அங்கம் வகிப்பதும் முக்கிய அம்சமொன்றாகும்.*

*அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதிகாரப் பகிர்வை வழங்குவதை தென்பகுதி சிங்கள கடுங்கோட்பாட்டுத் தரப்பினர் எதிர்ப்பார்களானால் வடபகுதித் தமிழ்க் கடுங்கோட்பாட்டாளர்கள் தனிநாடு கோருவதோ, அதற்காக எதிர்காலத்தில் தமிழ் இளைஞர்கள் மீண்டும் கிளர்ந்தெழுவதோ இயலாததொரு காரியமல்ல. எந்தவொரு இனத்துக்கும் தனியான கௌரவமென்று ஒன்றுண்டு. அந்தக் கௌரவத்தை உணவு, தண்ணீர், இருப்பிடம், போக்குவரத்துக்காகவோ, பணத்துக்காகவோ கைவிட இயலாது. தமிழ் மக்களது கௌரவம் முப்பதாண்டு காலப் போரால் சீரழிந்து போயுள்ளது.*

*தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதாகக் கூறிப் போரில் ஈடுபட்ட கடுங்கோட்பாட்டுத் தரப்பினரான விடுதலைப் புலிகளும் கூட இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.*

*காரணமொன்றில்லாமல் பலாபலனெதுவும் ஏற்படாது என புத்த பெருமான் உபதேசித்துள்ளார். அவரது உபதேசத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு தமிழ் மக்களது பிரச்சினைக்கு இப்போது தானும் தீர்வொன்றை வழங்காது புலித் தோலுக்கு அடிக்குமேல் அடிப்பதால் பலனேதும் கிட்டப் போவதில்லை. அத்தகைய ஞானசூனியப் போக்கின் இறுதிப் பலாபலன், மீண்டும் சகலவற்றையும் ஆரம்பத்திலிருந்து ஆரம்பிப்பதாக மட்டுமே அமையும். அதற்கான சமிக்ஞை வடபகுதியில் தென்பட ஆரம்பித்துள்ளது. இதனை நாம் உணராதிருப்பது பாரதூரமான குற்றமாகும்.* ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார சீரழிவற்ற சிறந்ததொரு குடாநாட்டை உருவாக்குவோம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கலாசாரம் சீரழிகிறது. வன்முறைகள் இடம்பெறுகின்றன; பெண்கள் சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. பெண்களுடன் ஆண்கள் சேஷ்டை விடுகின்றனர்; பாலியல் துஷ்பிரயோகங்கள் நிகழ்கின்றன. என்பதுதான் தற்போது குடாநாட்டு மக்கள் மத்தியிலும் பத்திரிகைகளிலும் பேசப்படுகின்ற முக்கியமான செய்திகள். எல்லோரும் இதை ஓர் அபாயமான செய்தியாகப் பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர இவ்வாறு சீரழிவுகள் இடம்பெறுவதற்குக் காரணம் என்னவென ஆராய்வதில்லை. ஆனால் ஆராய்ந்து பார்த்தால் பலதரப்பட்டவர்கள் இதற்குக் காரணமாக உள்ளனர். அவர்களில் பெற்றோர் பிரதான காரணிகளாக உள்ளனர் என்பது தெளிவாகப் புரியும். இதற்காக எல்லாப் பெற்றோரையும் குறைகூறிவிட முடியாது. சில பெற்றோர் பிள்ளைகளை வளர்க்கும் முறையில் உள்ள குறைபாடுதான் இதற்குக் காரணமாய் இருக்கிறது.

பிள்ளைகள் சிறுவயதிலேயே கைத்தொலைபேசியைப் பயன்படுத்த அனுமதி கொடுப்பது பெற்றோர்களின் தவறு. அடுத்து அவர்கள் யாருடன் பேசுகிறார்கள். கைத்தொலைபேசியை எவற்றுக்கெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பிரதானமாகக் கவனிக்க வேண்டும். இதனைவிட இணையத்தைப் பயன்படுத்தும் பிள்ளைகள் இணையத்தில் எவற்றைப் பார்வையிடுகின்றனர். பேஸ்புக் வைத்திருந்தால் அதனைப் பாதுகாப்பான முறையில் பேணுகின்றார்களா? பேஸ்புக் இல் யாரை எல்லாம் நண்பர்களாக இணைத்துள்ளனர் என்பதை அவதானித்து நல்வழிப்படுத்த வேண்டும். பேஸ்புக் இல் எல்லோரும் பார்க்கும் விதமாக தமது படங்களை இடுகை செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இன்று அநேக பிரச்சினைகள் கைத்தொலைபேசி, இணையம் மூலமாகவே உருவாகின்றன.

ஆண்பிள்ளைகள் யாருடன் நட்பு வைத்துள்ளார்கள்? அவர்கள் நல்லவர்களா? இவனது வயதை ஒத்தவர்களா? இவன் நண்பர்களுடன் சேர்ந்து என்னென்ன செயல்களில் ஈடுபடுகின்றான் என்பதைக் கண்காணிக்க வேண்டும். ஏனெனில் வயது கூடியவர்களுடனும் தீயவர்களுடனும் வைத்திருக்கும் நட்பு தங்கள் பிள்ளைகளையும் குடிப்பழக்கத்துக்கும் புகைப்பழக்கத்துக்கும் பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கும் அடிமையாக வைக்கிறது. நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கண்டிக்காது விடின் அவர்கள் எதிர்காலத்தில் இன்னும் எத்தனை பிள்ளைகளைத் தம்மைப் போல் தவறான வழிகளுக்கு இட்டுச் செல்வார்கள் என்பதைச் சிந்தித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். தங்கள் பிள்ளைகள் காரணமின்றி இரவில் தாமதமாக வீட்டுக்கு வந்தால் அவர்களைக் கண்டிக்க வேண்டும். இத்தகைய தவறுகள் இடம்பெறுவதற்கு மேன்மேலும் இடங்கொடுத்தால் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் இருள்மயமானதே என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

பெண்பிள்ளைகளின் நடை, உடை, பாவனைகளும் கலாசார சீரழிவுக்கு ஏதுவாக அமைகின்றன. இன்று அடக்கமான ஆடைகளுடன் உலாவரும் பெண்கள் எத்தனை பேர்? இறுக்கமான, ஆழமான கழுத்துள்ள ஆடைகளை அணிவது இன்று நாகரிகம் என்று கூறிக் கொண்டு அநேக பெண்கள் தமது மானத்தை தாமே விற்கின்றனர். உதாரணமாக பெரிய அளவு உடை அணிய வேண்டியவர்கள் நடுத்தர அளவு உடை அணிகிறார்கள். இவ்வாறு அணிந்து கொண்டு கவர்ச்சியாகத் திரிகின்றனர். இன்றைய பெண்கள் மூலைக்கு மூலை அழகு நிலையங்கள் உருவாக்கிவிட்டனர். பெண்பிள்ளைகள் பாடசாலைக் காலத்திலேயே தம் இயற்கை அழகை முற்றிலும் மாற்றி செயற்கையழகை நாடுகின்றனர். இதற்காக முக அலங்காரம் செய்வதிலும் இமைகளை அழகு செய்வதிலும் தலைமயிரை தமது விருப்பத்துக்கு ஏற்ப அழகுபடுத்துவதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு செய்து கொள்வதன் மூலம் இன்று 15 வயதுப் பிள்ளைக்கும் 25 வயதுப் பிள்ளைக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு முகம் மாற்றமடைகிறது. தம்மைச் செயற்கையாக அழகுபடுத்திக் கவர்ச்சியாக ஆடை அணிந்து உலாவந்தால் எதிர்ப்பாலார் இவர்களை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்கத்தான் செய்வார்கள். நாலு வார்த்தை கிண்டலாகக் கூறத்தான் செய்வார்கள். பின்பு தம்மில் பிழையில்லாதது போல் எதிர்ப்பாலாரின் தலையில் பழிசுமத்தி விடுகிறார்கள். கவர்ச்சி காட்டுவதுதான் அழகு என்று இன்றைய பெற்றோரும் பெண்களும் நினைக்கின்றனர் போலும். அதனால்தான் அடக்கமான ஆடைகளாகக் கருதப்பட்ட சல்வார், சாறி என்பவற்றைக் கூடக் கவர்ச்சியாக அணியத் தொடங்கிவிட்டனர். இதனால் தம் பிள்ளைகளின் மானம் தான் விலை போகிறது என்பதை உணர்ந்து பெற்றோர் இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

அநேக பாடசாலை மாணவர்கள் இன்று கைத்தொலைபேசியைப் பாடசாலைக்குக் கொண்டு செல்கின்றனர். இதற்கு ஆதாரம் மாணவர்களின் பேஸ்புக்கில் அவர்கள் இடுகை செய்துள்ள தமது வகுப்பறைகளிலிருந்து எடுத்த (கேலிக் கூத்தாடும்) புகைப்படங்கள் ஆகும். இதனைக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரியர்கள் மூலமாகக் கண்காணித்து பாடசாலைக்குள் கைத்தொலைபேசியுடன் மாணவர்கள் செல்வதை முற்றிலும் தடை செய்தல் வேண்டும்.


**மாணவிகளுக்கானவை**

முழங்காலுக்குக் கீழ் நிற்கக் கூடியவாறு சீருடை அணிதல் கட்டாயமாக்கப்படல் வேண்டும். தலைமயிரை செயற்கை அலங்கரிப்பு எதுவுமின்றி ஒழுங்காக வாரிக் கொள்ளுதல், பல்வேறு வர்ணங்களிலான கிளிப் போன்றவற்றை அணிவதை தடுத்தல், நகங்களுக்கு மருதாணி உட்பட வர்ணம் பூசுதலைத் தடுத்தல், இந்து மாணவிகள் அனைவரும் கறுத்த வட்டப் பொட்டு வைத்தல், இமை அழகு செய்வதையும் முகஅலங்காரம் செய்வதையும் தவிர்த்தல், சீருடையை இறுக்கமாக அணிவதைத் தடுத்தல், தூக்கணம் போன்ற தோடு வகைகளையும் மூக்குத்தி தவிர்ந்த வேறு ஆபரண வகைகளையும் அணிவதைத் தடுத்தல்.

**மாணவர்களுக்கானவை**

சட்டையகழுத்துப்பட்டி அணிதல், சேட்டை காற்சட்டைக்குவெளியே விட்டுக் கொண்டு வருவதைத் தடுத்தல், தலைமுடியை அதிகம் வளர்த்தல், ஸ்ரைலாக வெட்டுதல், நிறம் பூசுதல் என்பவற்றை தடுத்தல், எவ்வித ஆபரணமும் அணிவதைத் தடை செய்தல்.

அனைத்துப் பாடசாலைகளிலும் இவ்வாறான விதிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்தால் நிச்சயம் ஒழுக்கமான மாணவர்களை உருவாக்க முடியும். இதன் மூலம் குடாநாடு கல்வியிலும் பழைய நிலையை அடைய முடியும். பெற்றோர், கல்விச் சமூகத்தவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு கலாசார சீரழிவற்ற சிறந்ததொரு குடாநாட்டை உருவாக்க ஒன்றிணைவோம்.



■ தவபாணி

# உல்லாசப் படகாக அம்புலன்ஸ்...!

■ வந்தியத்தேவர்

ஈ கடித்த புண்ணுக்கு இழைப் பிடித்த மாதிரி என்று ஒரு சின்ன நோய்க்கும் பெரிய வைத்தியம் செய்யும் செயற்பாடுகளைக் கிராமப்புற மக்கள் இப்படிச் சொல்வது வழக்கம். இதில் உண்மையும் இல்லாமலில்லை. அந்தக் காலத்தில் சாதாரண ஒரு சிறிய வியாதி என்று போனால் அதற்கான சில மாத்திரை மருந்து வகைகளைக் கொடுத்து அனுப்புவார்கள். இன்று ஒருவர் சின்னத் தலையிடி என்றாலும் இரத்தத்தைச் சோதி, கொலஸ்ரோல் பார், எக்ஸ்ரே எடு, ஈ.சி.ஜி.யைச் செய் என்று அவரை முழுமையான நோயாளியாக்கி காலமெல்லாம் குளிசையுடன் வாழ வைத்து விடுவது மருத்துவத் துறையின் நவீன வளர்ச்சியாகிவிட்டதாகக் கிராம மக்கள் கருதுகிறார்கள்.

நெடுந்தீவிலும் இப்போது இந்த மாதிரியான வைத்திய முறை கையாளப்படுகிறதோ என மக்கள் விசனிக்கிறார்கள். அங்கு இதுபோன்ற செதிகள் இன்மையால் சாதாரண தலையிடி, சாடையான ஒரு காதுக்குத்து என்று வைத்தியசாலைக்குப் போனால் அந்த நோயாளியைப் பிடித்து யாழ்ப்பாணத்துக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி விடுகிறார்கள். என்ன இது ஒருசின்ன விடயத்துக்கு அம்புலன்ஸில் அனுப்புகிறார்களே என்று ஆராய்ந்து கொண்டு போனால் அதற்கான மூலத்தைக் கண்டு கொள்வது என்றும் பெரிய விடயமல்ல என்பது தெளிவாகின்றது. வைத்தியசாலையில் உள்ள ஒரு பணியாளர் அவசரமாக யாழ்.நகர் செல்ல வேண்டியிருந்தால் ஒரு நோயாளியைப் பிடித்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு போக வேண்டும் என்று க[illegible] புலன்ஸ் படகில் ஊ[illegible] சௌகரியத்துக்காக நோயாளியையும் தூக்கிப் போட்டுக் கொண்டு போகிறார்கள். ஆனால் மிகவும் கடுமையான வியாதி தவிர, சாதாரண சிறிய நோய் உள்ளவரை குமுதினியிலேயே அனுப்பி வைக்க முடியும். 1980 ஆண்டு காலப் பகுதியில் இவ்வாறுதான் நடைமுறை இருந்தது. இப்போது அம்புலன்ஸ் படகு ஒன்று இருக்கிறது என்பதற்காக நோயாளியின் பெயரால் அதை ஓர் உல்லாசப் படகாகவே பயன்படுத்துகிறார்கள்.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு யாழ்ப்பாணம் போக வேண்டியிருந்தது. அவர் குமுதினி படகில் தனது பயணத்தை மேற்கொண்டிருக்கலாம். குமுதினியில் பயணித்தால் மரியாதைக் குறைவாகிவிடும் என நினைத்தார்களோ என்னவோ [illegible] காக என்று அம்புலன்ஸ் படகில் ஊழியருடன் அனுப்பி விட்டனர். வைத்தியசாலை ஊழியரும் பெருமையாக குறிகாட்டுவானுக்குச் சென்று இறங்கும் கனவில் பயணத்தைத் தொடர்ந்தார்.

அம்புலன்ஸ் படகு நெடுந்தீவில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் காற்றாடி பெல்ற் அறுந்ததில் கடலில் கஷ்டப்பட அதை அறிந்த கடற்படையினர் அம்புலன்ஸ் படகை இழுத்து வந்து அப்போதுதான் பயணிகளுடன் குறிகாட்டுவானுக்குச் சென்று கொண்டிருந்த குமுதினிப் படகில் இந்துப் பிரமுகர்களை ஏற்றி உதவினர். 2 மணி நேரம் வரை கடலில் அல்லாடிக் கொண்டிருந்ததுதான் மிச்சம்.

இதெல்லாம் தேவைதானா? நெடுந்தீவில் பல்சிகிச்சைக்காக வரும் வைத்திய அதிகாரி வாரத்தில் ஒரு தடவை அங்கு வந்து உடனேயே திரும்பி விடுகிறார். அவர் காலை குறிகாட்டுவானில் இருந்து புறப்படும் பயணிகள் படகில் நெடுந்தீவுக்கு வந்து பிற்பகலில் பயணிகள் படகில் மீண்டும் குறிகாட்டுவான் செல்ல முடியும். அம்புலன்ஸ் படகு அவரை நெடுந்தீவுக்குக் கொண்டு வந்து மீண்டும் குறிகாட்டுவான் கொண்டு சென்று இறக்கிவிட இரண்டு தடவைகள் ஓட வேண்டியுள்ளது. நெடுந்தீவு குறிகாட்டுவான் வழித் தடத்தில் இதற்கான செலவு 8,000 ரூபா ஆகும்.

ஓர் உத்தியோகத்தர் பயணிப்பதற்காக சாதாரண ஒரு நோயாளியை அவருக்குக் கடுமை என்று ஒரு நாடகமாடி உத்தியோகத்தர்கள் உல்லாசப் பயணிகளாக மாறுவது ஏற்புடையதல்ல. சின்ன ஒரு தலையிடிக்குக் கூட யாழ்ப்பாணம் சென்றுதான் சிகிச்சை பெற வேண்டும் என்றால் பெயருக்கு ஓர் ஆஸ்பத்திரியை வைத்து அங்கேயும் ஓர் ஆஸ்பத்திரி இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பது அர்த்தமில்லாதது. உண்மைகளைச் சொல்லாதீர்கள். சொன்னால் வேலைக்கு ஒருவருமே வரமாட்டார்கள் என்றால் அதுவும் நியாயமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறந்த ஓவியம்

ஓர் ஊரில் மன்னர் ஒருவர் ஆட்சியில் இருந்த வேளை அவருடைய அரசவைக்கு ஓவியன் ஒருவன் சென்றான். அவன் சீனாவிலிருந்து வந்தவன். அவன் தாவோ சிந்தனையாளன். மன்னர் முன்பாக போய் நின்றான்.

''யாரும் செய்ய முடியாத ஒன்றை என்னால் செய்ய முடியும்!'' என்றான்.

அவன் அப்படிச் சொன்னதைக் கேட்டதும் ஏற்கனவே அங்கே இருந்த அரசவை ஓவியன் ஒருவனுக்குக் கோபம் வந்தது.

''இதோ பார்... இப்படியெல்லாம் பேசக்கூடாது. நான் வேணும் என்றால் உன்னுடைய சவாலை ஏற்றுக்கொள்கின்றேன்.

நாம் இரண்டு பேரும் ஓவியம் தீட்டுவோம். அதைப் பார்த்துவிட்டு நம் இரண்டு பேரில் யார் சிறந்த ஓவியன் என்பதை மன்னரே தீர்மானிக்கட்டும். என்ன சொல்கின்றாய்'' என்றான். அவனும் சரி என்று ஒப்புக் கொண்டான். போட்டி ஆரம்பமாகியது.

அரசர் அவர்களுக்கு இரண்டு சுவர்களை ஒதுக்கிக் கொடுத்தார். ஆறுமாத காலம் அவகாசம் கொடுத்தார். இரண்டு ஓவியர்களும் அவரவர் வேலையை ஆரம்பித்தனர். இரவு பகலாக வேலை செய்ய ஆரம்பித்தனர். ஆறுமாதம் முடிந்தது.

அரசர் வந்து பார்த்தார்.

முதலில் தன்னுடைய அரசவை ஓவியர் தீட்டியிருந்த ஓவியத்தைப் பார்த்தார். மிகவும் நன்றாக இருந்தது. பாராட்டினார்.

இதோபார்.... உன்னுடைய ஓவியம் அற்புதமாக இருக்கின்றது. உயிரோட்டமுள்ளதாக இருக்கின்றது. கலையின் உச்சமே இதுதான். இதைவிடச் சிறந்த ஓர் ஓவியத்தை வேறு யாராலும் படைக்க முடியாது!'' என்றார்.

அதன்பின்னர் அந்த சீன ஓவியனிடம் போனார். ''எங்கே உன்னுடைய ஓவியம்'' என்றார். மன்னர் திரைச்சீலையை விலக்கினார். உள்ளே ஓவியம் இருக்க வேண்டிய இடம் கண்ணாடி மாதிரித் தெரிந்தது.

அவன் அந்த ஆறு மாத காலமாக அந்தச் சுவரைத் தேய்ச்சு தேய்ச்சு கண்ணாடி மாதிரி உருவாக்கி வைத்துள்ளான். அதற்கு நேராக எதிர் சுவரில் அரசவை ஓவியன் தீட்டிய ஓவியம் இருக்கின்றது. அது எதிரில் இருந்த இந்தக் கண்ணாடியில் பட்டுப் பிரதிபலிக்கின்றது.

மன்னர் யோசிக்க ஆரம்பித்தார். அதன்பின் அந்தச் சீன ஓவியனைப் பார்த்துக் கேட்டார்.


''இதோபார்... நீ என்னுடைய ஆளைத் தோற்கடித்து விட்டாய் என்பதில் சந்தேகம் இல்லை! ஆனாலும் எங்களை ஏமாற்றி யிருக்கின்றாய்... எந்த ஓவியமும் நீ வரையவில்லையே...'' என்றார்.

''அரசே! இதுதான் உண்மையான ஓவியம். உயிருள்ள ஓவியம்... இது மனோபாவங்களைப் பிரதிபலிக்கும். மாறுகின்ற காலங்களை அப்படியே காட்டும்!'' என்றான் அந்த சீன ஓவியன்.

கையாலே வரையும் ஓவியங்களில் சலனமில்லை. கண்ணாடி அப்படி இல்லை. சக்தியின் ஓட்டம் அதில் எப்பவும் இருக்கும். கண்ணாடி மட்டுமே ஜீவனுள்ள ஓவியமாக இருக்க முடியும் என்பதை அந்தச் சீன ஓவியன் தெரிந்து வைத்திருந்தான். ஏனென்றால் அவன் ஒரு தாவோ சிந்தனையாளன்.

ஒவ்வொரு குழந்தையும் இந்தக் கண்ணாடியோடு தான் பிறக்கின்றது. ஆனால் நாம் என்ன செய்கின்றோம் என்றால் ஓவியங்களைக் கண்ணாடி மீது பதிக்கப்போகின்றோம்.

கண்ணாடி எம்மைப் பிரதிபலிக்கின்றது. எம்முடைய அழகோ அவலட்சணமோ கண்ணாடியைப் பாதிக்கின்றதில்லை! ஏனென்றால் அதற்கு 'மனம்' கிடையாது. கடந்து போன வினாடியைப் பற்றி அது சிந்திக்கின்றதில்லை. அடுத்த கணத்தைப் பற்றிய எதிர்பார்ப்பும் அதற்கு இல்லை. அதுதான் பற்றற்ற நிலை. மனிதனுக்குத் தேவைப்படுவது அதுதான்.



கண்ணாடியிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இது. வாழ்க்கையில் மனிதர்களை நேசிக்கலாம். உலகின் அழகையெல்லாம் பிரதிபலிக்கலாம். ஆனால் எதிலும் பற்றுக் கொண்டு விடக்கூடாது!

துயரம் என்பது பற்றுக்களின் சாயல்!

கண்ணாடி முன்பாக நிற்கின்ற போதெல்லாம் எமக்கு இந்த ஞாபகம் வரவேண்டும்!

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# சிறுவர் நல்வாழ்வை மேம்படுத்தும் நீர்வேலி பாலர் பகல் விடுதி



[கடந்தவாரத் தொடர்ச்சி.....]

**ஞானி**

பாலர் பகல் விடுதியின் எதிர்காலச் செயற்பாடுகள் சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியையும் ஆரம்பக் கல்விக்கான உறுதியான அடித்தளத்தை இடும் வகையிலும் திட்டமிட்ட முறை யிலும் குறித்த வரையறைகளை உள்ளடக்கி முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை 'நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம்' மேற்கொண்டு வருகின்றது.

பாலர் பகல் விடுதியின் ஆரோக்கியமான சகல முன்னெடுப்புக்களும் உரிய வழிகாட்டல் ஆலோசனைகளையும் அதற்கான நிதி உதவிகளையும் '' நீர்வேலி நலன்புரி சங்கம் இங்கிலாந்து'', '' நீர்வேலி நலன்புரி சங்கம் கனடா'' ஆகிய இரண்டு அமைப்புக்களும் மனப்பூர்வமாக முன் வந்து செய்து வருகின்றன. குறித்த அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் நீர்வேலி புலம் பெயர் உறவுகளில் பெரும்பாலானவர்கள் பாலர் பகல் விடுதியின் பழைய மாணவர்களாவர்.

பாலர் பகல் விடுதியின் செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டில் இருந்து ஆங்கில மொழி மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு கல்வியாளர்கள், ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களை உள்ளடக்கிய '' கலைத்திட்டக் குழு'' விளையாட்டுக் குழு'', ' இணைப்பாடவிதான குழு'' எனத் தெரிவு செய்யப்பட்டு குறித்த விடயத் தலைப்புக்களில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்களை வரையறை செய்து அறிக்கை செய்து வருகின்றது.

பாலர் பகல் விடுதியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக '' இங்கிலாந்து நீர்வேலி நலன்புரி சங்கத்தின்'' தலைவர் மாணிக்கவாசகர் திருவாசகர் தகவல் தெரிவிக்கையில்:-

''நாங்கள் எமது மக்களையும் மண்ணையும் மறக்கமாட்டோம்: எமது பெருமை கல்வியால் நிலை நாட்டப்பட்டது; அதில் பின்னடைவு ஏற்படக் கூடாது. அந்த வகையில் இளம் சிறார்களின் கல்விக்கான அடித்தளம் உறுதியான முறையில் இடப்பட வேண்டும்.

இதற்கு ஏற்ற வகையில் நீர்வேலி பாலர் பகல் விடுதியின் செயற்பாடுகளைக் காத்திரமான முறையில் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். இதற்கு கனடாவில் உள்ள நீர்வேலி நலன்புரிசங்கமும்; ஐக்கிய இராச்சியத்தில் உள்ள நீர்வேலி நலன்புரி சங்கமும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளன'' எனக் கூறினார்.

> இந்த வருடம் 30 மாணவர் அனுமதிக்கப் பட்டுள்ளனர். 2013 ஆண்டில் ஆங்கில மொழி மூலம் கற்றல் செயற்பாடுகள் முன் னெடுக்கப்படவுள்ளன. 120 குழந்தைகளை [2 வயது தொடக்கம் 5 வயது வரை] சேர்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் நீர்வேலி வாழ் மக்களில் பெரும்பாலானவர்கள் '' நீர்வேலி பாலர் பகல் விடுதியின்'' பழைய மாணவர்கள். அவர்கள் வெளி நாடுகளில் இருந்து பகல் விடுதியின் சமகாலச் செயற்பாடு மற்றும் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான நிதி உதவியை பொருத்தமான ஆலோசனைகளை வழங்க முன் வந்திருப்பது முன் மாதிரியான எடுத்துக்காட்டு. இது ஏனைய கிராமங்களின் வளர்ச்சிக்கும் முன் உதாரணமாக இருந்து உதவும் என்பதில் ஐயமில்லை.

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தின் முயற்சியினால் 1955 ஆம் ஆண்டு டிசெம்பர் 4 ஆம் திகதி பாலர் பகல் வீடுதிக்கு அடிக்கல் நடப்பட்டு ஏழு மாத கால இடைவெளியில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன. பாலர் பகல் விடுதியின் வடிவமைப்பு, நிர்மாணம் ஆகியவற்றில் முன்னின்று உழைத்த அமரர் ஈ.கே.சண்முகநாதனின் நினைவு நாளும், பகல் விடுதியின் ஆண்டு நிறைவு விழாவும் ஒரே தினத்தில் டிசெம்பர் 4 ஆம் நாள் வருவதால் இரண்டும் ஒரே தினத்தில் கொண்டாடப் படுகின்றது.

பாலர் பகல் விடுதியின் வளர்ச்சிக்கு காலத்துக் காலம் உழைத்தவர்களையும், பகல் விடுதியை மேற்பார்வை செய்து கண்காணித்து வரும் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழக நிர்வாகிகளையும் சமூகம் நன்றியறிதலுடன் நினைவு கூருகின்றது. அந்த வகையில் ஆரம்பக்காலம் முதல் சமுதாயக் கழகத்தின் தலைவராக இருந்து உழைத்த ஈ.கே. சண்முகநாதன் (தலைவர் 1955-1984) மற்றும் வி.எஸ்.அப்புத்துரை, எஸ். முத்துவேற்பிள்ளை, எஸ். சுவாமிநாதக் குருக்கள், எஸ்.இராசேந்திரக் குருக்கள், க.இராசதுரை, சி.முருகேசு உள்ளிட்ட நிர்வாகிகளின் சேவைகள் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றன.

தற்போதைய நிர்வாகக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற ஆசிரியர் ஐ.சிவராசாவும், செயலாளராக வி.சிவநாதனும் பொருளாளராக திருமதி ஆனந்தவேல் அவர்களுமாக 15 பேர் கொண்ட நிர்வாகக் குழு செயற்படுகின்றது.

நிர்வாகக் குழு மாதாந்தம் குறித்து ஒதுக்கப்பட்ட தினத்தில் கூடி பகல் விடுதியின் தேவைகள், உதவிகள் தொடர்பாக கலந்துரையாடி நிறைவு செய்து வருகின்றது. அத்துடன் பெற்றோருடனான சந்திப்புக்களைக் குறித்து ஒதுக்கப்பட்ட தினத்தில் நடத்தி கலந்துரையாடி வருகின்றது. நிறுவனமயப்படுத்தப்பட்ட ரீதியில் நடத்தப்பட்டு வரும் நீர்வேலி பாலர் பகல் விடுதியில் முழுமையான நம்பிக்கை வைத்து பிள்ளைகளைப் பகல் வேளையில் ஒப்படைத்து விட்டு தமது கடமைக்கு பெற்றோர் செல்கின்றனர்.

தற்பொழுது பாலர் பகல் விடுதிக்கு பொறுப்பாளராக நியமிக்கப் பட்டிருக்கும் செல்வி தியாகேஸ்வரி வல்லிபுரம் தமிழ், ஆங்கில சிங்கள மொழி புலமை கொண்டவராக இருப்பதோடு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பல்வேறு வகைப்பட்ட சிறுவர்களை வழிப் படுத்துவதில் தேர்ச்சி பெற்றவர்.

நீர்வேலி நலன்புரி சங்கத்தின் தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான, இ.குணநாதன் பகல் விடுதியின் தேவைகள், உதவிகள் தொடர்பாக பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி அதன் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வ மான பங்களிப்பை நல்கி வருகின்றார்.

பகல் விடுதியில் ஆரம்பக்காலக் கட்டுமானப் பணிகளுக்கான நிதி உதவியைக் கைத்தொழில் சமூக சேவைகள் வீடமைப்பு அமைச்சு வழங்கியிருந்தது. இராணுவ நடவடிக்கை மற்றும் ஷெல் வீச்சுக்களால் சேதமடைந்த பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 1997 ஆம் ஆண்டு யு.என்.ஏச்.சி.ஆர் நுண் கருத் திட்டத்தின் கீழ் நிதி உதவிகளை வழங்கியது. 2005 ஆம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கிய நிதி உதவி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டது. பகல் விடுதியின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான குழுவின் தலைவர் ஐ.சிவராசா விடுதியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக தகவல் தெரிவிக்கையில்;

இந்த வருடம் 30 மாணவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2013 ஆண்டில் ஆங்கில மொழி மூலம் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. 120 குழந்தைகளை (2 வயது தொடக்கம் 5 வயது வரை) சேர்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் எந்தப் பகுதியில் வசிப்பவர்களும் அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்தார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 ஆவது சாரணர் விழா கண்டியில்

## பிரதம விருந்தினர் மஹிந்த

கண்டி, டிசெ.7

கண்டி தர்மராஜக் கல்லூரி ஒழுங்கு செய்துள்ள 125ஆவது வருட சாரணர் விழா 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதுகுறித்த கலந்துரையாடல் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதன்போது சாரணர் இலட்சினையின் முதலாவது இலட்சினையை ஜனாதிபதிக்கு தர்மராஜக் கல்லூரி அதிபர் கீர்த்திரத்ன அணிவித்தார்.



கண்டி தர்மராஜக் கல்லூரி ஒழுங்கு செய்துள்ள 125 ஆவது வருட சாரணர் விழாவின் (ஜம் போரியில்) நிறைவு நாள் நிகழ்வில் (23 ஆம் திகதி) பிரதம அதிதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் ஜம்போரி அமைப்புக் குழுவின் தலைவரான கண்டி தர்மராஜக் கல்லூரி அதிபர் எஸ்.எம்.கீர்த்திரத்ன, நாளைய இளைஞர், அமைப்பின் பணிப்பாளர் கலாநிதி சூலா சேனாரத்ன, நிர்வாகக் குழு அங்கத்தவரும் தர்மராஜக் கல்லூரியின் பழைய மாணவருமான நாடாளுமன்ற அங்கத்தவர் எரிக் பிரசன்ன வீரவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மேற்படி ஜம்போரியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாரணர்களும் பெண் சாரணியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (வ)

# இடர்கள் ஏற்பட்டால் முகம்கொடுப்பது எவ்வாறு?

## ஏறாவூரில் செயற்றிட்ட பட்டறை



ஏறாவூர், டிசெ.7

இடர்களுக்கு முகம் கொடுத்து மீள் எழும்பக் கூடிய நகரத்தை உருவாக்கும் செயற்றிட்டத்தின் ஒரு கட்டமாக ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை செயற்திட்டத் தயாரிப்பு பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையுடன் எறாவூர் நகர முதல்வர் அலிஸாஹிர் மௌலானா தலைமையில் இடம்பெற்ற மேற்படி பயிற்சிப்பட்டறையில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, பிரக்டிகல் அக்ஸன் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் நுவான் மாதவ ஆராச்சி, இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஆலோசகர் யூ. டபிள்யூ. எல். சந்திர தாச, மட்டக்களப்பு இடர் முகாமைத்துவ நிலைய உதவி இணைப்பாளர் ஏ.எம்.எம். கஸீர் உட்பட ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவின் அனைத்துக் கிராம சேவை உத்தியோகத்தர்களும் திணைக்களத் தலைவர்களும் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (வ)

## பஸ் விபத்தில் மாணவி சாவு 13 பேர் காயம்

மாத்தளை, வெலிகமுவ, எலவனாகந்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததோடு 13 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் பள்ளத்துக்குள் விழுந்ததன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

குறித்த விபத்தின் போது 18 வயதான மாணவி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமி ஒருவர் மஹியங்கனை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். ஏனையோர் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ)

## கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம்



மட்டக்களப்பு, காத்தான்குடி கடற்கரைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. காத்தான்குடி கடற்கரையில் பகல் மற்றும் இரவு வேளைகளில் கட்டாக்காலி நாய்கள் அதிகமாக நடமாடித் திரிவதால் பொதுமக்கள் அப்பகுதி ஊடாகப் பயணம் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய நால்வர் கைது

## வாழைச்சேனையில் 'டிப்பர்'களும் சிக்கின

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் மணல் மற்றும் கிறவல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன் நான்கு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாழைச்சேனை, சந்தியாமடு ஆற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய இரண்டு உழவு இயந்திரங்களும் நாவலடி பிரதேசத்தில் கிறவல் ஏற்றிய இரண்டு டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அந்த வாகனங்களின் சாரதிகள் நால்வரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்களையும், வாகனங்களையும் வாழைச்சேனை நீதிவான் நிதிமன்ற நீதிபதி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஏ.ஜயவீர தெரிவித்தார். (வ)

# மூன்று அரச நிறுவனங்களுக்கு உற்பத்தித் திறன் விருதுகள்

## அம்பாறை மாவட்டத்தில்



அம்பாறை, டிசெ.7

தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கும் விழாவில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அரச நிறுவனங்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டன.

அம்பாறை பெரிய வைத்தியசாலை, நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவையே மேற்படி மூன்று நிறுவனங்களுமாகும்.

உற்பத்திதிறன் மேம்பாட்டு அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 2010-2011ஆம் ஆண்டுகளுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்படி மூன்று நிறுவனங்களும் தமக்கான விருதுகளைப் பெற்றுக் கொண்டன. உள்ளக திணைக்களப் பிரிவில் அம்பாறை பெரிய வைத்தியசாலை முதல் தரத்தினையும் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை மூன்றாம் தரத்தையும், நுண் பிரிவில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் மூன்றாம் தரத்தைப் பெற்றுக் கொண்டமைக்காகவே மேற்படி தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் வழங்கப்பட்டன.

உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதம அதியாகவும், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள், மற்றும் அதிகாரிகள் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். (வ)

## பணம், கைபேசிகளை அபகரித்த நபரை மடக்கிப் பிடித்த மூதாட்டி

பணம் மற்றும் கையடக்க தொலைபேசிகள் என்பவற்றை அபகரித்துச் சென்ற ஆசாமியை 70 வயதுப் மூதாட்டி ஒருவர் பின் தொடர்ந்து மடக்கிப் பிடித்த சம்பவம் கட்டுகஸ் தோட்டைப் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கட்டுகஸ்தோட்டை ஹல்லொழுவ பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து பணம் மற்றும் மூன்று கையடக்கத் தொலைபேசிகளை அபகரித்துச் சென்ற சந்தேக நபரையே குறித்த மூதாட்டி மடக்கிப் பிடித்துள்ளார்.

சந்தேக நபர் ஒரு தொகை பணம் மற்றும் மூன்று கையடக்க தொலை பேசிகளைச் சூறையாடிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபரைப் பின் தொடர்ந்து குறித்த மூதாட்டி பிரதேச வாசிகளின் உதவியுடன் அவனை மடக்கிப் பிடித்து கட்டுகஸ் தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)

# இந்திய வம்சாவளித் தமிழர்களின் கல்வியை மேம்படுத்த உதவிகள்


## இந்திய அரசு வழங்கும் என்கிறார் இராதாகிருஷ்ணன்

இந்திய வம்சாவளித் தமிழர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த இந்தியா உதவிகளை வழங்க உள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைப் பொறுப்பாளர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அரசால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இந்திய வம்சாவளித் தமிழ் மாணவர்களை அதிகளவில் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி அதன் மூலம், அவர்களை உயர் பதவிகள் வகிக்கச் செய்ய வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கமாக அமைந்துள்ளது.

மலையகப் பகுதிகளில் சாதாரணதரப் பரீட்சைக்கு ஆண்டுதோறும் 23000 மாணவர்கள் தோற்றிய போதிலும், உயர்தரப் பரீட்சைக்காக 2500 மாணவ, மாணவியரே தோற்றுகின்றனர். இதில் ஐந்து வீத மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கொள்கின்றனர்- என்றார். (வ)



லிந்துலை மடுகெல்ல தோட்டத்திலுள்ள சிலை ஒன்றிலிருந்து திடீரென கண்ணீர் வழிந்த சம்பவமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. லிந்துலை சென்கூம்ஸ் தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் மடுகெல்ல 7 ஆம் இலக்க பிரிவிலுள்ள மாரியம்மன் சிலையில் இருந்து கண்ணீர் வழிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## குளவிகள் கொட்டி 10 தொழிலாளர்கள் பாதிப்பு

கினிகத்தேன - கெரோலினா - கடவத்தைப் பிரிவு தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 10 தொழிலாளர்கள் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட 8 பெண் தொழிலாளர்களும் இரு ஆண் தொழிலாளர்களும் செவ்வாயன்று கினிகத்தேன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மூன்று பெண் தொழிலாளர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். ஏனையோர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்றுவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தருவது வித்தியா**

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தாயின் உடல்நிலை சீராக இருக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுகமான போட்டிகளை வெல்வீர்கள்.

**மிதுனம்:** முடியாமல் போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். உழைப்பால் வெற்றி பெறுவீர்கள். கண் எரிச்சல், தூக்கமின்மை விலகும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**கடகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.

**சிங்கம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நெருங்கியவர்கள் சிலர் உங்களை உதாசீனப்படுத்தி பேசுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

**கன்னி:** எடுத்த வேலையை முடிப்பதற்கு அலைச்சல் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். அரச விடயங்கள் தாமதமாக முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மறைமுகப் பிரச்சினைகள் ஏற்படும்.

**நாளை**

கார்த்திகை -23 சனிக்கிழமை 08.12.2012
திதி: தசமி பி.இ 01.36 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ 02.20 வரை
சுபநேரம்: 03.18- 04.48 வரை
ராகுகாலம்: 09.18 - 10.48 வரை

**துலாம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.

**விருச்சிகம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். தலைவலி, இடுப்பு வலி நீங்கும். கோபம் வந்து நீங்கும்.

**தனுசு:** வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்ட நாள் ஆசைகளை பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வாகனப்பழுது நீங்கும். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

**மகரம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். முன்கோபத்தால் பகை உண்டாகும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகளைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில்கடன் மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.

**மீனம்:** எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | 2 | 6 | | 8 | 4 | 7 |
| | | 5 | 1 | | 3 | | | |
| 7 | | | | 9 | 8 | | | |
| 2 | | 9 | | 4 | 1 | | | |
| | 6 | | | 5 | | | 8 | |
| | | | 8 | 3 | | 4 | | 9 |
| | | | 3 | 1 | | | | |
| | | | 9 | | 4 | 5 | | |
| 6 | 9 | 2 | | 8 | 7 | 1 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 1 | 6 | 3 | 7 | 4 | 2 | 8 |
| 2 | 7 | 3 | 4 | 8 | 1 | 6 | 9 | 5 |
| 8 | 4 | 6 | 9 | 5 | 2 | 1 | 3 | 7 |
| 1 | 6 | 5 | 7 | 9 | 8 | 3 | 4 | 2 |
| 7 | 2 | 8 | 1 | 4 | 3 | 9 | 5 | 6 |
| 3 | 9 | 4 | 2 | 6 | 5 | 8 | 7 | 1 |
| 5 | 1 | 9 | 3 | 2 | 6 | 7 | 8 | 4 |
| 4 | 8 | 7 | 5 | 1 | 9 | 2 | 6 | 3 |
| 6 | 3 | 2 | 8 | 7 | 4 | 5 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கந்தையா பரமநாதன் (சமாதான நீதிவான்)

*திதி:-07.12.2012*



ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்
அன்புத் தெய்வத்தின் ஆறாத் துயர்தனை
ஈடு செய்பவர் இனி யாருமில்லை!
நெஞ்சமதில் உம்முருவம் நேயமுற வாழ்கிறதே
தஞ்சமென்றடைய தரணியில் யாருமில்லை
அல்லும் பகலுமாய் உழைத்திட்ட உத்தமரே!
அயலவர் நெஞ்சமதில் அமரத்துவம் அடைந்தீரே
பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாரினில் நீர் படைத்த பங்குகள் யாமறிவோம்
உம் புன்னகை பூத்த எழிலுருவமும் உம் புன்னகை
சிந்தும் பேச்சும் என்றும் நிலைத்து நிற்கும் எம் நெஞ்சமதில்

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனை இன்று (07.12.2012)
வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.
இந் நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு அனைவரையும்
அழைக்கின்றோம்.

மலர்வு
08.08.1938

மறைவு
20.11.2011

இல 22, பாரிநகர், வவுனிக்குளம்.
T.P 024 324 8662, 0779019842

*ஆறாத்துயரில் வாழும்:*
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வந்துள்ள இந்தியாவின் பாதுகாப்புக் கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பகுப்பாய்வாளர் அரவிந்த் குப்தாவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்பட்டது. (த)

# நீதியரசரின் சொத்து விவரங்கள் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிப்பு

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்காவின் சொத்து விவரங்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் 11 பேர் அடங்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்றுமுன் தினம் கூடியது.

குற்றப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க பிரதம நீதியரசருக்கு கால அவகாசம் வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் இந்தக் கூட்டத்தின் போது ஆராயப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

**அனைத்து ஆவணங்களும் 11 பேர் அடங்கிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளன.**

# ஊழலற்ற நாடுகள் வரிசையில் 79 ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு,டிசெ 7

ஊழல் அற்ற நாடுகளின் தரவரிசை பட்டியலில் 176 நாடுகள் இடம்பெற்றுள்ளன. அதில் 40 புள்ளிகளைப் பெற்று இலங்கை 79ஆவது இடத்தில் உள்ளது.

உலகில் ஊழல் நிறைந்த நாடுகள் தரவரிசைப் பட்டியலை டிரான்ஸ்பரன்சி இன்டர் நஷனல் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலின் பிரகாரம் சீனா 80 ஆவது இடத்திலும் இந்தியா 94 ஆவது இடத்திலும் இருக்கின்றன.

தெற்காசிய நாடுகளான இந்தியா,நேபாளம்,பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் இலங்கை இரண்டாம் இடத்தில் இருக்கின்றது என அந்த வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த பட்டியலின் பிரகாரம் டென்மார்க் ஊழல் அற்ற நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல் கூடிய நாடுகளாக மியன்மார், சூடான், ஆப்கானிஸ்தான், சோமாலியா மற்றும் வடகொரியா உள்ளிட்ட நாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஊழல் கூடிய நாடுகளில் சில நாடுகள் பூச்சியம்(0) புள்ளியை பெற்றுள்ளன என்றும் டிரான்ஸ்பரன்சி இன்டர் நஷனல் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

# ஜனாதிபதியின் மலேசியப் பயணம் அழுத்தத்தால் இரத்தாகவில்லையாம்

## இலங்கைத் தூதரகம் கூறுகிறது

கோலாலம்பூர்,டிசெ. 7

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மலேசியப் பயணம் அரசியல் அழுத்தம் காரணமாக இரத்து செய்யப்படவில்லை என கோலாலம்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் உறுதி செய்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் மலேசியப் பயணத்தைக் கண்டித்து மலேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இலங்கை ஜனாதிபதி மலேசியா வந்தால் எதிர்ப்பு வலுப்பெறும் எனவும் அவை எச்சரித்தன.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர் குற்றம் புரிந்ததாக அந்த அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இந்நிலையில் மலேசியா செல்லவிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புக்குக் காரணம் அரசியல் அழுத்தங்கள்' எனப் பரவலாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில் மலேசியத் தூதரகம் அதனை மறுத்துள்ளது.

மலேசியாவில் நேற்று நடைபெறவுள்ள உலக முஸ்லிம் பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரத்து செய்தமைக்கு காரணம் பிரதமர் டி.எம்.ஜயரத்னவை பார்வையிட அமெரிக்கா சென்றதுதான் என மலேசியாவுக்கான இலங்கை தூதுவர் மேஜர் ஜெனரல் எஸ்.டபிள்யு.தவுலகல தெரிவித்துள்ளார். (த)

# பொப் பாடகிக்கு வானொலி நிறுவன ஊழியர் தொந்தரவு

கொழும்பு,டிசெ 7

இலங்கையின் பொப் மற்றும் ஜாஸ் பாடகி உமாரியா சிங்கவன்ஸவுக்கு தொந்தரவு செய்வதாகக் கூறப்படும் தனியார் வானொலி நிறுவனம் ஒன்றின் ஊழியரை டிசெம்பர் 14ஆம் திகதி கொழும்பு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தனியார் வானொலி ஒன்றின் ஊழியரான ராம்சே ஜேனூர் என்பவருக்கே கொழும்பு கோட்டை நீதிவான் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

தான் தொலைக்காட்சி நிகழ்வொன்றில் பங்குபற்றிய பின் தனது சிநேகிதனான பாதியா ஜயகொடியுடன் கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு சென்றபோது சந்தேகநபர் தன் வழியை மறித்து கையைப் பிடித்து இழுத்ததாகவும் உமாரியா சிங்கவன்ஸ கொழும்பு கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சந்தேகநபர் பற்றி தான் முன்னரும் தலங்கம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வழக்கை கவனத்தில் எடுத்த நீதிவான் கனிஷ்க விஜேரத்ன சந்தேகநபரை எதிர்வரும் 14ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

# வாகன விபத்தில் ஒருவர் சாவு



கொழும்பு,டிசெ. 7

பமுனுகம, ஜாஎல - நீர்கொழும்பு 273ஆம் இலக்க வீதியின் தெலதுர பாலத்துக்கு அருகில் கப் வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததோடு மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று அதிகாலை 02.30 அளவில் இடம்பெற்றுள்ளது. ஜாஎலவில் இருந்து போபிட்டி நோக்கி பயணித்த கப் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தில் 44 வயதுடைய நபர் உயிரிழந்த நிலையில் படுகாயமடைந்த மூவரும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# ஆஸ்திரேலியாவிலிருந்து 46 பேர் நேற்று நாடுகடத்தல்

கொழும்பு,டிசெ. 7

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு சென்று புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 46 பேர் நேற்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய செல்லுபடியற்ற விசா மற்றும் ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்க தகுதியின்மை உள்ளிட்ட காரணங்களால் குறித்த இலங்கையர்களது புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக படகு மூலம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சென்ற 46 இளைஞர்களே புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு விசேட விமானம் மூலம் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் ஒகஸ்ட் 13ஆம் திகதிக்குப் பின்னர் மாத்திரம் ஆஸ்திரேலியாவில் இருந்து 600க்கும் அதிகமானோர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார் கிறிஸ் போவன். (த)

# தென்பிராந்திய வான்பரப்பில் அதிசய கோள்?



கொழும்பு,டிசெ. 7

முன்னொருபோதும் காணாதளவு பிரகாசத்துடன் கூடிய கோள் ஒன்றைத் தென்பிராந்திய வான் பரப்பில் காண முடிந்ததாக அம்பலாந்தோட்டை பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணியளவில் காணக்கூடியதாக இருந்த மேற்படி கோளானது, மிகப் பெரிய நட்சத்திரம் போன்று அதிகளவு பிரகாசத்துடன் தோற்றமளித்துள்ள போதிலும் நள்ளிரவு 12 மணியளவில் அதன் பிரகாசம் சாதாரண நட்சத்திரத்தின் பிரகாசமளவுக்கு குறைவடைந்ததாகவும் பிரதேசவாசிகள் குறிப்பிட்டனர். அத்துடன், மேற்படி கோள் நேற்று அதிகாலையளவில் தொலைதூரத்துக்கு பயணமாவதை அவதானிக்க முடிந்தது எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

சாதாரண கண்களால் பார்க்கும்போது அக்கோள் மினுமினுப்பதைப் போன்றும் கமராவொன்றின் மூலம் பார்க்கும்போது இளம் நீல நிற ஒளியுடன் அது தொலை தூரத்துக்குப் பயணித்துக் கொண்டிருப்பதைப் போன்றும் தோற்றமளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (த)

# பல்கலை. மாணவர்களை உடன் விடுதலை செய்க

## இலங்கையிடம் கனடா வலியுறுத்து

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், தொடரும் அச்சுறுத்தல்கள், பல்கலை மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை என்பன கவலையளிக்கிறது. அமைதி வழிப்போராட்டங்களை அனுமதித்து, யாழ். பல்கலை மாணவர்களை இலங்கை அரசு உடன்விடுதலை செய்ய வேண்டும் - என்று கனடா கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இலங்கையில் மனித உரிமைகள் சீர்கெட்டுச் செல்வது மிகுந்த கவலையளிக்கிறது என கனடாவின் ஆளும்கட்சியின் பரித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான பற்றிக் பிரவுண் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமாக கருத்து வெளியிடுதல், சுதந்திரமாக கூடுதல் போன்ற உரிமைகளுக்கு இலங்கையில் நடந்துள்ள சமீபத்திய சம்பவங்கள் [illegible] அச்சுறுத்தலாக அமைந்துள்ளமை மிகுந்த கவலையளிக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகரித்து வருகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்த செய்திகள் சர்வதேச சமூகத்தின் கரிசனையை அதிகரித்துள்ளது. இராணுவமயமாக்கல், எதேச்சாதிகார ஆட்சி என்பன ஜனநாயக முறைமையல்ல என்றும் இலங்கையின் இன்றைய நிலைமை குறித்து அவர் [illegible]ளார்.

[illegible] தமிழர் பகுதிகளில் இருந்து இலங்கை அரசு இராணுவத்தை வெளியேற்றி ஆட்சி அதிகாரத்தை மக்கள் செயற்பாட்டாளர்களிடம் கையளிக்குமாறு வேண்டியுள்ள பற்றிக் பிறவுன், சர்வதேச சமூகம் விரைந்து செயற்பட்டு தமிழர் அபிலாசைகளுக்கான நீதியான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கான தருணம் இது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின் இலங்கையில் நிலைமைகளைக் கண்டறியச் செல்ல முற்பட்டபோது இலங்கை அரசினால் அனுமதி மறுக்கப்பட்டவர் பற்றிக் பிரவுண் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

மார்க்கம்பரை, கோப்பாய் வடக்கு எனும் முகவரியில் வசிக்கும் பத்மநாதன் டுஸ்மோகன் ஆகிய நான் நேற்று (06.12.2012) இல் இருந்து பத்மநாதன் சந்தோஷ் எனச் சட்டரீதியாகப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

பத்மநாதன் சந்தோஷ்

(26169)(5.7.6)

## வீடு வாடகைக்கு

முல்லைத்தீவு நகரின் மத்தியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:

**0777 238378**

(26177)(5.7.6)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## J.C.B வாடகைக்கு (பைக்கோ)



★ போக்குவரத்துக் கூலி அறவிடப்படமாட்டாது
★ குறைந்த கட்டணத்தில் துரித சேவைக்கு இன்றே நாடுங்கள்

இல. 207, புதிய எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம்.

தொடர்புகளுக்கு:
077 7712482, 077 984 7285

(26422) (2-6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2012ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் யா/யாழ்ப்பாணக்கல்லூரி மாணவி செல்வி டனுசிகா விமலதாசன் அவர்கள் 176புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவர் மேன்மேலும் பரீட்சைகளில் சித்தியடைந்து பட்டங்கள் பலபெற்று சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர் :**
பெரியப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம், மாமா குடும்பம்

(26451)(6.5.7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



"உங்களையும் ஒருநாள் மறந்திருப்போம்
அன்று நாமும் இறந்திருப்போம்"

## சவரிமுத்து தோமஸ்

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
Technision, Royal Air Force of oman)

கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற இறைவனிடம் – நாம்
கேட்காமலே எமக்கு எல்லாம் தந்த எம் தந்தையை மட்டுமே கேட்டோம்
அந்த இறைவனும் உங்களையே கேட்டால்
இல்லை என்று சொல்ல முடியுமா எம்மால்

புதுமைகள் புரியும் அந்தப் புண்ணிய சீலனிடம் கேளப்பா – இக்கொடிய
புற்றுநோயை – இப் புவியில் இருந்து விரட்டும்படி கேள்.

நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமகன்.

(26436)(2.6.7)

# சேவை நலன் பாராட்டு



## திரு.க.மதுரநாயகம்

B.Com(Hons), Dip.in.Edu,SLPS 2-II

(அதிபர் கிளி/திருவையாறு ம.வி)

எமது பாடசாலை மாவட்ட, மாகாண தேசிய நிலையில் உயர்வதற்கு அரும்பாடுபட்டு தன்னலம் கருதாத சேவைத் தொண்டனாய் போற்றுதற்குரிய பணிகள் ஆற்றி கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு [இசுறு பாடசாலை] இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் எமது அன்பான வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

2011ஆம் ஆண்டு ஜனாதிபதியால் அலரிமாளிகையில் கௌரவிக்கப்பட்டவர்.

நேர்மை,அர்ப்பணிப்பு,மாணவர்களின் முன்னேற்றம் என்பன இணைந்த இவரது சேவை தொடர எமது வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:
அம்பாள் நகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர்.
திருவையாறு, கிளிநொச்சி

26109

## விற்பனையாளர் தேவை

பிரபல கட்டடப் பொருள் விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள விற்பனை யாளர்கள் தேவை.

தொடர்புக்கு:
EAGLE HARDWARE
135,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(26441)(7-6)

## காணி விற்பனைக்குண்டு

இளவாலைச் சந்தியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் இளவாலை வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 3151 723

(26857)(6.5.7)

# 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

வண்ணாங்கேணி, பளையைச் சேர்ந்த
திருமதி **பரிமளம் ஜெயம்**
(கல்யாணி)

மலர்வு
23.02.1953



உதிர்வு
07.12.1998

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்து அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எம்மைப் பேணிப் பாதுகாத்து
வழி நடத்தி வாழ வழி செய்து இன்று
எம்மைப் பரிதவிக்க விட்டுச் சென்று
ஆண்டுகள் பதின்நான்கு ஆனதே அம்மா!
நீங்கள் இந்த அவனியை விட்டு அவன் பாதம் ஏகி,
ஆறமுடியவில்லை உங்கள் பிரிவுத்துயரிலிருந்து
நித்தம் நித்தம் உங்களை நினைக்கின்றோம் அம்மா!
அந்த நினைவினிலே நாங்கள் வாழ்கின்றோம் அம்மா!
நாங்கள் எல்லோரும் ஒன்று சேரும் போது
உணருகின்றோம் உங்கள் அரவணைப்பை அம்மா!
பத்து புதிய மழலை முத்துக்கள்
அந்தோ உங்களைத் தேடுகின்றனவே!
ஒரு நாளேனும் அவர்களைப் பார்க்க
ஆசையாய் ஓடி வருவீர்களா? அம்மா!
எத்தனை எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நித்தம் உங்களை மனதில் இருத்தி
உங்கள் இனிய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சி நிற்கும்.

வ.ஜெயம் (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
உறவினர்கள்.

வண்ணாங்கேணி, பளை,
தொ.பே. 077 2048 546

(10073)(5.6.7)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
15 * 02 * 1935



மறைவு
07 * 11 * 2012

அமரர் **கனகம்மா நவரட்ணம்**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [07.12.2012] வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் [09.12.2012] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

சந்திரோதயம்
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**குடும்பத்தினர்.**

[26457] [4.5.6.7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

## ஜெய்ப்பூர் விடுமுறை

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 30 திகதி வரையான காலப்பகுதியை வருடாந்த விடுமுறையாக அறிவித்துள்ளது.

31 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வழமையான சேவைகளுக்காக மீளவும் திறக்கப்படும் என்று நிறுவனத் தலைவர் மருத்துவர் திருமதி. ஜெ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம)

# இலங்கையில் தினமும் ஆயிரம் சட்டவிரோத கருக்கலைப்பு

## பெண் நோயியல் மருத்துவ நிபுணர் தகவல்

இலங்கையில் தினமும் சராசரி ஆயிரம் சட்டவிரோத கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றனஎன்று மதிப்பிடப்பட்டிருப்பதாக பெண் நோயியல் மருத்துவ நிபுணர் ஒருவர் தெரிவித்தார். அத்துடன், சட்டவிரோதக் கருக்கலைப்பில் ஈடுபடுபவர்களில் 90 சதவீதமானோர் திருமணமான பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இனவிருத்தி ஆரோக்கியம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் விசேட வளவாளர்களில் ஒருவராக பங்குபற்றிய மருத்துவ நிபுணர் மங்கள திஸாநாயக்கா, இலங்கையில் கருக்கலைப்பு சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி தினமும் ஆயிரம் சட்ட விரோதக் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன. இதன்படி வருடத்துக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முதல் இரண்டு இலட்சம் வரை இந்த வகைக்கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன.

இந்தக் கருக்கலைப்பில் 90 வீதம் திருமணமான பெண்களே ஈடுபடுகின்றனர். இதற்கு வறுமை, இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பிள்ளைகளை பராமரிப்பது கடினம் என்பவற்றை அவர்கள் முக்கிய காரணங்களாகக் கூறுகின்றனர்.

ஆனால் சட்டவிரோத கருக்கலைப்பு செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பயிற்சியற்றவர்களாவர். இதன் விளைவாக பலவிதமான பக்க விளைவுகளுக்கு கருக்கலைப்புச் செய்யும் பெண்கள் உள்ளாகின்றனர்.

சட்டவிரோத கருக்கலைப்பின் போது அளவுக்கு அதிகமாக இரத்தப் பெருக்கு ஏற்பட்டு பெண்கள் உயிரிழக்கவும் செய்கின்றனர். 2010 ஆம் ஆண்டில் மாத்திரம் இவ்வாறு 140 பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

சட்டவிரோதக் கருக்கலைப்பின் விளைவாக ஏற்படுகின்ற சாவுகள் 2009 ஆம் ஆண்டு மூன்றாவது இடத்திலேயே இருந்தன. அது 2010 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்துக்கு வந்துள்ளது.

ஆகவே சட்டவிரோத கருக்கலைப்புகளின் பாதிப்புக்களை உணர்ந்து அவற்றைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் விசேட கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (3)

## சல்பீனியா ஆக்கிரமிப்பு; நுளம்புகள் பெருகும் அபாயம்

கொழும்புத்துறை, டிசெ.7

யாழ்.நகரில் உள்ள குளங்கள் பலவற்றையும் சல்பீனியத் தாவரம் ஆக்கிரமித்து புற்றரை போல் காட்சி தருகிறது.

ஆரியகுளம், கன்னாதிட்டிக் குளம், வின்சர் சந்திக் குளம் போன்றவற்றின் மேற்பரப்பில் படர்ந்துள்ள சல்பீனியத் தாவரத்தின் மூடுகைக்குள் நுளம்புப் பெருக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது.

குடிமனைகள், மக்கள் செறிவாக நடமாடும் பகுதிகளில் ஏற்படும் நுளம்புப் பெருக்கத்தினால் பலரும் நோய்த்தாக்கங்களுக்கு உட்படக்கூடிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குளங்களிலே உள்ள சல்பீனியத் தாவரங்களை அகற்றி, சூழல் மாசடைதலையும், நுளம்புப் பெருக்கத்தையும் தடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (3-135)

## வீதியைக் கடந்த சிறுவன் விபத்தில் சிக்கிக் காயம்

தென்மராட்சி, டிசெ.7

ஏ-9 வீதியைக் கடந்த மாணவன் வேகமாக வந்த வாகனத்தினால் மோதுண்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி அஞ்சல் நிலைய வீதிச் சந்தியில் இடம்பெற் றது.

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பும் போது விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த செல்வகுமார் அனோஜன் (வயது-8) என்னும் மாணவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (3-9)

## பட்டப் பகலில் சங்கிலி அறுப்பு

கொழும்புத்துறை,டிசெ.7

கொழும்புத்துறை சுவாமியார் வீதிப் பகுதியில் தனியாகச் சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை பட்டப்பகலில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

ஆள்கள் நடமாட்டம் குறைந்த சுவாமியார் வள்ன் புரம் பகுதியை ஒழுங்கையில் பெண் தனியாகச் சென்று கொண்டி ருக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் 2½ பவுண் பெறுமதியான சங்கிலியை அறுத்துக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலங்களில் மக்கள் நடமாட்டம் குறைந்த மதிய வேளைகளில் இவ்வாறான வீதி வழிப்பறிச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

ஒரு குறிப்பிட்ட இளவயதினரே தமது ஆடம்பர, மது பாவனைகளுக்காக இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என்றும் பொதுமக்கள் இவர்கள் மட்டில் கண்ணோட்டமாக அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும் தனிவழிப் போக்குவரத் தைத் தவிர்த்துக்கொள்ளு மாறும் பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (3-135)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி, டிசெ.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9 வகுப்புக்களின் கணித பாட ஆசிரியர்களுக்கும் தரம் 10 வகுப்புக்களின் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்குமான செயலமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (3-9)

# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம்
09.07.1947

மறைவு
07.11.2012

## அமரர் அம்பலவாணர் சிற்றம்பலம்

திதி:— அட்டமி


கடந்த 07.11.2012 அன்று இறைவனடி சேர்ந்த எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (07.12.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். அன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய தகர மடத்திலும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னதானம் வழங்கப்படுகிறது.

சந்நிதி இல்லம்,கைதடி.

குடும்பத்தினர்.

(26453)(2...)

# மரண அறிவித்தல்



## செல்லப்பா இராசதுரை (வர்த்தகர் - சின்னக்கிளி)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசதுரை (சின்னக்கிளி) 04.12.2012 செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னப்பிள் ளை தம் பதியரின் அன்பு மகனும், உத்திரத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்- அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவகளான அன்னம்மா, நடேசு, சண்முகம்பிள்ளை, கனகரத்தினம் மற்றும் வள்ளியம்மை, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, சேனாதிராஜா, பொன்னுத் துரை, மாணிக்கம் மற்றும் இராசமணி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், பாமினி, தாயாபரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவபாலச்சந்திரன் (பொறியியலாளர் - ஆஸ்திரோலியா), கிரிஜா (ஆசிரியை கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், சுபேசன் (சுஜன் - கணக்காளர் ஆஸ்திரேலியா), சுஜித்தா விக்னகரன் (இருதய சத்திரசிகிச்சை நிபுணர் - ஆஸ்திரேலியா), ஹ. விக்னகரன் (கணினி மென்பொருள் பொறியியலாளர் - அஸ்திரேலியா), தாரணி ( பார்மஸிற் - ஆஸ்திரேலியா), மதீபன் (ஆசிரியர் - யாழ் .இந்துக் கல்லூரி), பிரசாத் (கனடா), லக்ஸ்மன், கீர்த்திகன், சுவேதிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.12.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
0212223526

தகவல்:
இ.தயாபரன்

(26412) (45.8.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# நீதிமன்றில் சமாதானமான அண்ணன்-தங்கை சண்டை

அண்ணன்-தங்கை சண்டை பருத்தித்துறை நீதி மன்றம் வரை வந்து சமாதானத்தில் முடிவுற்றது.

சமாதானத்துக்கான காணிக்கையாகச் சக்கோட்டை புனித சவேரியார் தேவாலயத்துக்கு ஆயிரம் ரூபாவைச் செலுத்துமாறு அண்ணனுக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

தங்கையை அண்ணன் தாக்கியதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது காயங்கள் ஏதாவது உண்டா என நீதிபதி வழக்காளியான தங்கையைப் பார்த்துக்கேட்டபோது அவர் இல்லை என்று பதிலளித்தார்.

சமாதானமாகச் செல்ல விருப்பமா என நீதிபதி இருவரையும் கேட்டபோது ஒப்புக்கொண்டனர்.

இதனை அடுத்து அண்ணன் தங்கையிடம் சென்று தன்னை மன்னித்துக் கொள்ளுமாறும், இனிமேல் எந்தவித பிரச்சினைகளும் இன்றி உனக்கு என்றும் உதவியாக இருப்பேன் எனக் கூறி சமாதானமானார்.

தங்கையுடன் சமாதானமான அண்ணனை அவர்களின் வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள சக்கோட்டை புனித சவேரியார் தேவாலயத்துக்கு ஆயிரம் ரூபாவை காணிக்கையாகச் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். அண்ணன்-தங்கை இருவரும் சமாதானமாக மன்றிலிருந்து வெளியேறினர். (ம-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சமாதான நீதிவானாக நியமனம்



எமது கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் ஆரம்பகால உறுப்பினருமான கலைநகர் வட்டு வடக்கு சித்தன் கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**கனகசிங்கம் விமலதாசன்**

அவர்கள் 23/11/2012 அன்று மல்லாகம் நீதி மன்றில் நீதிபதி H.M.M பசீல் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் கொழும்பு - 15 சி.சி.த.க பாடசாலை, யா/வட்டு இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழை மாணவர் ஆவார் .சமூக சேவையாளரான இவர் எமது கலை நகர் விளையாட்டுக்கழகம் கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றின் ஸ்தாபகர்களில் ஒருவர் ஆவார்.

வாழ்த்துபவர்கள்:
*கலைநகர் விளையாட்டுக் கழக பழைய அங்கத்தவர்கள்.*

(281152)(2.6.7)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர்
க. மகேஸ்வரன் அவர்களின்
அன்புத் தாயார்

**கந்தையா செல்லம்மா**

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும்அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும். பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

(28880)

## 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டும்





மீசாலை மேற்கைச் சேர்ந்த
கமலேஸ்வரன்-தர்ஷா
தம்பதியரின் செல்வப்புதல்வி

**டிலக்ஸ்ணவி**

இன்று [07.12.2012]
வெள்ளிக்கிழமை தனது
பிறந்ததினத்தை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.

இத்துடன் செல்வி 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையும் பாராட்டி பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா - கமலேஸ்வரன், அம்மா - தர்ஷா,
அம்மப்பா - குணம், அம்மம்மா - பூவா,
ஆசைமாமா - குடும்பம், அன்ரா - குடும்பம்.

மீசாலை மேற்கு,
கேணியடி வீதி.
(18070)(5.6.7)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
27.09.1951

மறைவு
06.12.2004

அமரர் கனகசபை சிவபாலன்
(முன்னாள் நிறைவேற்று அதிகாரி, இலங்கை வங்கி,ஊர்காவற்றுறை.)

*அன்பு பொங்கும் எம் தாத்தாவே*
*எட்டு ஆண்டுகள் சென்றதுவோ*
*உங்கள் முகம் கண்டு*
*களங்கமற்ற அன்பும் எதிர்பார்ப்புகள் அற்ற*
*உங்கள் அழகிய மனதும்*
*இனி எப்போதும் யாரிடமும் காணமாட்டோம்.*
*உங்கள் நினைவுகளுடன்*
*நீங்கள் அருகில் இருந்து அளிக்கும் ஆசியுடன்*
*அவனியில் வாழ்கின்றோம்.*

67, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன்

**திசைகாட்டியின் "முத்து மணி காமன்ஸ்"**
**ஆரம்ப விழாவும்.... திசைகாட்டியின் நிர்வாக இயக்குநர்**
**திரு.எஸ்.செல்வராசா**
S.Selvarajh {AICIA - FEDERAL CHARTER) - AIPFM (UK), MFBA (UKI), ASMA (UK), FIAB (UK), MAAT}
**அவர்கள் திசைகாட்டி குழும தலைவராகப் பதவி ஏற்புத் தொடர்பான**



## சிறப்பிதழ்

எம் இளையவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் நோக்கோடு திசைகாட்டி எதிர்வரும் 23.12.2012 முதல் **"முத்து மணி காமன்ஸ்"** என்னும் ஆடை தயாரிக்கும் நிறுவனத்தைச் சிறிய அளவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றது என்பதை மகிழ்வோடு எம்மவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

திசைகாட்டியின் நிர்வாக இயக்குநரும் தொழிலதிபரும் பட்டயக்கணக்காளருமான

**திரு.எஸ்.செல்வராசா** அவர்கள் திசைகாட்டி குழுமத் தலைவராகின்றார்.



**எமது நிறுவனத்தலைவர் பற்றிய அறிமுகக் குறிப்பு:**
**திரு.சின்னத்துரை செல்வராசா**
**ஆரம்பக் கல்வி:- யா/ துன்னாலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை.**
**இடைநிலைக்கல்வி:- யா/ஹாட்லிக் கல்லூரி.**
**தொழிலதிபராக - இயக்குநராக**
South Lanka Garments Pvt Ltd (Ratmalana)
Lalitha Garments Pvt Ltd (Ratmalana)
Switchers Pvt Ltd (Thiyaththalawa)
Thisaikaddi Pvt Ltd (Jaffna).

**மேற்படி சமூக நோக்கோடு கூடிய கைங்கரியம் பற்றிய உங்கள் எண்ணப் பதிவுகளை எதிர்பார்க்கின்றோம்.** T.P.021 221 9016

(26485)(2.6.7)

**திசைகாட்டி குழுமம், 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## அனுதாப அலைகள்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியை செல்வி ந.கேசினியின் (மட்டக்களப்பு) அன்புத் தந்தை

**பொன்னுத்துரை நடராஜமூர்த்தி**

அவர்கள் கடந்த 05.12.2012 அன்று அகாலமரணமடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி. (26492)(2-6-7) - அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## இருபத்தைந்தாவது ஆண்டு நினைவு நாள்

அமரர் வே.த.தணிகாசலம் (அதிபர்)
(குருமாமணி)



மலர்வு
12.09.1928

உதிர்வு
07.12.1987

கல்வியிலே நீங்கள் சிறந்து
கலைகளுக்கு பல வித்திட்டீர்கள்
பக்தியிலே நீங்கள் ஓங்கிப் பாதைகள் பல
வகுத்திட்டீர்கள் - எம்
உள்ளத்திலே நீங்கள் என்றும் ஒளிவிளக்காய்
உள்ளம் உம்மை மறவாதையா

"இராஜஸ்தலம்",
மனோகரர்,
அல்வாய்.
தொ.பேசி : 077 6651223

உங்கள் பாசத்துடன் நினைவு கூரும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

இணையத்தில் சுயமாக வேலை செய்வதற்கு
Part Time Full Time
மாதம் ஒரு லட்சம் (RS 100, 000/=) வரை
Data Entry, Web Designing, Face Book, Copy Typing, Photoshop, C++, Java, Accounting......
உட்பட 300 க்கும் மேற்பட்ட வேலைகள்
ON LINE JOBS International Master Card வேலை விளக்கம்
ACS
Tel : 077 3967334/077 0071835
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100m தொலைவில்
(26420) (2-6)

## கண்ணீர் அஞ்சலி



இ.தனுஜா (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்-சமூக சேவைகள் திணைக்களம்-ஒட்டுசுட்டான்) அவர்களின் தயார்

**திருமதி இராசேந்திரம் இராஜேஸ்வரி**

05.12.2012 அன்று இறைபதம் எய்திய அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம். அத்தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், சமூக சேவை உதவியாளர்கள்.
(21347)(5 6 7)



ஜெய்குருதேவ்
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி
அவர்களின்
வாழும் கலை பயிற்சி
மூச்சுப் பயிற்சி, பிராணாயாமம், சுதர்சன கிரியா, தியானம், யோகா
09.12.2012 ஞாயிறு அறிமுகஉரை
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: பருத்தித்துறை சிவன்கோயில் மண்டபம்
T.P:- 077 9152615, 0779037321
(26490) (2-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பு



மண்ணில்
28.09.1951

விண்ணில்
08.11.2012

அமரர்
**திருமதி.தர்மரட்ணம் சிவபாக்கியம்** (பாக்கியம்)

கடந்த 08.11.2012 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிரியைகள் நாளை(08.12.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச்செய்தி தெரிவித்தோருக்கும் நன்றி நவில்கின்றோம்.

80A,வியாசர்வீதி,தோனிக்கல்,வவுனியா. (24345)(6,7) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கதிரமலை கலியுகவரதன் (கலி)

பலாலியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரமலை கலியுகவரதன் (28.11.2012) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கதிரமலை திருச்செல்வி தம்பதியரின் அன்பு மகனும், பிரேம் குமார், கோகுலன், கோகுலப்பிரியா, சசிகலா, சுலக்ஷனா, நிதர்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளங்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (26479)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தங்கராஜாகுக் செல்வராஜாகுக்

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வவுனியா குருமன் காட்டை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செல்வராஜாகுக் 04.12.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜாகுக் - றோஸ்ராஜமணி தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், றோஸ்மேரி அனற் (பபியி) அன்புக் கணவரும், சேளி, சோபிகா, தயாபரன் (UK), செரின், தர்மிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், டேவிட் தயாபரன் சட்டத்தரணி (UK) அவர்களின் அன்பு மாமனும், தங்கராணி, எட்வேட் டானியேஸ் (UK), காலஞ்சென்றவர்களான யோகராணி, யோகராஜா, குலராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருட்சகோதரி காமன், காலஞ்சென்ற விக்ரர் மற்றும் PP அன்ரனி, கேமன் ஜோசப், யூலியன் (கனடா), கிறிஸ்ரியன் (கனடா), காலஞ்சென்ற வின்சன் மற்றும் எத்தனா (UK), விமலாம்பிகை, மதனிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.12.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு இறம்பைக் குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆம் ஒழுங்கை,
குருமன்காடு, வவுனியா. (24348) (4,5,6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர்களுக்கான கூட்டம் இன்று


யாழ்ப்பாணம், டிசெ. 7

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-8)

advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்



### அல்பேட் சாள்ஸ் மத்தியூஸ்

*(ஓய்வுபெற்ற பிரதம சுங்கப் பரிசோதகர்)*

மன்னாரைப் பிறப்பிடமாகவும் இல - 3, குருசோ வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் சாள்ஸ் மத்தியூஸ் 05.12.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பேட் றெஜினா ராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான எலிசம் பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், றெஜினா (பிரதம உள்ளக கணக்காய்வாளார், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், டவ்னின் ஷிறோ (ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), திறோன் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான யேசுதாசன், பிறின்ஸிலி, ஜொபிற்றா, ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குணரெட்ணம் மற்றும் ரஞ்சினி, ராணி, திலகரெட்ணம், பிறேமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (7.12.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

NO - 3, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (26476)

தகவல் :
**குடும்பத்தினர்.**

### திருமதி இராசேந்திரம் இராஜேஸ்வரி



ஒதியமலை,நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் ஒலுமடு, மாங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் பொன்னாவரசங்குளம்,வவுனியாவை தற்காலிக வதிவிட முகவரியாகவும் கொண்ட இராசேந்திரம் இராஜேஸ்வரி நேற்று முன்தினம்(05.12.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சோமு.இராசேந்திரத்தின் (கச்சேரி,வவுனியா) அன்பு மனைவியும், தனுஜா,(பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்),செந்தூரன், அனுஷா (சுவிஸ்), காலஞ்சென்ற சபேஷன்(கெயார் சர்வதேசம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.12.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராசேந்திரன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாவரசங்குளம்,
வவுனியா. (24346)(5-6-7)

தகவல்:
சோமு.இராசேந்திரம்
(கணவர்).

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### சீனியர் துரைராசா

மண்ணில் : 04.12.1946
விண்ணில் : 16.12.2010

### துரைராசா வரதராணி

மண்ணில் : 13.04.1946
விண்ணில் : 19.11.2011

*ஆண்டு ஒன்று கடந்தாலும்
எம் உயிரோடும் உணர்வோடும்
கலந்துவிட்ட உங்கள் நினைவு என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.*

**சகோதரர்கள்**

சுந்தரி, கிளி, தங்கப்பழம், பாலாம்பிகை,
குஞ்சு, ஜெயா, துரைமணி, தம்பித்துரை,
செல்வராஜா

**பிள்ளைகள்**


ரூபன் குடும்பம்,
இந்திரன் குடும்பம்,
ரூபி குடும்பம்,
கலா குடும்பம்,
அம்பிகா குடும்பம்,

தேவாலய வீதி,
சங்கானை.

[26427][45.6.7]

## மரண அறிவித்தல்

### வின்சன் சுதர்சிங் (ரவீந்திரன்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் இராஜசிங்கம் வீதி, திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வின்சன் சுதர்சிங் 05.12.2012 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.12.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.00 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநகர்,
யாழ்ப்பாணம். (26415)(5-6-7)

தகவல்:
மகன் S.விஜயகாந்
(சுகாதார குழு
தலைவர்,யாழ். மாநகரசபை)

## தவறி விட்டது

சோமசுந்தரம் வீதி, ஆனைக் கோட்டை, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய கந்தையா தங்கவேலாயுதம் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் மருதனார் மடத்துக்கும், ஆனைக்கோட்டைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ. பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 021 492 1856 (26491) (6.7.4)

## கண்ணீர் அஞ்சலி

இல.3,குருசோ
வீதி,சுண்டுக்குளியைச்
சேர்ந்த

**அல்பேட் சாள்ஸ் மத்தியூஸ்**

அவர்களின் பிரிவுச் செய்தி
கேட்டு துயர் அடைவதோடு,
அன்னாரின் குடும்பத்துக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம்.

**நாதன் குடும்பம்.**

55,பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (26421)(5-6-7)

## சீரடிசாயி பாபா திருத்தல யாத்திரையும் ஐந்து ஜோதி லிங்க தரிசனமும்



**நாட்கள் 16+2 யாத்திரீகர்கள் 20 ஆரம்பம் 06.04.2013**

**தரிசிக்கும் இடங்கள் : மும்பாய், ஐந்து ஜோதிலிங்க தரிசனம்**

1.பீமாசங்கர், 2.பார்லிவைத்தியநாதம், 3.அவுண்டநாகநாதம், 4.கிருஷ்ணேஸ்வர், 5.திரியம்பேஸ்வரம், எல்லோராகுகைக்கோவில், நாசிக்கும்பமேளா நடைபெறும் இடம் (12 வருடங்களுக்கு 1 முறை)பஞ்சவடி சிவன், அவுரங்கபாத் (2வது தாஜ்மகால்)சனி சிங்காப்பூர் (பிரசித்தி பெற்ற சனிபகவான் கோவில், சீரடி பாபா, 3 நாட்களுக்கு மேல் தங்கலாம். பூனேவழி சென்னை திரும்பல். சென்னை தங்கி, வடபழனி, மேல்மருவத்தூர், அஸ்டலெட்சுமி, மாங்காடு, திருவேற்காடு, கபாலீஸ்வரர், ஆறுபடை முருகன் (ஒரே இடத்தில்), சீரடிபாபாகோவில். 1 நாள் சொப்பிங். மேலதிகமாக 2 நாட்கள் திருப்பதி அலமேலுமங்கா, ஸ்ரீ காளகஸ்திரி ஆலய தரிசனம் செய்யலாம். (சென்னையில் உணவு சைவ ஹோட்டல்களில்) 19.04.2013ல் சீரடி பாபாவின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெறும் யாத்திரை

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**

கொழும்பிலிருந்து விமான ரிக்கட் இருவழி, 3 வேளை உணவு, இரண்டு வேளை காப்பி, ரீ, சுத்தமான தங்குமிடங்கள், ரூம்கள், ஹோல்கள், இரண்டாம் வகுப்பு உறங்கலிருக்கை, ரயில் சென்னையிலிருந்து மும்பாய் "தனிபஸ்" சீரடியிலிருந்து பூனே வழி சென்னைவரை ரயில். சென்னைவரும் வரை சமயல் செய்தே உணவு வழங்கப்படும். (சமயல் ஆக்கள் கூட வருவார்கள்) திருப்பதி செல்ல தனிவான் ஒழுங்கு செய்து தரப்படும். விருப்பமுடையவர்கள் பாஸ்போட் போட்டோக்கொப்பி ஒன்றும், பாஸ்போட் சைஸ் கலர் புகைப்படம் ஒன்றும் அனுப்பி உடன் பதிவு செய்யவும்.

கட்டண விபரம் கேட்டு அறிந்துகொள்க!

**கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்**
No. 66/2 - 3/2, Joseph Dias Lane, Colombo-15.
Tel : 0777 680102, 0724 - 222989
Web : www.sridevipilgrims.com

யாழ்ப்பாணத்தில்
**B. ராகவன் அவர்கள்**
**சீரடி சாயி மந்திர்**
இல. 314, நாவலர் ரோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
**Tel : 0777 222568**

(26424)(2 6 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார், இ.போ.ச. பஸ்கள் ஒரே நேர அட்டவணையில்

யாழ்ப்பாணம், டிசெ.7

பொது மக்களின் நன்மை கருதி அரச மற்றும் தனியார் பஸ்கள் இணைந்த நேர அட்டவணையின் கீழ் சேவையில் ஈடுபடவுள்ளதாக வடபிராந்திய இ.போ.ச. பிராந்திய முகாமையாளர் எல்.அஸ்கர் அறிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரும் இணைந்து ஒரே நேர அட்டவணையின் கீழ் சேவையில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்கள் நன்மையடையவுள்ளதாக அதன் முகாமையாளர் தெரிவித்தார்.

இந்தச் செயற்திட்டத்தின் முதற்கட்டமாக ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் பாதையில் விசேட நேர அட்டவணையின் கீழான சேவைகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

777 மற்றும் 780 இலக்கப் பாதையூடாக சேவையில் ஈடுபடவுள்ள பஸ்களின் நேர அட்டவணைகள் யாழ். பிராந்திய மற்றும் ஊர்காவற்றுறை பேருந்து நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் ஏனைய இடங்களுக்கும் எதிர்வரும் நாள்களில் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய கல்வி நிறுவக பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாட நெறியின் யாழ்ப்பாண பிராந்திய நிலைய இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய திருமதி **தனலட்சுமி வில்வநாதன்** அவர்கள் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப் பட்டமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவர் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

Best Wishes

விரிவுரையாளர்கள்,
தேசிய கல்வி நிறுவக பிராந்திய நிலையம், யாழ்ப்பாணம்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## லொறி விற்பனைக்கு

TATA - 1109 ரக வாகனம்
லீசிங்குடன் விற்பனைக் குண்டு
தொடர்பு:0215100700
291, பிறவுண் றோட்,
கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்
(26498)(6-7)

## வேலைவாய்ப்பு

தண்ணீர் ஊற்று, ஒட்டுசுட்டான் தொழில் கல்வி நிலையங்களில் அனுபவமுள்ள போதனா ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

1) IT (Computer Application Assistant) - தண்ணீர் ஊற்று.
2) Auto Mobile/Motor Cycle Mechanic - தண்ணீர் ஊற்று, ஒட்டுசுட்டான்.
3) English & Sinhala - தண்ணீர் ஊற்று.

சுயவிவரக்கோவையை 14th Dec 2012 இற்கு முன்பாகக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பலாம். மின்னஞ்சலும் அனுப்பலாம்

The Administrative Officer,
23 - 1/1, Gregory's Road, Dehiwala.
E-mail:- ilead.Colombo@gmail.com
(ஃ/2598) (2-6-7)

## நல்லூர் பிரதேச சபை

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை, பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 07-12-2012 தொடக்கம் 20-12-2012 பி.ப 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 21-12-2012 மு.ப10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 21-12-2012 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற' விலாசத்திற்கு 2ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | செங்குந்தா வீதி, கல்வியங்காடு. | 5500.00 | 500.00 | M09/C10 |
| 02 | வாலையம்மன் வீதி, கல்வியங்காடு | 5700.00 | 500.00 | M09/C10 |
| 03 | திருநெல்வேலி, பாற்பண்ணை 4ஆம் குறுக்கு வீதி. | 7640.00 | 500.00 | M09/C10 |
| 04 | பாரதிபுலம் குறுக்கு வீதி, திருநெல்வேலி. | 6810.00 | 500.00 | M09/C10 |
| 05 | தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. | 11100.00 | 500.00 | M08/C09 |
| 06 | காளி கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு | 15250.00 | 500.00 | M08/C09 |
| 07 | சென்.செபஸ்தியார் குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் | 4050.00 | 500.00 | M10/C10 |
| 08 | மத்திய சனசமூகநிலையம் (RDS) வீதி, கோண்டாவில் வடக்கு. | 2950.00 | 500.00 | M10/C10 |
| 09 | காரைக்கால் வீதி, கோண்டாவில். | 14700.00 | 500.00 | M08/C09 |
| 10 | முனியப்பர் வீதி, கோண்டாவில் | 6850.00 | 500.00 | M09/C10 |
| 11 | முதலி கோயில் வீதி, கொக்குவில் மேற்கு. | 5610.00 | 500.00 | M09/C10 |
| 12 | கலைமகள் வீதி, கொக்குவில் மேற்கு. | 5000.00 | 500.00 | M10/C10 |
| 13 | சைவப்பாடசாலை வீதி, 1ம் குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு | 2230.00 | 500.00 | M10/C10 |
| 14 | பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் மேற்கு. | 13170.00 | 500.00 | M08/C09 |
| 15 | அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு. | 1300.00 | 500.00 | M10/C10 |
| 16 | துறைமுக வீதி, அரியாலை கிழக்கு. | 5920.00 | 500.00 | M09/C10 |
| 17 | சின்னத்தம்பி வீதி, அரியாலை. | 6440.00 | 500.00 | M09/C10 |
| 18 | பொன்னையா 4ஆம், 2ஆம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. | 6070.00 | 500.00 | M09/C10 |
| 19 | சம்பியன் வீதி, குறுக்கு ஒழுங்கை, கொக்குவில். | 4920.00 | 500.00 | M10/C10 |
| 20 | பலாலி வீதி, குறுக்கு ஒழுங்கை, திருநெல்வேலி. | 2250.00 | 500.00 | M10/C10 |
| 21 | உடையார் ஒழுங்கை, கொக்குவில். | 4950.00 | 500.00 | M10/C10 |
| 22 | காரைக்கால் எல்லைச்சுவர், கேற் அமைத்தல் - கோண்டாவில். | 4300.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

(ஃ/3040)(2 6 7)

ப.வசந்தகுமார்,
தவிசாளர்.

## யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

பரிசில் நாள் - 2012

காலம் :- 08.12.2012 சனிக்கிழமை காலை 9மணி
இடம் :- கல்லூரி அரங்கு

தலைமை
திரு.வே.விநாயகமூர்த்தி அவர்கள்
(கல்லூரி முதல்வர்)

இணைத்தலைமை
திரு.கா.கந்தசாமி அவர்கள்
(யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை அதிபர்)

முதன்மை விருந்தினர்
உயர்திரு. மயில்வாகனம் கிருபாசுதன் அவர்கள்
(பழைய மாணவர், பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் செயலகம், வவுனியா)

சிறப்பு விருந்தினர்
உயர்திரு.குமாரசுவாமி சிவானந்தம் அவர்கள்
(பழைய மாணவர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி)

உயர்திரு. கதிர்காமர் திருக்குமார் அவர்கள்
(பழைய மாணவர், உதவிப் பிரதம பொறியியலாளர் கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்.)

பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 05.12.2012 புதன்கிழமை காலமான
**A.C மத்தியூஸ்**
(ஓய்வு பெற்ற பிரதம சுங்க பரிசோதகர், யாழ்ப்பாணம்)
அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**சுங்க உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம்.**
(26495)(2-6-7)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
19.04.1982

இறப்பு
29.11.2010

**தம்பிப்பிள்ளை சுதாகரன்**(அரசன்)

அன்னை மடியில் பிறந்து
வாழ்வின் முன்னேற்றத்துக்காய்
கடல் கடந்து சென்று
இறைவனுடன் சேர்ந்தாலும்
உங்கள் நினைவுகள்
என்றும் எம்முடன்

சகோதரர்கள்.
அளவெட்டி மேற்கு
(26486) (6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகமாகின்றது Android உடன்கூடிய Aocos PX102 Tablet



இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்யும் சீனாவின் Aocos நிறுவனமானது கூகுளின் பிந்திய அறிமுகமான Android 4.1 Jelly Bean இயங்குதளத்துடன்கூடிய Aocos PX102 Tablet - இனை அறிமுகப்படுத்துகின்றது.

10.1 அங்குல அளவு மற்றும் 1280 x 800 Pixel உடைய IPS தொழில்நுட்பத்தில் அமைந்த திரையினைக் கொண்ட இவை 1.6 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Rockchip RK3066 ARM Cortex&A9 Processor ஆல் ஆனவையாகும்.

மேலும் பிரதான நினைவகமாக 1GB RAM - ஐ கொண்டுள்ளதுடன் பிரத்தியேகமான Keyboard ஒன்றும் காணப்படுகின்றது.

16 GB சேமிப்பு வசதியுடன் வெளியாகும் இவற்றில் Bluetooth, Wi&Fi போன்ற வயர்லெஸ் தொழில்நுட்பங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவற்றின் பெறுமதியானது 209 அமெரிக்க டொலர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விரைவில் விண்டோஸ் போன் 7.8-ஐ தரவேற்றம் செய்கிறது மைக்ரோசொப்ட்


முதல் தலைமுறையைச் சேர்ந்த Windows Phone Hardware-ன விண்டோஸ் போன் 7.8 இற்குப் புதிய பதிவேற்றத்தை மைக்ரோசொப்ட் வழங்க உள்ளது.

மக்களின் மிகுந்த எதிர்பார்ப்பை பெற்றுள்ள இந்த புதிய விண்டோஸ் போனை வருகிற 2013 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்ய உள்ளதாக மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது.

இதில் வரவிருக்கும் புதிய வசதிகள் குறித்து மைக்ரோசொப்ட் இன்னும் அறிவிக்கவில்லை.

ஆனால் New Start Screen மற்றும் Lock Screen இருக்கும் என்றும், பிரபலமான விளையாட்டுக்கள் இருக்கும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

# Android சாதனங்களுக்கான புதிய Skype பதிப்பை அறிமுகப்படுத்தியது



உலகில் அதிகளவான மக்கள் தமது நண்பர்களுடன் அரட்டை அடிக்க Skype-யை பயன்படுத்துகின்றனர்.

இந்த நிறுவனமானது கூகுள் தயாரிப்பான Android இயங்குதளத்தில் செயற்படும் சாதனங்களுக்காக Skype 3.0 பதிப்பினை வெளியிட்டுள்ளது.

இப்பதிப்பானது பிரபல்யமான அனைத்து இயங்குதளத்திலும் செயற்படகூடியவாறு காணப்படுவதுடன் முதன்முறையாக Android Tablet - களில் செயற்படக்கூடியவாறு மேம்படுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர Samsung Galaxy Tab 2, Google Nexus %, Acer Iconia, Asus Transformer Prime, Motorola Xoom மற்றும் Sony S போன்றவற்றிலும் நிறுவிப் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழில் விரைவில் வருகிறது டுவிட்டர்


இதுவரையிலும் ஆங்கிலத்திலேயே பார்த்து வந்த டுவிட்டர் பக்கம் தற்போது தமிழில் வர இருக்கிறது.

பெங்காலி, அரபி, பிரெஞ்ச் மற்றும் தமிழ் உட்பட மொத்தம் 16 மொழிகளில் தனது பக்கத்தினை வடிவமைக்க உள்ளது டுவிட்டர். உதாரணத்துக்கு கூகுளில் தமிழ் என்ற பட்டன் இருக்கும், அதனை கிளிக் செய்தால் குறித்த இணையப்பக்கம் முழுவதும் தமிழில் மாறி விடும்.

இதில் சுவாரசியமான விடயம் என்னவென்றால், டுவிட்டர் பக்கத்தை தமிழில் வடிவமைக்கும் வாய்ப்பை தனது பயனாளர்களுக்கே டுவிட்டர் வழங்குகிறது.

அதாவது https://translate.twitter.com/welcome என்ற தளத்துக்கு சென்றால் உங்களுக்கான வார்த்தை கொடுக்கப்பட்டிருக்கும். அதற்கு சரியான மொழிபெயர்ப்பை டைப் செய்து சமர்ப்பிக்க வேண்டும். உதாரணத்துக்கு Welcome நல்வரவு இப்படி பதிவுசெய்யப்படும் வார்த்தைகளில் இருந்து, வாக்கெடுப்பின் மூலம் சிறந்த வார்த்தைகள் தெரிவு செய்யப்படும்.



# புதிய ஐமேக் மேசைக் கணினியை களமிறக்கும் அப்பிள் நிறுவனம்

அப்பிள் நிறுவனம் ஒரு புதிய மெல்லிய ஐமேக் மேசைக் கணினியை களமிறக்கி உள்ளது.

இந்த ஐமேக் 2 வகைகளில் வருகிறது. அதாவது 27 அங்குல அளவில் எல்இடி டிஸ்ப்ளேயைக் கொண்ட ஒரு வகையும் 21.5 அங்குல அளவில் எல்இடி ஐபிஎஸ் டிஸ்ப்ளே கொண்ட இன்னொரு வகையுமாக இரண்டு வகைகளில் வருகிறது. இதில் 21.5 அங்குல வகை இந்த மாதம் விற்பனைக்கு வருகிறது. 27 அங்குல வகை இந்த மாதம் விற்பனைக்கு வருகிறது.

இந்த 21.5 அங்குல ஐமேக்கை அப்பிளின் ஒன்லைன் ஸ்டோரான www.apple.comலும் மற்றும் அப்பிளின் அங்கீகாரம் பெற்ற கடைகளிலும் வாங்கலாம். மேலும் ஐமேக் 27 அங்குல மொடலை வாங்க இப்போதே அப்பிள் ஒன்லைன் ஸ்டோரில் விண்ணப்பிக்கலாம்.

21.5 ஐமேக் 1,299 அமெரிக்க டொலர்களுக்கும் 27 அங்குல மொடல் 1,799 அமெரிக்க டொலர்களுக்கும் விற்பனை செய்யப்பட இருக்கிறது. 27 அங்குல வகை ஐமேக்கில் கோர் ஐ5 அல்லது கோர் ஐ7 புரொசரில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். இந்திய மதிப்பில் 21.5 அங்குல ஐமேக் ரூ.85,900க்கும், 27 அங்குல வகை ரூ.99,990 இற்கும் விற்பனையாகும் என்று தெரிகிறது.

இந்த புதிய ஐமேக் கணினி 3ஜி குவாட்கோர் இன்டல் கோர் ஐ புரோசஸர்களுடன் களம் இறங்குகிறது. இதில் கோர் ஐ7புரொசஸரை அப்க்ரேட் செய்ய முடியும். மேலும் இதில் என்விடியா ஜி இபோர்ஸ் புரொசஸர் மற்றும் 8ஜிபி 1600 மெகாஹெர்ட்ஸ் மெமரி மற்றும் 1டிபி ஹார்ட் ட்ரைவ் உள்ளதால் இந்த ஐமேக் தாறுமாறான வேகத்தில் இயங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஐமேக்கில் வரும் சேமிப்புக்கு பியூசன் ட்ரைவ் என்று அப்பிள் பெயர் சூட்டி இருக்கிறது. இது 128ஜிபி எஸ்எஸ்டி ஹார்ட் ட்ரைவ், 1டிபி அல்லது 3டிபி எச்.டி.டி. அளவைக் கொண்டது. மேலும் இந்த ஐமேக்கில் மைக்ரோ எஸ்டி கார்டு, யுஎஸ்பி போர்ட்டுகள் மற்றும் தண்டர்போல்ட் போர்ட்டுகளும் உள்ளன.

# ஜிமெயில், கூகுள் ட்ரைவ் இணைவு

## பெரிய கோப்புக்களை அனுப்புவதில் புதிய சாதனை

ஜிமெயில் பாவனையாளர்களுக்கு மகிழ்வைத் தரும் செய்தியாக கூகுள் புதிய வசதியொன்றை அறிவித்துள்ளது. இதுவரை மின்னஞ்சல் மூலம் குறைந்தளவு கொண்ட கோப்புக்களையே (உ+ம் 10 MB அல்லது 25 MB) அனுப்ப முடிந்துள்ளது.

பிரபலமான ஜிமெயில் சேவை கூகுளின் மற்றுமொரு சேவையான கூகுள் ட்ரைவுடன் இணைவதாக நேற்று அறிவித்தது அந்தநிறுவனம். இந்தப் புதிய வசதியால் 400 மடங்கு பெரியளவுள்ள கோப்புக்களை மின்னஞ்சல் இணைப்பாக அனுப்பமுடியும். இலவச மின்னஞ்சல் சேவையில் இதுவொரு சாதனையாக கருதப்படுகின்றது. இதன் மூலம் 10GB அளவுள்ள கோப்புக்களை மின்னஞ்சல் இணைப்பாக அனுப்ப முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் அரச பயங்கரவாதம் பிரான்ஸில் திரண்டனர் தமிழர்கள்

## பல்கலை மாணவர் மீதான அடக்குமுறைக்கும் எதிர்ப்பு

கடும் குளிரும் மழையும் கொட்ட பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் பிரான்ஸில் ஒன்றுகூடி பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவமும், தேசவிரோதக் குழுக்களும் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசியல் பயங்கரவாதத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரெஞ்சு மொழியில் பதாகைகளும், துண்டுப் பிரசுரங்களும் இளையோர் மீதான, இலங்கை இராணுவத்தின் கெடுபிடிப் படங்களைத் தாங்கி நின்று தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.



இந்த ஆர்ப்பாட்டம் அந்த வழியில் சென்ற மக்களின் கவனத்தைத் திருப்பியது. பலர் அங்கு வந்து இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளைக் கேட்டறிந்து போராட்டத்துக்குத் தமது ஆதரவையும் தெரிவித்தனர்.

இலங்கை அரசின் அடக்குமுறை பல்கலைக்கழக மாணவர்களுடன் நிற்கவில்லை, நான்கு பேரைக் கைது செய்து, ஒருவரை விடுதலை செய்வது போல் முகம் காட்டி விட்டு, மீண்டும் தமிழர்கள் பலரைக் கைது செய்திருக்கிறது இராணுவம்.

ஐ.நா. சபை இலங்கையில் போர் நடந்த போது மக்களைக் காக்கத் தவறியதை ஒத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ்ப் பகுதியில் தமிழர்கள் சுதந்திரமாகத் தமது மண்ணுக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த பிள்ளைகளுக்கு செய்யவேண்டிய மரியாதையைச் செலுத்த முடியாத நிலை உள்ளது.

சுதந்திரமற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்களிடையே பல்கலைகழக மாணவர்கள் எடுத்திருக்கிறது. இதற்கு என்ன செய்யப் போகிறது ஐ.நா.

நாம் தமிழர்கள், வெகுஜன போராட்டங்களை தொடர்ச்சியாக நாம் வாழும் நாடுகளில், எமது நாட்டில் உள்ள மக்களுடன் அவர்களுக்காக எடுத்துச் செல்ல வேண்டிய காலம் இது.

அந்த அடிப்படையில் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை மாலை பிரெஞ்சு நாடாளுமன்றம் முன் மீண்டும் ஒன்று கூடி, இலங்கை அரசைச் சர்வதேசம் குற்ற நாடாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும்-

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகச் சர்வதேசத்தில் அங்கீகாரம் வழங்கி தமிழர்கள் பாதுகாக்கும் கடமையை இதே ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் எடுக்கவேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துவோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் முக்கிய ஐந்து நாடுகளில் ஒன்றான பிரான்ஸிடம் நீதி கேட்போம். சர்வதேச சட்டங்களை வலியுறுத்த, எமது மக்களின் படுகொலைக்கும் இன்று தொடர்ந்து நடைபெறும் கைதுகளைத் தடுத்து நிறுத்த குரல் கொடுப்போம்.

இன்று நாம் ஆரம்பித்த போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்று பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் பிரான்ஸில் உள்ள சகல அமைப்புக்களும் அழைப்பு விடுத்திருக்கின்றன. (3)

## கிணற்றில் தவறி வீழ்ந்து சாவு

யாழ்ப்பாணம்,டிசெ.7

கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த முன்பள்ளி ஆசிரியை ஒருவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்தார். செவ்வாய்க் கிழமை காலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த கணேசபிள்ளை குணாளினி (வயது-32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்ட இவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் மரணமானார். (ம-8)

## கணினி வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் உருவாக்குநர் கைது



பிரபல கணினி வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் உருவாக்கியவரான ஜோன் மெக்பீ குவாத்தமாலாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குவாத்தமாலாவுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசியல் புகலிடம் பெறும் நோக்குடன் குவாத்தமாலாவுக்குள் அவர் பிரவேசித்துள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அயலவர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் மெக்பீயை பொலிஸார் விசாரணை செய்து வந்த நிலையில், அவர் குவாத்தமாலா நாட்டுக்குள் பிரவேசித்துள்ளார். எனினும், தம் மீதான இந்தக் குற்றச்சாட்டினை ஜோன் மெக்பீ நிராகரித்துள்ளார். (வ)


## சூரிய மண்டலத்தில் புதிய பகுதி கண்டுபிடிப்பு

விண்வெளிக்கும், நட்சத்திர கூட்டத்துக்கும் இடையேயான பகுதியை நாசாவின் வாயேஜர்-1 விண்கலம் கண்டுபிடித்துள்ளது. கிரகங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவின் நாசா மையம் வாயேஜர்-1, வாயேஜர்-2 என்ற விண்கலங்களை கடந்த 1977ஆம் ஆண்டு விண் ணில் செலுத்தியது. தற்போது இந்த விண்கலங்கள் சூரிய மண்டலத்தில் ஊடுருவி பயணம் செய்து வருகின்றன.

இந்த நிலையில் வாயேஜர்-1 என்ற விண்கலம் சூரிய மண்டத்தில் புதிய பகுதியொன்றைக் கண்டுபிடித்துள்ளது. இது விண்வெளிக்கும், நட்சத்திர கூட்டத்துக்கும் இடைப்பட்ட பகுதியாகும்.

இந்தப்பகுதியின் கண்டுபிடிப்பு நாசா விஞ்ஞானிகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் இது வரையிலும் இந்தப்பகுதியை எந்தவொரு விண்கலமும் கண்டுபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## சிக்கியது இராட்சத மீன்...



உடப்பு, முத்துபந்தி கிராம மீனவர்களினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இராட்சத மீன் ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 23 அடி நீளமும் 8 அடி அகலமும் கொண்ட இந்த மீன் 1,000 கிலோ கிராம் நிறைக்கு மேற்பட்டதாகக் காணப்படுகின்றது.(வ)

## இறைவன் அருளைப் பெற

நம் ஐம்புலன்களுக்கும் எட்டாத அற்புதமான சக்தி ஒன்று உண்டு. அது எங்கும் நிறைந்துள்ளது; எல்லாமாக விளங்குகிறது. எல்லா உயிர்களுக்கும் உயிராய் விளங்குகிறது. இந்தச் சக்தி ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதி. இது எள்ளில் எண்ணெய் மறைந்திருப்பது போல் எல்லாப் பொருள்களிலும், உயிரிலும் மறைந்து விளங்குகிறது. இது ஐம்புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதது. வார்த்தைகளால் விளக்க முடியாதது. இதையே இறைவன் என்கிறோம். தேனைப்பற்றிப் படிப்பதாலோ, அறிவதாலோ என்ன பயன்? சுவைத்துப் பார்க்காவிட்டால் தேனின் சுவையை முழுமையாக அறியமுடியாது அல்லவா? இறைவனும் அப்படிப்பட்டவன் தான்.



இறைவனின் அருள் கிடைத்தால் தான் இறைவனை நாம் அறிய முடியும். ''அகம் புகுந்தார் அடியேற்கு அருளாலே'' என்கிறார் திருமூலர். ''நம் அறிவுக்கு அப்பாற்பட்ட இறைவன், எண்ணத்துக்கும் எட்டாத இறைவன்.

பக்தி என்னும் வலையை வீசினால் அதில் அகப்படுவான்'' என்கிறார் மணிவாசகப் பெருமான். இவ்வாறு இறைவன் மீது அன்பு காட்டும் நெறியே பக்தி நெறியாகும். பக்தியால் பரமனை அடைவது என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது. நாம் இறைவன் மீது செலுத்தும் பக்தியின் மூலம் இறை அருளைப் பெறலாம்.

நன்றி: ஞானச்சுடர்

# மாணவர்களின் பாதுகாப்பை வலியுறுத்தி நான்கு நாடுகளின் தூதரகங்களில் மனு

## பிரிட்டன் தமிழ் இளையோர் நடுவம் கையளித்தது

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான இலங்கை அரசின் வன்முறைத் தாக்குதல், மற்றும் கைது நடவடிக்கைகளில் சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அமெரிக்கா, கனடா, நோர்வே, இந்தியா ஆகிய தூதரகங்களில் மனு ஒன்றைக் கையளித்தது பிரிட்டன் தமிழ் இளையோர் நடுவம்.

பிரிட்டன் தமிழ் இளையோர் நடுவத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்ட மனுவில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டின் அவசியமும், இலங்கை அரசின் இனவெறித் தாக்குதலும், மாணவர்கள் மீது தொடரும் கைதுகள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், தூதரக அதிகாரிகளுடனும் இது தொடர்பாக, பிரிட்டன் தமிழ் இளையோர் நடுவத்தால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும்ஐக்கிய நாடுகள் சபை இந்தவிடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து பிரசாரத்தையும் நேற்று முன்தினம் பிரிட்டன் தமிழ் இளையோர் நடுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற் கட்டமாக பிரிட்டன் தமிழ் இளையோர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட உறவுகளிடம், அவர்களின் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. அது மட்டுமல்லாது அந்தப் பகுதியில் உள்ள வெள்ளை இனத்தவர்களின் கையெழுத்துக்களும் சேகரிக்கப்பட்டன. அங்கு சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் அனைத்தும் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டப் போட்டி ஆரம்ப நிகழ்வு நேற்று




யாழ்ப்பாணம்,டிசெ. 7

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நீண்ட காலத்துக்குப் பின்னர் பாடசாலை 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் சிவனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றன.

ஆரம்ப நிகழ்வில் முதலில் மானிப்பாய் பிரதேச சபை முன்றலில் இருந்து விருந்தினர்கள் மற்றும் வீரர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பாண்ட் வாத்திய இசையுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் பா.விக்னேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தின் கொடியினை அதன் தலைவர் சிவனேஸ்வரன் ஏற்றிவைத்தார். ஆரம்ப நிகழ்வில் போட்டியில் பங்குபற்றும் கல்லூரிகளின் அதிபர்கள் மற்றும் கல்வித் துறை உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(த-23-130)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்சகன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு பெறவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணிக்கு**

ஏ.பி.சி. விளையாட்டுக்கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

(23)

# கிரிக்கெட் போட்டி

கிளிநொச்சி, டிசெ.7

அகில இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் 13 வயதுப் பிரிவு 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையயில் நடத்தும் கிரிக்கெட் போட்டியொன்று இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-6)

# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.7

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான 12 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கல்வி அமைச்சு அணியை எதிர்த்து பிரதம செயலாளர் கொத்தணி அணி மோதவுள்ளது. (23)

# நேற்றைய ஆட்டங்களில் வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் 19 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களை அடித்தால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தர்விர்ப்பு உதைகள் வாங்கப்பட்டன. இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் இரு அணியினரும் எதுவித கோலையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.ஆட்டம் வெற்றிதோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 4:3 எனற் கோல்க் கணக்கில் வெற்றிபெற்றது. மகாஜனக் கல்லூரிக்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியால அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணி 2:1 என்ற கோல்க்கணக்கில் வெற்றிபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலாவது இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டன.

இதில் ஸ்ககந்தவ ரோதயக் கல்லூரி அணி 3:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யூனியன் கல்லூரி அணி 1:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றியீட்டியது.

யாழ். மத்திய கல்லூரிக்கும், யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 5:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றியீட்டியது.

(த-23-130)

# சாதனை புரிந்த மாணவிகளுக்கு அலரி மாளிகையில் கௌரவிப்பு




யாழ்ப்பாணம், டிசெ.7

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் சாதனை புரிந்த வீர, வீரங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.இதில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 19 வயது,21 வயது பிரிவு பெண்களுக்கான கோல் ஊன்றி பாய்தல் நிகழ்வில் புதிய சாதனை புரிந்த அளவெட்டி அருணோதய கல்லூரி மாணவிகளான அ.பவித்திரா எஸ்.தனுஷா ஆகியோருக்கு அம்பந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும், விருதினையும் வழங்கி கௌரவித்தார். இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்த அளுத்கமகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-23)

# காலிறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் காலிறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**காலை 8 மணி**

சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**காலை 9 மணி**

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மகாஜனக் கல்லூரி.

**மு.ப 10 மணி**

★ சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி

**மு.ப 11 மணி**

★ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி.

காலிறுதியாட்டங்களில் வெற்றி பெறும் அணிகள் பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் அரை இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

(த-23-130)

# மாநகரசபை அணிகள் இறுதி ஆட்டத்துக்கு

## இறுதிப் போட்டியில் மாநகரசபை 'ஏ' அணியும், 'பி' அணியும் மோதவுள்ளன

பண்டத்தரிப்பு,டிசெ.7

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்குப் பிரதேச சபையினரால் நடத்தப்பட்ட யாழ்.மாவட்ட ரீதியிலான உள்ளூராட்சி மன்றங்களிடையே 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென் பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ்.மாநகரசபை கிரிக்கெட் அணி ஆதிக்கம் செலுத்தியுள்ளது. சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் மாநகர சபை 'ஏ' அணியும், 'பி' அணியும் பங்குபற்றவுள்ளன.

இந்தச் சுற்றுத் தொடரில் யாழ்.மாநகரசபை 'ஏ', 'பி' அணிகள், நல்லூர் பிரதேச சபை'ஏ','பி' அணிகள், வலிகாமம் தெற்குப் பிரதேச சபை அணி, வலிகாமம் வடக்கு பிரதேச சபை அணி, வேலணை பிரதேச சபை அணி, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அணி ஆகியன இடம்பெற்றிருந்தன.

போட்டிகள் கடந்தவாரம் தொடக்கம் கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் மிகச் சிறப்பாக விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன.

முன்னதாக நடைபெற்ற முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபை அணியை எதிர்த்து யாழ்.மாநகரசபை 'பி' அணி மோதியது. இதில் யாழ்.மாநகரசபை 'பி' அணி வெற்றி பெற்ற முதலாவது அணியாக இறுதிப் போட்டிக்கு நுழைந்தது. மற்றுமொரு அரை இறுதி ஆட்டத்தில் யாழ்.மாநகர சபை'ஏ'அணியும் நல்லூர் பிரதேச சபை 'ஏ' அணியும் மோதிக் கொண்டன. இந்தப் போட்டியில் யாழ்.மாநகரசபை 'ஏ' அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்தப் போட்டிகளில் அனைத்து உள்ளூராட்சி மன்ற அணிவீரர்களும் திறமையாகச் சிறப்பாகக் குறித்த நேரத்தில் கலந்துகொண்டமை சிறப்பான அம்சமாகும்.

(த-86-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் காட்டுகிறது இங்கிலாந்து





இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள்ஆட்டத்தின் முடிவில் இங்கிலாந்து அணி முழுமையான ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தனது முதலாவது இன்னிங்ஸில் ஆடி வரும் இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 216 ஓட்டங்களைக் குவித்துள்ளது. தனது முதலாவது இலக்குக்காக 165 ஓட்டங்களைப் பகிர்ந்த இங்கிலாந்து அணி, அதன் பின்னரும் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி பலமான நிலையை அடைந்துள்ளது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்ரெயர் குக் ஆட்டமிழக்காமல் 136 ஓட்டங்களையும்,நிக் கொம்ப்ரன் 57 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

அலஸ்ரெயர் குக்கின் நேற்றைய சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி சார்பாக அதிக டெஸ்ட் சதங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார். இதுவரை மூன்று இங்கிலாந்து வீரர்கள் அதிக பட்சமாக 22 சதங்களை அடித்ததே சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையை முறியடித்து தனது 23ஆவது சதத்தை குக் நேற்று அடித்தார். இதனால் அதிக சதங்கள் அடித்த இங்கிலாந்து வீரராக அவர் இடம்பிடித்தார்.

இந்தியா சார்பில் பிரக்ஜான் ஒஜா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் நாள் ஆட்ட நிறைவில் 7 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி நேற்று 316 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. சிறப்பாக ஆடிய டோனி, இறுதி இலக்காக ஆட்டமிழந்தார்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக சச்சின் டெண்டுல்கர் 76 ஓட்டங்களையும், கௌதம் கம்பீர் 60 ஓட்டங்களையும், மகேந்திரசிங் டோனி 52 ஓட்டங்களையும், யுவராஜ் சிங் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொன்ரி பனேசர் 4 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன் 3 இலக்குகளையும், கிரேம் ஸ்வான், ஸ்டீவன் ஃபின் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.(ங)

# இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு தடை

**சர்வதேச ஒலிம்பிக் சபை நடவடிக்கை**

இந்திய மத்திய அரசு விளையாட்டு விதிகளின் படி செயல்பட்ட, இந்திய ஒலிம்பிக் சங்கத்தை (ஐ.ஒ.ஏ.), சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஒ.சி.) தடை செய்தது. ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் புதிய விளையாட்டு விதியின் படி, இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு (ஐ.ஒ.ஏ.) நேற்றுமுன்தினம் தேர்தல் நடத்தப்பட்டது. இதை, எதிர்த்த ஐ.ஒ.சி., சர்வதேச ஒலிம்பிக் விதிகளின் படி தான் தேர்தல் நடத்த வேண்டும் எனவும், கொமன்வெல்த் ஊழலில் சிக்கி சிறை சென்ற கல்மாடி, வி.கே.வர்மா, லலித் பனோட் ஆகியோர் போட்டியிடக் கூடாது எனவும், மீறினால் ஐ.ஒ.ஏ. வை தற்காலிமாக தடை செய்வோம், எனவும் எச்சரித்தது.

இவற்றை ஐ.ஒ.ஏ. கண்டு கொள்ளவில்லை. தொடக்கத்தில் இருந்தே, மத்திய அரசு விதிப்படி தேர்தலை நடத்த ஏற்பாடு செய்தது. ஐ.ஒ.சி. விதியை எதிர்த்து, தேர்தல் பார்வையாளராக நியமிக்கப்பட்ட முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி ஒய்.குரேஷி, பதவியை ராஜினாமா செய்தார்.

இதனிடையே தலைவர் பதவிக்கு போட்டியிட்ட ரந்திர் சிங், உள்ளிட்ட பலர் வேட்புமனுவை திரும்ப பெற்றுக் கொண்டனர். தலைவராக அபய் சிங் சவுதாலா, துணைத்தலைவர் வீரேந்திர நானாவதி, பொருளாளராக ராமச்சந்திரன் ஆகியோர் போட்டியின்றி தேர்வாகினர்.

இவை அனைத்தையும் விட, பொதுச்செயலராக கொமன்வெல்த் ஊழலில் சிறை சென்ற லலித் பனோட் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். இவரது தேர்வு, ஐ.ஒ.சி.க்கு கோபத்தை ஏற்படுத்தியது.

நேற்றுமுன்தினம் சுவிட்சர்லாந்தின் லாசனேயில் ஐ.ஒ.சி.,யின் தலைமை அதிகாரிகள் கூட்டம் தொடங்கியது. ஐ.ஒ.சி., விதிகளை ஏற்காத, ஐ.ஒ.ஏ.,வுக்கு, தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டது. முறைப்படியான அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

தடை காரணமாக ஐ.ஒ.ஏ.,வுக்கு ஐ.ஒ.சி., சார்பில் வழங்கப்பட்டு வந்த நிதியுதவிகள் நிறுத்தப்படும். சர்வதேச ஒலிம்பிக் சங்கம் நடத்தும் எந்த போட்டியிலும், இந்திய வீரர், வீராங்கனைகள் தேசியக் கொடியுடன் பங்கேற்க முடியாது. ஐ.ஒ.சி., கொடியுடன் இவர்கள் பங்கேற்கலாம்.

**துரதிர்ஷ்டமான முடிவு**

தடை குறித்து இந்திய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் ஜிடேந்திரா சிங் கூறுகையில், இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு (ஐ.ஒ.ஏ.) தடை விதித்தது துரதிர்ஷ்டமான முடிவு. பிரச்சினை ஏற்பட்டவுடன் நாங்கள் ஐ.ஒ.சி.,க்கு கடிதம் எழுதினோம். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை, என்றார்.

**காரணம் யார்**

ஐ.ஒ.ஏ. தற்காலிகத் தலைவர் வி.கே.மல்கோத்ரா கூறுகையில், உயர்நீதிமன்ற உத்தரவுப் படி தேர்தலை நடத்துவதைத் தவிர, எங்களுக்கு வேறு வழியில்லை. தடை விதிக்க வாய்ப்பு இருப்பது குறித்து கடந்த நவம்பர் 23 இல் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கூறினோம். ஆனால், எவ்வித பதிலும் இல்லை. இப்போதைய நிலைக்கு மத்திய அரசு தான் பொறுப்பு. மத்திய அரசு, ஐ.ஒ.சி., மற்றும் ஐ.ஒ.ஏ., என்று அனைவரும் இணைந்து பிரச்சினைக்கு தீர்வு கண்டால், தடை நீக்கப்படலாம், என்றார். (5)

# ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டிக்கான ஆஸ்திரேலிய டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், இரண்டு 20/20 சர்வதேசப் போட்டிகள் ஆகியவற்றில் பங்குகொள்ளவுள்ளது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்தநிலையிலேயே முதலாவது டெஸ்ட் போட்டிக்கான 12 பேர் கொண்ட ஆஸ்திரேலிய டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தென்னாபிரிக்காவுக்கெதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியின் பின்னர் ஓய்வுபெற்ற றிக்கி பொண்டிங்குக்குப் பதிலாக பிலிப் ஹியூஸ் சேர்க்கப்பட்டுள்ளார். 24 வயதான பிலிப் ஹியூஸ், ஆஸ்திரேலியா சார்பாக இதுவரை 17 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். மோசமான ஆட்டத்திறன் காரணமாக ஆஸ்திரேலிய அணியிலிருந்து நீக்கப்பட்ட அவர், தற்போது பொண்டிங்குக்கு பதிலாக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். றிக்கி பொண்டிங்கின் இடத்திற்கு பிலிப் ஹியூஸ், உஸ்மான் கவாஜா, ரொப் குவைனி, அலெக்ஸ் டூலன் ஆகியோர் கருத்திற் கொள்ளப்பட்டதாகத் தெரிவித்த ஆஸ்திரேலியப் பிரதம தேர்வாளர் ஜோன் இன்வெராரிற்றி, அண்மைக்காலமாக பிலிப் ஹியூஸ் சிறப்பாக ஆடி வந்த நிலையில் அணியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அறிவிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலிய அணி:

மைக்கல் கிளார்க், ஷேன் வொட்சன், எட் கொவான், பென் ஹில்பண்ஹோஸ், பிலிப் ஹியூஸ், மைக்கல் ஹசி, மிச்சல் ஜோன்சன், நேதன் லையன், பீற்றர் சிடில், மிற்சல் ஸ்ரார்க், மத்தியூ வேட், டேவிட் வோர்ணர்.

(ங)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டெழுந்தது தீவுகள்



பங்களாதேஷுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட தொடரின் 3ஆவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

பங்களாதேஷில் மிர்புரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49.1 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்குக் காக 57 ஓட்டங்களைப் பகிர்ந்த அந்த அணி, அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்து 4 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களையும், 7 இலக்குகளைஇழந்து 171 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மகமதுல்லா 52 ஓட்டங் களையும், முஷ்பிஹீர் ரஹீம் 38 ஓட்டங்களையும், அனாமுல் ஹக் 33 ஓட்டங்களையும், சொஹக் கஷி 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக சுனில் நரைன் 37 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், வீரசாமி பெருமாள், டெரன் சமி ஆகியோர் தலா 2 இலக்குகளையும், கிறிஸ் கெயில், டுவைன் ஸ்மித் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

228 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 47 பந்துப்பரிமாற்றத்தில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்கை 15 ஓட்டங்களுக்கே இழந்த போதிலும், மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு கட்டத்தில் ஒருஇலக்கை இழந்து 126 ஓட்டங்களுடன் காணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களுடன் தடுமாறியது. ஆனால் அனுபவ வீரரான மார்லன் சாமுவேல்ஸ் மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றியை உறுதி செய்தார்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 126 ஓட்டங்களையும், கெரன் பவல் 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக அப்துர் ரஷாக், மஷ்ரபி மோர்ட்ரஷா ஆகியோர் தலா 2 இலக்குகளையும், மஹமதுல்லா, நயீம் இஸ்லாம் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக மார்லன் சாமுவேல்ஸ் தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட தொடரில் மூன்று போட்டிகளில் நிறைவில் பங்களாதேஷ் அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.(ங)


பிரத்தியேக குழு வகுப்புக்கள்
விஞ்ஞானம்
தரம் 10 ,11
E.J.K.யுபன்
0776913190
(26499)(6-7)

வங்கியியல் கற்கை நெறி
CBF, DBF இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில் மேலும் ஒரு புதிய பிரிவு
ஆரம்பம்: 08.12.2012
தொடர்புக்கு:
K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அருகில்.
T.P 0774598430 (26379)

நிரு கல்வி நிலையம் கோண்டாவில்
கல்வியாண்டு 2013
தரம் 3 முதல் 11 வரை
ஆரம்பம் 9.12.2012
(ஞாயிறு காலை 6 மணி)
பெற்றோர்களுடன் வந்து அனுமதிகளைப் பெறவும்.
(26464)

THE SCIENCE CORNER
Colock tower - Lane - Jaffna
CHEMISTRY (Day Class)
ஆரம்பம் 8.12.2012 சனி முதல்
சனி, ஞாயிறு 10.00 - 11.30
செவ்வாய் 3.00 - 4.30
By- சிவகுமார்
(c/3041)(3.14)

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கும்
அதன் உப நிறுவனங்களுக்கும்
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலரும்
விண்ணப்பிக்கலாம்.
45 வயதுக்குட்பட்டவர்கள்
விரும்பத்தக்கது.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தங்களின்
சுயவிவரக் கோவையினை
10.12.2012 திங்கட்கிழமை
அல்லது அதற்கு முன்னர்
நேரில் அல்லது தபாலில்
கீழுள்ள முகவரிக்கு
சேர்ப்பிக்கவும்.

"உதயன் பணிமனை"
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

SHAMROCK ACADEMY
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
1988 - 2013
புதிய ஆண்டில் 25 வருட கல்வி சேவையில் காலடி பதிக்கின்றது.
புதிய கல்வியாண்டு -2013
ஆரம்பம் 08.12.2012 8.00am
Gr. 1முதல் 11 வரை
English Medium Classes
Gr. 6 To 11
English Literature
Gr. 10 - 11
* சிங்களம் & I.C.T
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(26458)(6.9)

25வது வருட கல்விச் சேவையில்....
புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
புதிய கல்வியாண்டு - 2013
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் : 09-12-2012 ஞாயிறு 9.00மணி
அனுமதிகள் இன்று முதல்...

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9மணி முதல் மாலை 5மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772)(15-14)

கணினி மலிவு விற்பனை
Intel Dual Core Full Set
(200GB, 2GB Ram, 19" LED Monitor, DVD wr)
Free: WebCam/ 8GB Pendrive/ Head Phone
3 வருட உத்தரவாதம்
41500/=

St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
2224865 / 0750698608
(சத்திர சந்திக்கு அருகில்)
HP i3, i5, Loptop Available
(14 வருட சேவையில்)

கிராம சேவகர் மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்கு
யாழ். நகரில்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில்
ஒவ்வொரு சனியும்
12.30மணி
நெல்லியடியில்
வரி ... நிலையத்தில்
திங்கள்3.00மணி
கிளிநொச்சியில்
... கல்லூரியில் புதன்
(12/12), வியாழன்
(13/12) காலை
8.30-3.00 மணிவரை
தொடர்பு: 0754164564
(c/3019)(7.6)

40 வருட கல்விச் சேவையில் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி,யாழ்.
6 தொடக்கம் தரம் O/L வரை
புதிய கல்வியாண்டு 2013
தரம்வாய்ந்த தன்னிகரில்லா ஆசிரியர்குழாம்
கணிதம்- விக்கி, ரூபன் /விஞ்.-தேவா, நிரோஜன் /
ஆங்.- விஸ்வநாதன், செல்வரட்ணம் /தமிழ்- சபேஷன், சசிரூபன் /வரலாறு- பார்த்தீபன், கமல் / சமயம்- N.T.தரன், சசிரூபன் / புவியியல்- கமல்
ஆரம்பம் - 10.12.2012 மு.ப 10 மணி
அனுமதிகள் இன்று முதல்
c/3025)

விளையாட்டுச் செய்தியாளராக நீங்களும் விரும்புகிறீர்களா...?
உதயனின் விளையாட்டுச் செய்தியாளராக உங்களுக்கு விருப்பமா?
துடிதுடிப்பான இளைஞர், யுவதிகளை இதற்காக எதிர்பார்க்கின்றோம்
ஆர்வமுள்ளவர்கள் நாளை சனிக் கிழமை 08.12.2012 மு.ப. 10.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை நேரில் வரவும்
உதயன் வெளியீட்டகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஞானோதயம் ஆசிரியர்களின் தரம் 5 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
காலம்: 2012.12.10 திங்கள் பி.ப 4.15
இடம்: 18/4/1, சீனியர் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
(கலட்டி அம்மன் கோயிலுக்கு அருகில்)
வகுப்பு நேர அட்டவணை
திங்கள், புதன் - பி.ப 4.15 - பி.ப 6.15 வரை
சனி, ஞாயிறு - மு.ப 8.00 - மு.ப 10.00 வரை
திறன் விருத்தி மற்றும் மாதிரிப் பரீட்சைகள் பி.ப 4.00 - 6.00 வரை.
விடுமுறைக் கால விசேட வகுப்புக்களும் நடைபெறும். அனுமதிகளை மேற்குறிப்பிட்ட முகவரியில் உடன் பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு: S. திலக் - 0774687930
S.வினோத்குமார் - 0776121016
நேற்றைய விளம்பரத்தில் 2013.01.10. திங்கள் ஆரம்பமாகும் என்பது தவறானதாகும்.
(26475)

ஐடியல் அக்கடமி
(26435)(9.14)

| தலைமையகம் | கிளை |
|---|---|
| சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்து மைதானம் அருகில்) |
| தரம் 6 முதல் O/L, A/L வரை அன்றும் இன்றும் என்றும் எங்கள் சேவை தொடரும் | தரம் 6, 7 ஆங்கிலமொழிமூல வகுப்பு தரம் 6 முதல் O/L வரை தமிழ் மொழிமூல வகுப்புக்கள் |

ஆரம்பம்- 10.12.2012 திங்கள்
சண்டிலிப்பாய் : 1.00 pm, யாழ்ப்பாணம் : 11.00 am
கணித ஆசானும், நிர்வாகியும் V.N.பத்மநாதன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.